இரண்டாம் பதிப்பு

விலை: 20
பக்கங்கள்: 28

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 32
கதிர் 272
ஆவணி 9ஆம் நாள்
வெள்ளிக்கிழமை
25 ஒகஸ்ட் 2017
வள்ளுவர் ஆண்டு 2048


‘என்னை நீக்கும் அதிகாரம் உங்களுக்கு இல்லை’

## முகத்திலடித்தாற்போல டெனீஸ் முதலமைச்சருக்கு நேற்றுக்கடிதம்

யாழ்ப்பாணம், ஒக. 25
“என்னை அமைச்சுப் பதவியிலிருந்து நீக்குவதாக அறிவிக்க உங்களுக்கு (முதலமைச்சருக்கு) அதிகாரமில்லை. நானே இப்போதும் அமைச்சுப் பதவியில் தொடர்கின்றேன். அதில் தலையீடு செய்வதிலிருந்து விலகியிருங்கள்”
இவ்வாறு வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு நேற்றுக் கடிதம் அனுப்பியுள்ளார்.
அமைச்சரவையில் வெற்றிடம் ஏற்படவில்லை என்றும் தானே அமைச்சராகத் தொடர்கிறார் என்றும் வடக்கு மாகாண ஆளுநர் குரேக்கும், அமைச்சர் பா.டெனீஸ்வரன் நேற்றுக் கடிதம் அனுப்பி

>> 25

வடக்கு மாகாண அமைச்சர்கள் விவகாரத்தில்

## முடிவுக்கு வராத குழப்பம்!


முச்சந்தி முரளி




### குணசீலன் மீது கட்சி நடவடிக்கை பாயும் அனந்தியின் எதிர்காலமும் கேள்விக்குறி

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 25
வடக்கு மாகாண அமைச்சரவைக் குழப்பங்கள் இப்போதைக்கு முடிவுக்கு வராது என்பது உறுதியாகியுள்ளது. புதிய அமைச்சரவையில் உள்ள இருவரின் பதவிகள் அந்தரத்திலேயே தொங்கிக் கொண்டிருக்கின்றன.
சுகாதார அமைச்சராக நியமிக்கப்பட்ட ஜி.குணசீலனுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று ரெலோவின் செயலாளர் ந.சிறிகாந்தா அறிவித்துள்ளார்.
“டெனீஸ்வரனுக்கு

>> 06



### இளைஞனின் தலையை துண்டாடியது ரயில்

*சுன்னாகத்தில் கோரம்*

யாழ்ப்பாணம், ஒக.25
காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தொடருந்து மோதி இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.
இந்தச்சம்பவம் நேற்று மாலை சுன்னாகம் தொடருந்து நிலையத்துக்கு அண்மையில் நடந்துள்ளது.
தொடருந்து மோதியதில் இளைஞரின் தலை துண்டா

>> 25

## அடுத்த அமைச்சர் எப்போதுவருவார்?

### புதியவருக்கு வந்த சோதனை

யாழ்ப்பாணம், ஒக. 25
“நான் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளேன். சிறிது நேரத்தில் அமைச்சுக்கு வருவேன். தயாராக இருங்கள்” என்று புதிதாக நியமிக்கப்பட்ட அமைச்சர் ஒருவர் அமைச்சுச் செயலாளருக்கு கூற, அந்த அமைச்சுச்செயலாளரோ, “அப்ப அடுத்த

>> 24

## இராணுவச் சிப்பாய்கள் இருவர் மீது வாள்வெட்டு

### கிளிநொச்சியில் நேற்றிரவு பயங்கரம்

கிளிநொச்சி, ஒக. 25
கிளிநொச்சியில் இராணுவச் சிப்பாய்கள் இருவர் மீது நேற்றிரவு வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. படுகாயமடைந்த அவர்கள் இருவரும் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

>> 25

## ஊத்தை பவான் மட்டுமல்ல தூள் பவானும் புளொட்தான்

உள்வீட்டு இரகசியங்கள் கசிகின்றன

>> 25

### பாழுங் கிணற்றில் பெண்ணின் சடலம்

*சித்தன்கேணியில் மீட்கப்பட்டது*

யாழ்ப்பாணம், ஒக.25
யாழ்ப்பாணம், சித்தன்கேணியில் பாவனையற்ற கிணறு ஒன்றில் இருந்து பெண் ஒருவரின் சடலம் நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டது.
அந்தப் பகுதியில் கடந்த இரு நாள்களாக துர்நாற்றம் வீசியதை அடுத்து அயலவர்கள்

>> 25

## எல்லை நிர்ணயத்தில் தமிழர்களுக்கு அநீதி

### உள்ளூராட்சி திருத்தத்துக்கு ஆதரவளிக்க கூட்டமைப்பு முடிவெடுக்கவில்லையாம்

கொழும்பு, ஒக. 25
“போர் காரணமாக வெளிநாடுகளுக்குச்சென்ற தமிழ் மக்களைக் கருத்தில் எடுக்காது எல்லை நிர்ணய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. இவற்றைக் காரணம் காட்டி தேர்தலை பிற்போட விரும்பவில்லை. ஆனாலும் தமிழ் மக்கள் முகம்கொடுக்கும் நெருக்கடிகள் தீர்க்கப்படாமல் திருத்தச் சட்டவரைவுக்கு ஆதரவு வழங்குவது தொடர்

>> 25

### உள்ளூராட்சி திருத்தச் சட்டம் இன்று வாக்கெடுப்புக்கு

கொழும்பு, ஒக. 25
உள்ளூராட்சி அதிகார திருத்தச் சட்டவரைவை நிறைவேற்று

>> 25

### 11 தமிழர்கள் கடத்தல் வழக்கில் சிஐடியிடம் புதிய சாட்சியங்கள்

(விரிவு பக். 5)

20ஆவது திருத்தச்சட்டவரைவு;

## ஊவாவில் படுதோல்வி வடக்கும் எதிர்க்குமாம்

கொழும்பு, ஒக. 25
அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தலை ஒரே நாளில் நடத்த ஏற்பாடு செய்யும் 20 ஆவது திருத்தச்சட்டவரைவுக்கு வடக்கு மாகாண சபை ஆதரவு வழங்காது என்று முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
அதேவேளை ஊவா

>> 25



பண்ணை அருகே குருசடித் தீவில்

## படகு கவிழ்ந்ததில் சாவு

### திருமணமாகி 21 நாள்களில் பரிதாபம்

யாழ்ப்பாணம், ஒக.25
யாழ்ப்பாணம் பண்ணைக் கடற்பரப்பில் படகு விபத்துக்குள்ளானதில் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.
இந்தச் சம்பவம் நேற்று மாலை 4 மணியளவில் நடந்துள்ளது. நாவாந்துறையைச் சேர்ந்தவர்கள் குருசடித் தீவு

>> 25

உணவு ஒறுப்பிலுள்ள

### அரசியல்கைதிகள் இருவர் சிறைவைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், ஒக. 25
அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளில் இருவர் சிறைச்சாலையில் மருத்துவமனையில் நேற்றுக் காலை சேர்க்கப்பட்டனர். மற்றையவர் சிறைச்சாலையில் உள்ள தூக்குத் தண்டனை கைதிகளுடன் தங்க வைக்கப்பட்டுள்ளார்.
வவுனியா மேல் நீதிமன்றில் இடம்பெற்று வரும் தமக்கு எதிரான வழக்கை வேறு நீதிமன்றுக்கு மாற்ற வேண்டாம் எனக் கோரி, தமிழ் அரசியல் கைதிகள் மூவர்

>> 25

## தடுப்பிலுள்ளோரை விடுவிக்கவேண்டி வடக்கு மாகாண சபையில் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக. 25
சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி, வடக்கு மாகாணசபையில் உறுப்பினர்கள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
சபையின் 103ஆவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்று

>> 25




சிறு பிள்ளைகளுடன் பரிசும் வளரும்

Vardhana JUNIOR

இன்றே DFCC வங்கிக்கு வந்து வர்தன ஜூனியர் கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

24 மணிநேர அழைப்பு மையம்: 011 2350000
www.dfcc.lk

DFCC வங்கி இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் உரிமம் பெற்ற ஒரு வர்த்தக வங்கியாகும்.

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

# முரண்பாடு தீர்க்கப்படாவிடில் மு.காங்கிரஸ் புறக்கணிக்கும்

## அதன் தலைவர் ஹக்கீம் எச்சரிக்கை

கொழும்பு, ஓக.25

சிறுபான்மைப் பிரதிநிதித்துவம் தொடர்பான முரண்பாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என சாதகமான உத்தரவாதத்தை தலைமை அமைச்சர் அல்லது மாகாண சபைகள் அமைச்சர் வழங்க வேண்டும். இல்லாவிடில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலத்தின் மீதான வாக்கெடுப்பை புறக்கணிக்கவேண்டிய நிலை ஏற்படும்.

இவ்வாறு சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்திலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

மாகாண சபைகள் அமைச்சர் இருந்தபோதிலும் கடந்த ஆட்சியில் எல்லை நிர்ணயப் பணியை பஸில் ராஜபக்சவே முன்னெடுத்தார். சிறுபான்மையினத்தவர்களுக்கு அநீதி இழைக்கும்வகையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இதனால் இது பற்றி ஆராய மேன்முறையீட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. பிரச்சினைகள் முழுமையாகத் தீரவில்லை.

எல்லை நிர்ணயத்தில் இன்னும் குறைபாடுகள் காணப்படுகின்றன. தேர்தல்முறை மாற்றத்தின் பொது மக்களுக்கு நியாயம் நிலைநாட்டப்படவேண்டும். சிறுபான்மைக்கு நியாயமான பிரதிநிதித்துவம் தேவைப்படுகிறது. இது தொடர்பில் அரசு வழங்கும் உத்தரவாதத்துக்கமையவே சட்டமூலத்துக்கு ஆதரவாக வாக்களிப்பதா இல்லையா என முடிவுசெய்ய முடியும்.

புதிய ஏற்பாடுகளின்படி சம்மாந்துறையில் 40 ஆயிரம் பேர் இருந்தாலும் 10 உறுப்பினர்களே தெரிவாக உள்ளனர். தெஹியத்தகண்டியவிலும் அதே அளவு மக்கள் இருந்தாலும் அங்கிருந்து 23 உறுப்பினர்கள் தெரிவாக உள்ளனர்.

இவ்வாறான முரண்பாடுகள் காணப்படுகின்றன. உறுப்பினர் தொகை அதிகரிக்கும் அதிகாரம் தங்களுக்கில்லை என எல்லை நிர்ணயக் குழுத் தலைவர் பீரிஸ் கூறியிருந்தார். பழைய முறையின்கீழ் அதிக முஸ்லிம் உறுப்பினர்கள் தெரிவான பிரதேசங்களில் புதிய சட்டத்தினூடாக குறைவடையவுள்ளது - என்றார். (ற)

# விவாதத்தை விரைவாக முடித்து சட்டத்தை நிறைவேற்றவேண்டும்

## உள்ளூராட்சி சட்டத் திருத்தம் தொடர்பில் ஜே.வி.பி. வலியுறுத்துகின்றது

கொழும்பு, ஓக.25

வரலாற்றில் முதன்முறையாக அனைத்துக் கட்சிகளுடனும் கலந்துரையாடப்பட்டு ஏற்றுக்கொள்ளக்கூடிய தேர்தல் முறையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. தேவையற்ற திருத்தங்களை முன்வைத்து தேர்தலைப் பிற்போடாமல் நாளை (இன்று) சட்டமூலத்தை நிறைவேற்றி உடனடியாகத் தேர்தலொன்றுக்கு செல்வோம்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணி வலியுறுத்தியது.

சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நேற்றுக் காலை நாடாளுமன்ற நடவடிக்கைகள் ஆரம்பமாகின. வாய்மூல கேள்விக்கான நேரம் முடிவடைந்த பின்னர் சமர்ப்பிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டம் மீதான விவாதம் ஆரம்பமானது. அதில் கலந்துகொண்டு உரையாற்றிய மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி சபைகள் திருத்தச் சட்டம் குறித்து நடத்தப்பட்ட பேச்சுகளில் அனைவரும் ஒரு பொது இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர். திருத்தங்களை முன்வைக்க கால அவகாசத்தைக் கோருவது சாதாரணமானது.

இந்தச் திருத்தச் சட்டமூலத்தை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதிக்குள் நிறைவேற்றிக்கொண்டால் ஜி.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கு முன்னர் தேர்தலை நடத்தமுடியும் என்று தேர்தல்கள் ஆணையாளர் கூறியுள்ளார்.

இன்று திருத்தங்களை முன்வைத்து விவாதத்தை நடத்தி நாளை மாலை சட்டமூலத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும். இல்லாவிடின் இந்தத் தேர்தல் ஒருபோதும் விரைவில் நடைபெறப்போவதில்லை.

திருத்தச் சட்டமூலத்தில் 25 வீதமான பெண்களின் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்படுவது கட்டாயமாகும். சில வேளை அதனைவிடவும் அதிகரிக்கக் கூடும். ஒரு சிறிய கட்சி இரண்டு உறுப்பினர்களைப் பெற்றுக்கொள்ளும்போது 25 வீதம் என்பது கேள்விக்குறியாகிறது. 3 உறுப்பினர்களை ஒரு கட்சி பெறுமாயின் அதில் ஒரு பெண் பிரதிநிதித்துவம் கட்டாயப்படுத்தப்படவேண்டும் என்பதுடன் இரண்டு அல்லது ஓர் உறுப்பினரைப் பெறும்போது இது கட்டாயப்படுத்தப்படக்கூடாது.

அனைத்துக் கட்சிகளும் பொது இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதால் தேவையற்ற திருத்தங்களை முன்வைத்து தேர்தலை பிற்போடாமல் சட்டமூலத்தை நிறைவேற்றி சாதாரணதரப் பரீட்சைக்கு முன்னர் தேர்தலை நடத்தவேண்டும் என்றார். (ற)

# கிராம உச்சவரம்பு அதிகாரத்தை வழங்கும்போது கவனம் தேவை

## அமைச்சர் சம்பிக்க சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக.25

கிராம உச்ச வரம்பு அதிகாரத்தை வழங்கும்போது அவதானத்துடன் இருக்க வேண்டும். அவ்வாறு வழங்கும் போது வெளிநாடுகளின் முதலீடுகளின்போது காணிகளைப் பெறுவதில் சிக்கல் ஏற்படும்.

இவ்வாறு தெரிவித்தார் அமைச்சர் சம்பிக்க ரணவக்க.

நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

கிராம அதிகாரத் திட்டத்தை பிரித்தானியர்கள் நீக்கினார்கள். அதற்கு ஏற்ற கிராம அதிகாரத் திட்டத்தை தற்போதைய அரசு உருவாக்குகின்றது. விரைவில் அதற்கான சட்டவரைவு சமர்ப்பிக்கப்படும். இதன்மூலம் பிரதேச சபைக்கு அதிகாரம் வழங்கப்படும். பிரதேச சபைகளில் காணப்படும் ஊழலைக் கட்டுப்படுத்த முடியும்.

வடக்கில் சமஷ்டி கோருகின்றனர். வடக்குக்கு அதிகாரம் வழங்கப்பட்டாலும் தமிழர்கள் தெற்கிலும் இருக்கின்றனர். அதேபோன்று மலையகத்தில் உள்ள இந்திய வம்சாவழியினரும், முஸ்லிம்களும் நாட்டில் பல்வேறு இடங்களில் பரந்து வாழ்கின்றனர். அதனால் சமஷ்டி ஊடாகத் தீர்வைப் பெற முடியாது.

புதிய பிரதேச வியூகம் வகுக்கப்பட வேண்டும். அதே வேளை பெண் பிரதிநிதித்துவ கோட்டா முறையால் குடும்ப அரசியல் தோற்றம் பெறும் வாய்ப்பு உள்ளது - என்றார். (ற-31)

# தேர்தலைப் பின்தள்ள கூட்டு எதிரணி முயற்சி

## குற்றஞ்சாட்டுகின்றார் கிரியெல்ல

கொழும்பு, ஓக.25

திருத்தங்களைக் காட்டி கூட்டு எதிரணியினர் தேர்தலைப் பிற்போட முயற்சிக்கின்றனர். மக்கள் விடுதலை முன்னணி உரிய திருத்தங்களை முன்வைத்துள்ளது. ஆனால் கூட்டு எதிரணி திருத்தம் எதையும் முன்வைக்கவில்லை.

இவ்வாறு சபை முதல்வரும், அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல குற்றஞ்சாட்டினார். நாடாளுமன்றின் நேற்றைய அமர்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சித் தேர்தல் தாமதிப்பதற்கு கடந்த ஆட்சியே காரணம். அவர்கள் விட்ட தவறுகளைத் திருத்த வேண்டியுள்ளது. அவற்றைத் திருத்தித் தற்போது நாடாளுமன்றில் சட்ட வரைவைச் சமர்ப்பித்துள்ளபோது அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். தேர்தலைத் தாமதப்படுத்துவதே அவர்களின் நோக்கம். தேர்தலை எதிர்கொள்ளும் நிலையில் கூட்டு எதிரணி இல்லை.

ஜே.வி.பி. கட்சி 4 திருத்தங்களை முன்வைத்துள்ளது. கூட்டு எதிரணி ஒன்றையேனும் முன்வைக்கவில்லை. தேர்தலைப் பின்தள்ளும் அவர்களின் முயற்சிக்கு இடமளிக்க மாட்டோம் - என்றார். (ற-31)

# விருப்பு வாக்கு முறை தேர்தல்களில் நீக்கம்

## பிரதி அமைச்சர் அஜித் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.24

நாடாளுமன்றம், மாகாண சபை, உள்ளூராட்சித் தேர்தல்களில் விருப்பு வாக்கு முறையை நீக்கவுள்ளோம். இதனால் தேர்தலுக்கான பண விரயம் குறையும். ஒரே கட்சிக்குள் மோதல் இருக்காது.

இவ்வாறு தெரிவித்தார் பிரதி அமைச்சர் அஜித். பி. பெரேரா.

நேற்றைய நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கடந்த ஆட்சியின் போது சுதந்திரக் கட்சி சாதகமாகும் வகையில் தேர்தல் முறைமை உருவாக்கப்பட்டது. சிறுப்பான்மை மக்களின் பிரதிநித்துவத்தை இல்லாமல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. நீதியான முறையில் பெண் பிரதிநித்துவம் உருவாக்கப்பட வேண்டும்.

விருப்பு வாக்கு முறை பண விரயம் கொண்ட முறைமையாகும். அதை நீக்கவுள்ளோம். அதனால் பல சாதகமான விடயங்கள் உள்ளன. மூன்றில் இரண்டும் பெரும்பான்மை இருக்கும் எமது ஆட்சியில் நாம் சிறிய கட்சிகளின் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாத்தோம். தனி அதிகார ஆணவத்துடன் செயற்படவில்லை. மக்களின் நன்மதிப்பைப் பெற்றுக்கொள்ளக் கூடிய முறையாக புதிய தேர்தல் முறைமை அமையும் - என்றார். (ற-31)

# சட்ட மா அதிபர் திணைக்களத்தை அடக்கி ஆள்வதற்கு அரசு திட்டம்!

## இப்படிக் கூறுகின்றார் விமல் வீரவன்ச

கொழும்பு, ஓக.24

நேர்மையான அமைச்சர் ஒருவரை நீக்கிவிட்டு சட்டமா அதிபர் திணைக்களத்தை ஆட்டிப் படைக்கும் அமைச்சர் ஒருவரை நியமிக்க அரசு திட்டமிடுகின்றது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றின் நேற்றைய அமர்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

அரசு தனக்குச் சாதகமான திருத்தங்களைக் கொண்டுவந்து நிறைவேற்றப் பார்க்கின்றது.

விஜயதாச ராஜபக்ச ராஜபக்சவினரைப் பாதுகாக்கின்றார் என்றும், கூட்டு எதிரணி மீதான விசாரணைகளை தாமதம் செய்கின்றார் என்றும் தெரிவித்து பதவி நீக்கியுள்ளனர். சட்டமா அதிபர் திணைக்களத்தை ஆட்டிப் படைக்கும் அமைச்சரை நியமனம் செய்யவே அரசு திட்டமிடுகின்றது.

உரிய நேரத்தில் தேர்தல் நடத்திய மகிந்த ராஜபக்சவின் ஆட்சி சர்வாதிகார ஆட்சி. உரிய நேரத்தில் தேர்தலை நடத்தாது தாமதம் செய்யும் இந்த ஆட்சி நல்லாட்சி. இது நல்லாட்சியா?. ஜனநா யகத்தின் ஒரு எழுத்துக்கு கூட இந்த ஆட்சியில் இடமில்லை. அரசு இன்று (நேற்று) கொண்டு வந்த திருத்தங்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குக் கூட வழங்கப்படவில்லை - என்றார். (ற-31)

# சாதகமான திருத்தங்களை திடீரென செய்துள்ளது அரசு

## தினேஸ் குணவர்த்தன தெரிவிப்பு

கொழும்பு, ஓக.25

அரசு மறைமுகமாக இன்று (நேற்று) தனக்குச் சாதகமான 50 திருத்தங்களை உள்ளூராட்சி மன்றச் சட்ட வரைவில் கொண்டு வந்துள்ளது. அவை தொடர்பில் எமக்கு எதுவும் தெரியாது.

இவ்வாறு கூறினார் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ்குணவர்த்தன. நேற்றைய நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அரசுக்கோ, அரச கட்சிகளுக்கோ தேர்தலை நடத்துவதற்கான தேவை இல்லை. கூட்டு எதிரணியே தேர்தலுக்காகப் போாடியது. இப்போது தேர்தலை தாமதப்படுத்த முயற்சிப்பதாக எம்மீது குற்றஞ்சாட்டப்படுகின்றது.

தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள திருத்தங்கள் தொடர்பில் எமக்குத் தெரியாது. இன்றே திருத்தங்கள் வழங்கப்பட்டன. இன்று (நேற்று) உள்ளடக்கப்பட்ட திருத்தங்களுக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதி கிடைத்ததுள்ளதா? தேர்தல் முறைமைக்கு நடந்தது என்ன? என்ற கேள்விக்கு அரசு பதில் கூற வேண்டும். அரசின் 50 திருத்தங்கள் குறித்து எமக்கு தெளிவு வேண்டும். இந்த திருத்தங்கள் ஒழுங்கு முறையில் இல்லையேல் பல குழப்பங்களுக்கு வழிவகுக்கும்.

சரி நிறைவேற்றித் தருகின்றோம். எப்போது தேர்தல் நடத்துவீர்கள்?. டெங்கு பிரச்சினை, குப்பை பிரச்சினை வந்தது. உள்ளூராட்சி மன்றங்கள் இயங்காமையே குறித்த பிரச்சினைகளுக்கு மூல காரணமாகும். நாம் தோற்றாலும் பரவாயில்லை. தேர்தலை உடன் நடத்துங்கள் - என்றார். (ற-31)

# கைதாவாரா ஆனந்த சமரசேகர?

கொழும்பு,ஓக.25

வசீம் தாஜுதீன் கொலை வழக்கில் சந்தேகநபராக, முன்னாள் கொழும்பு பிரதான நீதிமன்ற சட்ட மருத்துவ அதிகாரி ஆனந்த சமரசேகரவை கைது செய்ய முடியும் என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நேற்றுநீதிமன்றில்தெரிவித்தது.

இது தொடர்பான வழக்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. குற்றப் புலனாய்வுத் திணைக்களம் சார்பாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் டிலான் ரத்நாயக்க முன்னிலையானார்.

உயிரிழந்த வசீம் தாஜுதீனின் எலும்புத் துண்டுகள் காணாமல் போன சம்பவம் தொடர்பானவிசாரணைகள்தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தச் சம்பவம் தொடர்பாக கொழும்பு பிரதான நீதிமன்ற சட்ட மருத்து அதிகாரி ஆனந்த சமரசேகரவை கைது செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் நீதிமன்றில் தெரிவித்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஜ)

## வடக்குப் பாடசாலைகளை மீளக் கட்டமைக்கத்திட்டம்

கொழும்பு, ஒக. 25

வடக்கு மாகாணத்தில் போர்ச் சூழலின் பின்னர் விடுவிக்கப்பட்ட, விடுவிக்கப்படாத பாடசாலைகளை மீளக் கட்டமைப்பதற்கு கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது. அது தொடர்பான கலந்துரையாடல் கல்வி அமைச்சில் கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஸ்ணன் தலைமையில் நேற்று நடைபெற்றது. அதில் மீள்குடியேற்றம் நடைபெற்று வரும் பிரதேசங்களின் பாடசாலைகளை சீரமைப்பு செய்வதற்கும், தற்போது குறைபாடுகளுக்கு மத்தியில் நடைபெற்று வரும் பாடசாலைகளுக்குத் தளபாடங்களை உடனடியாக வழங்குவதற்கும், பாதிக்கபட்ட பாடசாலைகளை பார்வையிட்டு மேலும் அபிவிருத்திகளை மேற்கொள்வதற்குமான தீர்மாணங்கள் எட்டப்பட்டன. அத்துடன் காணிகள் விடுவி க்கபட்ட பகுதியில் விடுவிக்க ப்படாத பாடசாலைகளை, இராணுவத்தின் அனு மதியுடன் விடுவித்து, அந்தப் பாடசாலைகளையும் அபிவிருத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. இதற்கு இராணுவத்தின் அனுமதி தேவை என்பதால், முழுமையான விவரங்களை வழங்குமாறு கொழும்பு இராணுவத் தலைமையகத்தின் கேணல் டி.சீ.சீ. கனேபல கேட்டுள்ளார். உயர் இராணுவ அதிகாரிகளிடம் பேச்சு நடத்தி அனுமதி கிடைத்தவுடன் அந்தப் பாடசாலைகளும் திருத்தப்பட்டு மாணவர்கள் முறையாகக் கல்வி கற்பதற்கான வசதி வாய்ப்புகள் செய்து கொடுக்கப்படும் என்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. கலந்துரையாடலில் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மறுவாழ்வு மீள் குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் டி.சுரேஸ், இராஜாங்க அமைச்சின் செயலாளர் திஸ்ஸ ஹேவவிதாரன, கொழும்பு இராணுவத் தலைமையகத்தின் கேணல் டி.சீ.சீ. கனேபல, கல்வி அமைச்சின் பாடசாலைகள் கட்டட அபிவிருத்தி பிரிவின் பணிப்பாளர் கலாநிதி யூ.ஜி.வை. அபேகோன், பணிப்பாளர் எஸ். முரளிதரன், மேலதிக பணிப்பாளர் எஸ்.யூ.விஜேகோன், அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் ஆர்.திவாகரன், வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத்தின் உதவி செயலாளர் எஸ்.ஜெயராம், அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். சத்தியசீலன் மற்றும் அமைச்சரின் செயலாளர்கள் கலந்து கொண்டனர். (ஐ-10)

## நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை

### பாதுகாப்புப் படைகளின் பிரதானி தெரிவிப்பு

கொழும்பு,ஒக.25



நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கும் எந்தவிதமான சவால்களும் இதுவரை ஏற்படவில்லை. அவ்வாறு அச்சுறுத்தல் ஏற்படும் சந்தர்ப்பத்தில் அவற்றை எவ்வாறு எதிர்கொள்வது என்பதில் பாதுகாப்புப் பிரிவினர் கவனத்துடன் இருக்கின்றனர். இவ்வாறு பாதுகாப்பு படைகளின் புதிய பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரட்ன தெரிவித்தார். இலங்கைக் கடற்படையின் தளபதியாகக் கடமையாற்றிய அட்மிரல் ரவீந்திர விஜேகுணரட்ன, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் பதவி உயர்வு வழங்கப்பட்டு, பாதுகாப்புப் படை பிரதானியாகக் கடந்த வாரம் நியமிக்கப்பட்டார். அவர் கடந்த செவ்வாய்க்கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். அவர் கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு நேற்றுச் சென்றார். அங்கு சமய வழிபாடுகளில் கலந்து கொண்டார். மகாநாயக்க தேரர்களையும் சந்தித்து ஆசிபெற்றுக் கொண்டார் அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது, " நாட்டின் பாதுகாப்புக்குப் பிரச்சினை ஏற்பட்டால் நடவடிக்கை எடுப்பதற்கு பொலிஸார், முப்படைகள், சிறப்பு அதிரடிப் படையினர் உள்ளனர். அவர்கள் தத்தமது கடமைகளைச் செய்வர். நானும், அதே போல புதிதாக நியமிக்கப்பட்ட கடற்படைத் தளபதி மற்றும் வானூர்திப் படை தளபதி, இராணுவத் தளபதி ஆகியோர் போர் ஆரம்பிப்பதற்கு முன்னர் படைக்கு இணைந்தோம். 1980 ஆம் ஆண்டில் போர் இருக்கவில்லை. எனினும் எமது காலத்தில் போர் செய்து, ஓய்வுப் பெறுவதற்கு முன்னர் அதனை முடிவுக்கும் கொண்டு வந்தோம். தேசிய பாதுகாப்புத் தொடர்பில் பிரச்சினை ஏற்பட்டால் அதற்கு செய்ய வேண்டிய பதில் நடவடிக்கையும் அவர்களுக்குத் தெரியும். தேசிய பாதுகாப்பு குறித்து எந்த அச்சுறுத்தலும் இல்லை" என்றார். (ஐ)

## மத்தல விமான நிலையத்தை குத்தகைக்கு வழங்க எதிர்ப்பு

### சுதந்திர ஊழியர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஒக.25

மத்தல வானூர்தி நிலையத்தை இந்தியாவுக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இலங்கைக சுதந்திர ஊழியர் சங்கத்தினர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மத்தல வானூர்தி நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. "மத்தல வானூர்தி நிலையத்தை இந்தியாவுக்கு குத்தகைக்கு வழங்கக் கூடாது" என் று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர். நட்டத்தில் இயங்கி வரும் மத்தல வானூர்தி நிலையத்தை இந்தியாவுடன் இணைந்து அபிவிருத்தி செய்ய உள்ளதாக அரசு ஏற்கனவே அறிவித்திருந்தது. இந்த நிலையில் அதற்கான பேச்சு தற்போது நடைபெற்று வருவதாகக் கூறப்படுகிறது. (ஐ-10)

## அரச நிதி முறைகேடு வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு,ஒக.25

கடந்த அரச தலைவர் தேர்தலின் போது அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்திப் பட்டுத்துணி பகிர்ந்தளிக்கப்பட்டமை தொடர்பான வழக்கு, எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று இதனை அறிவித்தது. இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்கு முறை ஆணைக்குழுவுக்குச் சொந்தமான 600 மில்லியன் ரூபா நிதியில் மத நிகழ்வுக்காகப் பட்டுத்துணி பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளது.

அது தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. முன்னாள் அரச தலைவரின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் தொலைத்தொடர்பு ஒழுங்கு முறை ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் அனுஷா பெல்பிட ஆகியோருக்கு எதிராகவே குற்றத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அரச பொதுப்பணத்தை முறைக்கேடாக பயன்படுத்திய குற்றத்தின் கீழ் அவர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்கு விசாரணைகள் முடிவடைந்தது. வாய்வழி அறிக்கை மற்றும் எழுத்துமூல வழக்கு தாக்கல் பத்திரிகை என்பன முடிவடைந்த பின்னர், இந்த வழக்குத் தீர்ப்பு வழங்கப்படும் என்று நீதிமன்றம் அறிவித்தது. (ஐ)

## உருக்குலைந்த சடலம் மீட்பு

மன்னார், ஒக. 25

மன்னார் முருங்கன் கட்டுக்கரைக் குளம் பகுதியில் உள்ள காட்டுப்பகுதியில் உருக்குலைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது. முருங்கன் பொலிஸாருக்குப் பொது மக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டனர். சட லம் மிகவும் சிதைவடைந்த நிலையில் காணப்பட்டது. சடலத்துக்கு அருகில் கைப்பை, அலைபேசி என்பன கண்டெடுக்கப்பட்டன எனப் பொலிஸார் தெரி வித்தனர். சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-10- 56)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இரண்டு உணவகங்களுக்குப் பூட்டு

யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் பிரதான உணவகங்கள் இரண்டு நேற்று முதல் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. பொதுச்சுகாதார பரிசோதகரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் அடிப்படையில், நீதிமன்றின் உத்தரவுக்கு அமைவாக அவை தற்காலிகமாக மூடப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. இரண்டு உணவகங்களும் சுகாதார சீர்கேட்டுடன் இயங்குவதாகப் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு முறைப்பாடு வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் அவர்கள் நேரடியாகச் சென்று உணவகங்களைப் பார்வையிட்டனர். உணவகங்கள் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்தமை கண்டறியப்பட்டது. இரண்டு உணவகங்களுக்கு எதிராக சுகாதாரப் பரிசோதகர்கள் வழக்குத் தாக்கல் செய்தனர். அதன் அடிப்படையில் இரண்டு உணவகங்களையும் மறு அறிவித்தல் வரும் வரை மூடவேண்டும் என்று நீதிமன்றால் அறிவித்தல் வழங்கப்பட்டது. (ஐ-10-8)

## இரு பிரதேச செயலகங்களுக்கு தண்ணீர் பவுசர்கள் கையளிப்பு




கிளிநொச்சி, ஒக. 25.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி மற்றும் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலங்களுக்கு உழவு இயந்திரங்களுடன் கூடிய தண்ணீர் பவுசர்கள் நேற்று கையளிக்கப்பட்டன. மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் பிரதேச செயலர்களிடம் அவற்றுக்கான திறப்புக்களைக் கையளித்தார்.

நாட்டில் தற்போது நிலவிவரும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்குத் தண்ணீர் வழங்கும் முகமாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் உழவு இயந்திரங்களுடனான தண்ணீர் பவுசர்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்துக்கும் வழங்கப்பட்டுள்ளன. கரைச்சி பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன் மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் திருமதி ஜெயராணி ஆகியோரிடம் அந்தந்தப் பிரதேங்களுக்குத் தலா ஒவ்வொரு தண்ணீர் பவுசர்கள் வீதம் கையளிக்கப்பட்டன. ஏற்கனவே இடர் முகா மைத்துவ அமைச்சினால் கரைச்சி பிரதேச செயலர் விரிவுக்கு 4 தண்ணீர்ப் பவுசர்களும், கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேசங்களுக்கு தலா 3 தண்ணீர்ப் பவுசர்களும் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பி டத்தக்கது. (ஐ-10-35)

## சுமதிபாலவின் மானநட்ட வழக்கு நீதிமன்றால் நிராகரிப்பு

கொழும்பு,ஒக.25

அமைச்சர் அர்ஜூண ரணதுங்கவுக்கு எதிராக, இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் திலங்க சுமதிபாலவால் தாக்கல் செய்யப்பட்ட மான நட்ட வழக்கு சட்ட செல வின்றி நுகேகொடை மாவட்ட நீதிமன்றம் நேற்று நிராகரித்தது. அமைச்சர் தனக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டி திலங்க சுமதிபாலவால் 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3ஆம் திகதி வழக்குத் தொடரப்பட்டது. அதன் மூலம் 500 மில்லியன் ரூபா நட்டஈடு வழங்குமாறு திலங்க சுமதிபால கோரியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-10)

## நிரந்தர நியமனம் கோரி அரச தலைவரைச் சந்திக்க;

# இன்று பாதயாத்திரை

### வவுனியாவிலிருந்து கொழும்புக்கு கடவைக் காப்பாளர்கள் முன்னெடுக்கின்றனர்

வவுனியா, ஓக.25
நிரந்தர நியமனம் வழங்கக் கோரி இன்றையதினம் வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தொடருந்துக் கடவைக் காப்பாளர்களால் வவுனியாவிலிருந்து பாதயாத்திரை முன்னெடுக்கப்படவுள்ளது.



பாதயாத்திரையாகக் கொழும்பு வரை செல்லும் அவர்கள் கொழும்பில் அரச தலைவரைச் சந்தித்து தமது நியமத்துக்கான பேச்சுக்களை நடதவுள்ளனர். இன்று காலை 10 மணிக்கு பாதயாத்திரை ஆரம்பமாகவுள்ளது. தொடருந்துக் கடவைக் காப்பாளர்களான 10 ஊழியர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். "இந்தப் பாதயாத்திரைக்கு வடக்கு கிழக்கில் இருக்கக் கூடிய சிவில் அமைப்புக்கள், இளைஞர் கழகங்கள், சமூக ஆர்வலர்கள் எங்களுடன் இணைந்து ஆதரவு கொடுக்க முன்வர வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கின்றேன்" என வடக்கு கிழக்கு தொடருந்துக் கடவைக் காப்பாளர் சங்கத் தலைவர் றொகான் ராஜ்குமார் தெரிவித்தார்.

நாளொன்றுக்கு 250 ரூபா கொடுப்பனவில் கடந்த நான்கு வருடங்களாகப் பொது மக்களின் பாதுகாப்புக்காகக் கடமையாற்றி வருகிறோம். எங்களது நியாயமான கோரிக்கை நிறைவேற வடக்கு கிழக்கிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி வேறுபாடின்றி எங்கள் கோரிக்கையை கவனத்திலெடுப்பதோடு நாங்கள் அரச தலைவரைச் சந்தித்து எங்கள் கோரிக்கையை முன்வைப்பதற்கு உதவி செய்ய வேண்டும் எனவும் தொடருந்துக் கடவைக் காப்பாளர் சங்கத் தலைவர் றொகான் ராஜ்குமார் கோரினார். (21)





## மன்னார் கட்டுக்கரைக் குளத்தின் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பம்

மன்னார், ஓக. 25
மன்னார் கட்டுக்கரைக் குளத்தின் வாய்க்கால் மேம்படுத்தும் திட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. நீர்ப்பாசன மற்றும் நீர் வழங்கல் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார திட்டத்தை வைபவ ரீதியாக ஆரம்பித்தார். மல்வத்து ஓயாவில்இருந்துயோதவெவ வரை செல்லும் நீர் வழங்கும் பிரதான கால்வாய் மார்க்கத்தின் அபிவிருத்திப் பணிகள் முதற்கட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சுமார் 22 கிலோ மீற்றர் நீளம் கொண்ட வாய்க்கால் அபிவிருத்திப் பணிக்காக ஒதுக்கப்பட்ட நூறு மில்லியன் ரூபா திறி ஒதுக்கீட்டில் சுமார் 20 மில்லியன் ரூபாவுக்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்வில் நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர் என்.துரைசிங்கம்,மேலதிக பணிப்பாளர்கள்,மன்னார் மாவட்டப் பணிப்பாளர் எஸ். குமாரதேவ, மற்றும் மாவட்ட விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள்,கமநல சேவை உத்தியோகத்தர்கள்,விவசாய அமைப்புக்களின் பிரதி நிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ-10, 56)

## மல்வத்துஓய நீர்த்தேக்கத்தின் கட்டுமானப்பணிகள் ஆரம்பம்

கொழும்பு, ஓக. 25
மல்வத்துஓய நீர்த்தேக்கத்தின் கட்டுமானப் பணிகள் நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டன. இலங்கையில் நிர்மா ணிக்கப்ப டும் மூன்றாவது மிகப் பெரிய நீர்த்தேக்கம் இது எனக் கூறப்படுகிறது. இதன் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டதும் சுமார் ஒரு லட்சத்து 70 ஆயிரம் ஏக்கர் அடி நீரைச் சேமிக்க முடியும். நீர்த்தேக்கத்துடன் இணைந்ததாக மூன்றரை கிலோமீற்றர் நீளத்துக்கு 22 மீற்றர் நீளமான அணைக்கட்டும் அமைக்கப்படும். அநுராதபுரம், வவுனியா, மன்னார் மாவட்டங்களில் 40 ஆயிரம் ஏக்கர் காணிகளில் இரு போகங்களிலும் பயிர்ச் செய்கை மேற்கொள்ள நீர் விநியோகம் மேற்கொள்ளப்படும். சுமார் இரண்டு லட்சம் பேருக்கு சுத்தமான குடிதண்ணீர் வசதியும் இதனூடாகக் கிடைக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-10)

## சைட்டத்துக்கு எதிரான போராட்டத்துக்கு பிக்குகள் ஒன்றியம் நேற்று ஆதரவு



கொழும்பு,ஓக.25
சைட்டத்துக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள உணவு ஒறுப்புப் போராட்டத்துக்கு அனைத்துப் பல்கலைக்கழகப் பிக்குகள் ஒன்றியம் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

நேற்று நான்காவது நாளாக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் அவர்கள் இணைந்து கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

சைட்டம் தனியார் பல்கலைக்கழகத்தை இழுத்து மூடுக அல்லது அரசுடைமையாக்குக என்ற கோரிக்கையை முன்வைத்து பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த திங்கட்கிழமை போராட்டத்தை ஆரம்பித்தனர். கொழும்பு - புறக்கோட்டைத் தொடருந்து நிலையத்துக்கு முன்பாகக் கூடாரம் அமைத்து அவர்கள் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். நேற்று நான்காவது நாளாகவும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்தப் போராட்டத்துக்கு வலுசேர்க்கும் வகையில் அனைத்துப் பல்கலைக்கழகப் பிக்குகள் ஒன்றியமும் போராட்டத்தில் இணைந்து கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ரூபா 4 லட்சம் பெறுமதியான நகைகளுடன் ஒருவர் கைது

வவுனியாவில் பல பிரதேசங்களில் சாலையில் செல்லும் பெண்களின் நகைகளை அபகரித்துவந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரால் விற்கப்பட்டிருந்த மற்றும் அடகு வைக்கப்பட்டிருந்த சுமார் நான்கு லட்சம் ரூபா பெறுமதியான நகைகளையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

வவுனியாவில் ஆசிகுளம், கோவில்குளம் மற்றும் பட்டைகாடு போன்ற பல்வேறு பகுதிகளில் பகல் நேரத்தில் சாலையில் செல்லும் பெண்களின் தங்கச்சங்கிலி, தாலிக் கொடி போன்றவை கொள்ளையிடப்பட்டு வந்தன.

இதுதொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் குறித்த கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் மகாறம்பைகுளம் பகுதியைச் சேர்ந்த 26 வயதான ஒருவரைக் கைது செய்துள்ளனர். குறித்த நபர் அண்மையில் வெளிநாட்டிலிருந்து வந்திருந்தார் எனக் கூறப்படுகின்றது.

இச் சம்பவத்துடன் தொடர்புபட்ட மற்றுமொரு நபரைத் தேடி வருவதாகவும் பொலிசார் தெரிவித்தனர். (ய)

## மயங்கி விழுந்த கடற்படை சிப்பாய் சிகிச்சை பயனின்றி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஓக.25
காங்கேசன்துறைக் கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படைச் சிப்பாய் ஒருவர் மருத்துவமனை யில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று உயிரிழந்தார். கண்டியைச் சேர்ந்த மஞ்சுரெ ஹேரத் பண்டா (வயது 38) என்பவரே உயிரிழந்தார். கடந்த 22 ஆம் திகதி முகாமில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த சமயம் கடற்படைச் சிப்பாய் மயங்கி விழுந்துள்ளார். அவருக்கு கடற்படையினர் முதலுதவி வழங்கி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை யில் சேர்த்தனர். அவர் நேற்று சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ந-8,ரி)



நுவரெலியா கொட்டகலை ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலயத்தின் வருடாந்தத் தேர்த்திருவிழா நேற்றுச் சிறப்பாக இடம்பெற்றது. டிரைட்டன் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்திலிருந்து பக்தர்களால் கலைகலாசார முறைப்படி பறவைக் காவடி, பாற்குடம், கற்பூரச்சட்டி எடுத்து வரப்பட்டு விநாயகருக்குப் பாலாபிஷேகம் செய்யப்பட்டது. (ஐ)

## ஆலயங்களின் சீரமைப்புக்கு சிமெந்துப் பைக்கற் வழங்கல்



மட்டக்களப்பு,ஓக.25
மட்டக்களப்பு கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட சில ஆலயங்களின் மறுசீரமைப்புப் பணிகளுக்காக சிமெந்துப் பைக்கற்றுக்கள் நேற்று வழங்கப்பட்டன.

கிரான் பிரதேச செயலகத்தில் வைத்து ஆலயங்களின் நிர்வாகத்தினரிடம் அவை கையளிக்கப்பட்டன. கல்லடி வெட்டைக் காட்டுப் பிள்ளையார் ஆலயம், மீராண்கடவை மாவடிப்பிள்ளையார் ஆலயம் உட்பட சில ஆலயங்களுக்கு இவை வழங்கப்பட்டன. கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கிருஸ்ணபிள்ளை துரைராசசிங்கம் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் சிமெந்துப் பைக்கற்றுக்களை வழங்கினார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# 11 தமிழர்கள் கடத்தல் சம்பவங்கள் பற்றி கரனகொடவுக்கு அனைத்துமே தெரியும்

## சி.ஐ.டியால் நீதிமன்றுக்கு அறிவிப்பு

கொழும்பு, ஓக. 25

"5 மாணவர்கள் உள்பட 11 தமிழர்கள் கொழும்பில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரனகொட நன்கு அறிந்திருந்தார். அதுதொடர்பான மேலும் பல சாட்சியங்கள் கிடைத்துள்ளன" என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று கோட்டை நீதிவான் மன்றுக்கு அறிவித்தனர்.

2008ஆம் ஆண்டு ஓகஸ்ட் 8ஆம்திகதி மற்றும் செப்ரெம்பர் 7ஆம் திகதிக்கு இடையே 5 மாணவர்கள் உள்பட 11 தமிழர்கள் கொழும்பு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டனர்.

அதுதொடர்பில் கொழும்பு கோட்டை நீதிவான் மன்றில் வழக்கு விசாரணைகள் இடம்பெறுகின்றன. அந்த வழக்கை குற்றப் புலனாய்வுத் துறையின் கூட்டுக் கொள்கை தொடர்பிலான விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிசாந்த டி சில்வா நெறிப்படுத்தி வருகிறார்.

இந்த வழக்கில் கடற்படை அதிகாரி கொமடோர் டி.பி.கே. தசநாயக்க உள்ளிட்ட 7 கடற்படையினர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு கோட்டை நீதிவான் லங்க அஜயரத்ன முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.

கொமடோர் டி.பி.கே. தசநாயக்க கடற்படை வைத்தியசாலையில் சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் பாதுகாப்பில் சேர்க்கப்பட்டுள்ளதால் அவர் நேற்று முற்படுத்தப்படவில்லை. ஏனைய 6 சந்தேகநபர்களும் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

குற்றப் புலனயவுப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர்களான நிசாந்த சில்வா, பத்மசிறி இலங்கசிங்க ஆகியோர் மன்றில் முன்னிலையாகி சிறப்பு மேலதிக அறிக்கை முன்வைத்தனர்.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

விளக்கமறியலிலுள்ள சந்தேகநபர்களில் ஒருவரான கன்சைட் நிலத்தடி முகாமின் முன்னாள் பொறுப்பாளர் ரணசிங்கவின் கீழ் சேவையாற்றிய மானவ, ரகுமான், கனேபொல, கஜநாயக்க ஆகிய கடற்படைச் சிப்பாய்களிடம் விசாரணைகள் நடத்தப்பட்டன.

கன்சைட் முகாமிலிருந்து சடலங்கள் என நம்பப்படும் கறுப்பு பொலித்தீனால் சுற்றப்பட்டவைகள் கப் வாகனம் ஒன்றில் ஏற்றுவதைக் கண்டாதாக கப்டன் வெல்கெதர, அப்போது உயர் அதிகாரியாக இருந்த தற்போதைய ரியர் அட்மிரல் குருகேவுக்கு அறிவித்தார். அதுதொடர்பில் குருகேவிடம் வாக்குமூலம் பெறப்பட்டது.

"இந்த கடத்தல்கள் தொடர்பில் அப்போதைய கடற்படைத் தளபதி வசந்த கரனகொடவால் அவரின் கடல்சார் ஆலோசகர் ஓய்வுபெற்ற ரியர் அட்மிரல் உதய கீர்த்தி விஜய பண்டா, அப்போதைய உளவுத் துறை பணிப்பாளர் ரியர் அட்மிரல் ஆனந்த குருகே அப்போதைய கடற்படை ஒழுக்காற்று அதிகாரி சேனக ஹங்வெல்ல ஆகியோரின் கீழ் விசாரணை ஒன்று இடம்பெற்றது.

கடத்தப்பட்டோரில் ரஜீவ் நாகநாதன், ராமலிங்கம்திலகேஸ்வரன், பிரதீப் விஸ்வநாதன் ஆகியோரை விடுவிக்குமாறு அப்போதைய கடற்படைத் தளபதி கரனகொடவிடம் முன்னாள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா கோரியிருந்தார். அமைச்சரின் கோரிக்கைக்கு முன்பாகவே கடற்படையின் விசாரணை நடத்தப்பட்டதால் கடத்தல்கள் குறித்து கரனகொட அறிந்தே வைத்திருந்தார்.



கடற்படை தலைமையகத்தில் லெப்டினன் கொமாண்டர் சம்பத் முனசிங்கவின் கீழ் கடற்படைத் தளபதி கரனகொடவின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பலர் தடுத்து வைத்து விசாரணை செய்யப்பட்டனர்.

அந்த விசாரணையில், கடத்தப்பட்டவர்கள் கடற்படைத் தலைமையகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்து பின்னர் திருகோணமலையில் லெப்டினன் கொமாண்டர் ரணசிங்கவின் மேற்பார்வையில் இருந்த கன்சைட் எனும் இடத்தில் சட்ட விரோதமாக தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். அங்கு வைத்து அவர்கள் கொலை செய்யப்பட்டதாக அறிந்துகொண்டேன்" என்று தற்போதைய ரியர் அட்மிரல் ஆனந்த குருகே வழங்கிய வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கடற்படைத் தள்பதி, இந்த விசாரணையை குற்றத் தடுப்புப் பிரிவுக்கு வழங்கிய போது, முதலாவது சந்தேகநபரான சம்பத் முனசிங்கவின் அறையில் மீட்கப்பட்ட கடத்தப்பட்டோரின் அடையாள அட்டைகள், துப்பாக்கி ரவைகள், வங்கிப் புத்தகங்கள், வங்கி அட்டைகள், அலைபேசிகள் என்பன கடற்படையின் ஒழுக்காற்றுப் பிரிவால் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு கையளிக்கப்பட்டன.

கடற்படை முகாமின் 8ஆம் இலக்க அறையில் சம்பத் முனசிங்கவுக்கு மேலதிகமாக தற்போது தேடப்படும் ஹெட்டி ஆராச்சியும் தங்கியிருந்துள்ளார். அவ்விருவரும் டி.கெ.பி. தசநாயக்கவின் கீழ் சேவை செய்தவர்கள். எனினும் முறைப்பாட்டை வழங்கிய கடற்படைத் தளபதி கரனகொட, ஹெட்டி ஆராச்சியின் பெயரை வெளிப்படுத்தாது மறைத்துள்ளார் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணையை எதிர்வரும் 6ஆம் திகதிவரை ஒத்திவைத்த நீதிவான் லங்கா ஜயரத்ன, சந்தேகநபர்கள் 6 பேரையும் அன்றுவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (வ-31)

# மாவீரன் பண்டாரவன்னியனின் ஞாபகார்த்த விழா நாளை வவுனியாவில்

வவுனியா, ஓக.25

பண்டாரவன்னியன் ஞாபகார்த்த விழா வவுனியாவில் இன்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெறவுள்ளது.

பண்டாரவன்னியன் நினைவுத்தூபியிலும் அதனைத் தொடர்ந்து நகரசபைக் கலாசார மண்டபத்திலும் நிகழ்வுகள் இடம்பெறும்.

காலை 8மணியளவில் பண்டாரவன்னியன் நினைவுத்தூபிக்கு மலர் மாலை அணிவித்தல், 9.30மணிக்கு நகரசபைக் கலாசார மண்டபத்தில் பண்டாரவன்னியனின் கொடி இசைக்கீதம் இசைத்தல், வரவேற்புரை, தலைமை உரை, வரவேற்பு நடனம், பண்டாரவன்னியனின்நினைவுப்பேருரை மற்றும் பண்டாரவன்னியனின் நாடக இறுவட்டு வெளியீடு உட்பட பல்வேறு நிகழ்வுகள் நடைபெறும். இதன்போது கலைஞர்கள் கௌரவிப்பு, மாணவர்கள் கல்வி நல நிதி உதவிகள் என்பனவும் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வவுனியா மாவட்டச்செயலர் எம்.பி.ரோஹன புஸ்பகுமார, மற்றும் அரசதலைவர் சட்டத்தரணி மு.சிற்றம்பலமும்,. சிறப்பு விருந்தினராக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள், வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பி.எம். அசங்க காஞ்சன குமார, வவுனியா பொது மருத்துவமனைப் பணிப்பாளர் கு.அகிலேந்திரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் ரி.மங்களேஸ்வரன், வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரியின் பீடாதிபதி கு.சிதம்பரநாதன், வவுனியா தெற்கு கல்விப்பணிப்பாளர் எம்.இராதாகிருஷ்ணன், வவுனியா வடக்கு கல்விப்பணிப்பாளர் வி.சிறிஸ்கந்தராசா உட்பட பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (ய)

ஊடகவியல் அறிமுகம்
(அச்சு / இலத்திரனியல்)
சான்றிதழ் பயிற்சி நெறி

ஊடகத் துறையில்
ஆர்வம் உடையோருக்கு
வாய்ப்பு

- 10 நாள் பயிற்சிகள்.
- ஒரு பிரிவில் ஆகக் கூடியது 20 பேர் மட்டுமே.
- இருபாலாருக்குமானது
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ்.
- கட்டணம் இல்லை.
- பயிற்சிகள் உதயன் பணிமனையில் நடைபெறும்.

விண்ணப்ப முடிவுத் திகதி:
31.08.2017

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில்
'ஊடகப் பயிற்சி நெறி' எனக் குறிப்பிட்டு
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு அனுப்புங்கள்

விண்ணப்பப் படிவம்

# சிறை விடுப்பில் வெளியே வந்தார் பேரறிவாளன்

## தமிழக அரசின் அரசாணையை அடுத்து

சென்னை, ஓக. 25
இந்தியாவின் முன்னாள் தலைமை அமைச்சர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்டு 25 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் இருக்கும் பேரறிவாளன் முதல் முறையாக நேற்று சிறை விடுப்பில் (பரோலில்) வெளியே வந்தார்.
தமிழக அரசு அவருக்கு 30 நாள்கள் சிறை விடுப்பு வழங்கி உத்தரவிட்டதைத் தொடர்ந்து அவர் வெளியே வந்துள்ளார்.
ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட வழக்கில் தற்போது 7 பேர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பேரறிவாளனின் உடல்நிலையைக் கருத்திற் கொண்டும் உடல் நலமின்றி அவதிப்படும் அவரது தந்தையாரைப் பார்ப்பதற்காகவும் சில நாள்களாவது சிறைவிடுப்பு அளிக்க வேண்டுமென அவரது தாயார் அற்புதம்மாள் கோரிவந்தார்.
ஆனால் இந்தக் கோரிக்கையை பேரறிவாளன் அடைக்கப்பட்டுள்ள வேலூர் சிறையின் கண்காணிப்



பாளர் நிராகரித்தார்.
இதையடுத்து, இந்த விவகாரம் குறித்து தமிழக சட்ட மா அதிபரின் கருத்தை தமிழக அரசு கேட்டது. பேரறிவாளன் நடுவண் அரசுச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்டிருந்தாலும் அவர் தன் தண்டனைக் காலம் முழுவதையும் அனுபவித்துவிட்டதால், மாநில அரசில் உள்ள பொருத்தமான அதிகாரிகள் அவருக்கான சிறை விடுப்புக் குறித்து முடிவு செய்யலாம் என தமிழக சட்ட மா அதிபர் தனது பரிந்துரையை வழங்கினார்.
இந்த நிலையில், அவருக்கு ஒரு மாத காலம் சிறைவிடுப்பு அளிப்பதாகதமிழக அரசு அறிவித்துள்ளது.
இது தொடர்பாக தமிழக அரசின் கூடுதல் தலைமைச் செயலர் நிரஞ்சன் மார்டி வெளியிட்டுள்ள உத்தரவில், "1982ஆம் ஆண்டின் சிறைத் தண்டனை நிறுத்திவைப்பு விதிமுறைகள் விதி 19இன் படி பேரறிவாளனுக்கு 30 நாள்கள் சிறை விடுப்பு அளிக்கலாம்.
அவர் சிறை விடுப்பில் இருக்கும் காலகட்டத்தில் அவருக்கு கடுமையான பொலிஸ் காவல் வழங்க வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.
1991ஆம் ஆண்டு ஜீன் மாதம் கைது செய்யப்பட்ட பேரறிவாளன், 26 ஆண்டுகள் கழித்து சிறை விடுப்பு கிடைத்துள்ளது. இந்த வழக்கில் தண்டனை அனுபவித்து வரும் சிலர் இதற்கு முன்பாக சிறை விடுப்பு பெற்றுள்ளனர் என்றாலும் அவர்களுக்கு சில நாள்கள் மட்டுமே அவ்விடுப்பு கிடைத்தது. முதல்முறையாக இந்த வழக்கின் தண்டனைக் கைதி ஒருவருக்கு ஒரு மாதகால விடுப்பு கிடைத்துள்ளது.
இந்த வழக்கில் தண்டிக்கப்பட்ட 7 பேரையும் குற்றவியல் நடைமுறைச் சட்டம் 435ன் கீழ் விடுவிக்கப்போவதாக 2014ஆம் ஆண்டில் அப்போதைய முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்.
புதுடில்லி அரசின் ஒப்புதலோடுதான் இந்தச் சட்டப்பிரிவைப் பயன்படுத்தி அவர்களை விடுவிக்க முடியும் என்று இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதாலும், புதுடில்லி அரசு ஒப்புதல் அளிக்க மறுத்ததாலும் ஏழு பேரையும் விடுதலை செய்யும் விவகாரம் கிடப்பில் உள்ளது.
விடுதலையான பேரறிவாளன், ஜோலார்பேட்டையில் உள்ள அவரது இல்லத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவருடன் 3 பொலிஸ் வாகனங்கள் பாதுகாப்புக்குச் சென்றன.

**பேரறிவாளனுக்கு பரோல் நிபந்தைனைகள்**

சிறையில் அளிக்கப்பட்ட முகவரியில்தான் தங்கி இருக்க வேண்டும். வீட்டை விட்டு வெளியே செல்லக்கூடாது. பத்திரிகையாளர்களை சந்திக்க கூடாது. பொதுக்கூட்டங்களில் பங்கேற்க கூடாது என்ற விதிகள் வகுக்கப்பட்டுள்ளன. ஜோலார் பேட்டை பொலிஸ் நிலையத்தில் நாள்தோறும் கையெழுத்து இட வேண்டும் . பேரறிவாள்னை தலைவர்கள் சந்தித்து பேச அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (வ)

## தென்மராட்சியில் ஆங்கில மொழிதின நிகழ்வு

தென்மராட்சி, ஓக. 25
தென்மராட்சிகல்விவலய ஆங்கிலபாடபி;;ரிவினரின் வலயநிலை ஆங்கில மொழித்தின நிகழ்வுகள் நாளை மு.ப.9 மணி தொடக்கம் மதியம் 12 மணிவரை தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளன.
வலயக்கல்விப் பணி;ப்பாளர் சு.கி;ருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக தொழில்நுட்பபீட பேராசிரியர் க.கந்தசாமி கலந்துகொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது . (ய-9)

## விநாயகர் சதுர்த்தி இன்று

யாழ்ப்பாணம், ஓக.25
நீர்வேலி கந்தசுவாமி கோவிலில் இன்று வெள்ளிக்கிழமை ஆவணி சதுர்த்தி உற்சவம் இடம்பெறும்.
பி.ப.3 மணிக்கு பூஜை, விசேட அபிசேகம் என்பன இடம் பெற்று விநாயப்பெரு மான் வீதிவலம் வருவார். (ய-17)

++++++++

யாழ்ப்பாணம், ஓக.25
நல்லூர்வடக்குஸ்ரீசந்திரசேகரப் பிள்ளையார் ஆலய ஆவணி சதுர்த்தி திருவிழாவில் இன்று வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு 1008 சங்காபிசேகமும், பஞ்சமுக அர்ச்சனையும் நடைபெறவுள்ளது.
மாலை 5.30 மணிக்கு தெய்வீக இசை சங்கம நிகழ்வும், விநாயகப்பெருமான் உள்வீதி, வெளிவீதி உலாவரும் காட்சியும் இடம்பெறவுள்ளது. (ய)

++++++++

யாழ்ப்பாணம், ஓக.25
பகவான் ஸ்ரீசத்தியசாயி சேவா நிலையத்தில் விநாயகர் சதுர்த்திவிரத நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன. இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு நிகழ்வு இடம்பெறும் நிகழ்வில் வடக்குமாகாண ஆளுநர்செயலர் இளங்கோவனால் விநாயகரின் பெருமைகள் பற்றிய சிறப்புரை இடம்பெறவுள்ளது என அறிவிக்க்ப்பட்டது. (21)

## தெல்லிப்பழை துர்க்கையம்மன் திருவிழா: ஆலயத்தின் புனிததன்மையை பேணுங்கள்

### பிரதேச செயலாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.25
வரலாற்றுச் சிறப்புமிக்க தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத் திருவிழா நேற்றுமுன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 3ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவடையவுள்ளது.
ஆலய உற்சவத்தில் அடியார்கள் ஆலயத்தின் புனிதத் தன்மையைப் பாதுகாப்பதுடன் இந்து சமய கலாசார பண்பாட்டை பேணிக்காக்கும் கலாசார உடைகளுடன் வரவேண்டும்.
ஆலய வளாகத்தில் பொலித்தீன் பிளாஸ்ரிக் பாவனை தவிர்க்கப்பட வேண்டும்.
ஆலய வளாகத்தில் குப்பைகளை அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் போட்டு ஆலய வளாகத்தைப் புனிதமாகப் பேணுமாறும், ஆலய வளாகத்தில் பாதணிகளுடன் செல்வதைத்தவிர்க்குமாறும் தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் எஸ்.சிவசிறி தெரிவித்துள்ளார்.
அதேநேரம் வாகனத்தரிப்பிடத்தில் வாகனங்களை நிறுத்தி ஒழுங்குகளைக் கடைப்பிடித்துதவுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (ய-9)

## நல்லூரில் இன்று கதிர்காம பஜனை

யாழ்ப்பாணம், ஓக.25
யாழ்.கதிர் கலையகத்தின் ஏற்பாட்டில் நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்பாக அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் கதிர்காமக் கந்தன் பஜனைக் குழுவினர் வழங்கும் பஜனை நிகழ்வும் இடம்பெறும். இதன்போது சொல்வேந்தர் பொன்.சுகந்தன் வழங்கும் கந்தபுராணம் தொடர்சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது. (ய)

## தவறான முடிவு எடுத்த பெண் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஓக.24
மன உளைச்சலுக்கு ஆளான குடும்பத் தலைவி தவறான முடிவு எடுத்து தனக்கு தானே மண்ணெண்ணெய் ஊற்றி தீயிட்டு உயிரிழந்துள்ளார்.
கொக்குவில் கிழக்கை சேர்ந்த விஜயரஞ்சன் ரஞ்சினி (வயது 54) என்பவரே உயிரிழந்தவராவர்.
இவர் கணவனை இழந்த நிலையில் தனது பிள்ளையுடன் வாழ்ந்து வந்துள்ளார். அவர் கடந்த சில நாள்களாக மன உளைச்சலுக்கு ஆளாகியிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. தீக் காயத்துக்குள்ளான அவர் அயலவர்களால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.
சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் நேற்று காலை உயிரிழந்தார். விசாரணையை யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மற்றும் பொலிஸார் மேற்கொண்டனர். (ற-8,ரி1)

## முடிவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருநீதிகுணசீலனுக்குஒருநீதியாக இருக்கமுடியாது"என்றுஅவர்குறிப்பிட்டுள்ளார். இரு வாரங் களுக்குள் தமது அமைப் புக் கூடி இது தொடர்பில் முடிவெடுக்கும் என்றார் அவர்.
அமைப்பு எடுத்த ஒழுக்காற்று நடவடிக்கையின் காரணமாகத்தான் அமைச் சராக இருந்த பா.டெனீஸ்வரன் பதவி யிழந்தார். அவ்வாறே ஜி.குணசீலனும்பதவியிழக்கநேரிடும். அப்போது ஏற் படும் வெற்றிடத்துக்கு ரெலோ சார்பில் க.விந்தனையே நியமிக்க வேண்டிய நிலமை ஏற்படும். சுகாதார அமைச்சர்பதவிக்குக.விந்தன்பொருத்தமற்றவர் என்று முதலமைச்சர் ஏற்கனவே அறி வித்திருக்கிறார். இந்த நிலையில் சுகா தார அமைச்சுப் பதவியை யார் பெறு வர் என்பதில் தொடர்ந்தும் சிக்கல் நீடிக்கப்படுகிறது.
வடக்கு மாகாண அமைச்சரவையை மாற்றியமைக்க வேண்டும்என்றுமுதலமைச்சர்சி.வி.விக்னேஸ்வரன் எடுத்த முடிவு காரணமாக, அமைச்சராகப்பதவிவகித்துக் கொண்டிருந்தபா.டெனீஸ்வரனை, அமைச்சுப் பதவியி லிருந்து விலகுமாறு ரெலோ அமைப் புக் கோரியிருந்தது. அவர் அதற்கு மறுத்திருந்தார். ரெலோ அமைப்பு அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவ டிக்கை எடுத்தது. கட்சியிலிருந்து இடைநிறுத்துவதாக அறிவித்தது. இந்த அறிவிப்புக் கிடைத்ததுமே முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், டெனீஸ்வரனை அமைச்சரவையில் இருந்து நீக்கினார்.
அந்த இடத்திற்கு ரெலோ அமைப்பு தமதுகட்சிசார்பில்க.விந்தனைநியமிக்குமாறு கோரியது. முதலமைச்சர் அந்தக் கோரிக்கையை புறந்தள்ளி அந்தக் கட்சியைச் சேர்ந்த ஜி.குணசீ லனை அமைச்சராக நியமித்தார். ரெலோ அமைப்பு அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்று அறிவித்தது. ஆனாலும் முதலமைச்சர், கட்சிபரிந்துரைக்கலாம், முதலமைச்சர்தான் முடிவெடுப்பார் என்று பதில் வழங்கியி ருந்தார்.
முதலமைச்சரின் பதில் தொடர்பிலும், குணசீலனின் நடவடிக்கை தொடர்பிலும் ரெலோவின் செயலாளர் ந.சிறிகாந்தா தெரிவித்ததாவது: சமநீதி அடிப்படையிலும் கட்சிக் கட்டுப் பாட்டின் அடிப்படையிலும் முன்னாள் அமைச்சர் டெனீஸ்வரனுக்கு ஒரு நீதி அமைச்சர் ஞா.குணசீலனுக்கு ஒரு நீதி எனச் செயற்படமுடியாது. குணசீல னுக்கு எதிராகவும் நாம் ஒழுங்கு நட வடிக்கை எடுப்போம். எமது கட்சியால் அமைச்சர் நியமனத்துக்கு பரிந்துரைத்த மாகாண சபை உறுப்பினருக் குப் பதிலாக வேறு ஒருவரை முதலமைச்சர் நியமித்தது பாரதூரமான அரசியல் தவறாகும்.
அது மட்டுமன்றி வெந்த புண்ணில் வேல்பாய்ச்சுவது போல் சுகாதார அமைச்சை நிர்வகிப்பதற்கு ஓர் மருத் துவரே பொருத்தம் என்ற நிலைப் பாட்டையும் முதலமைச்சர் முன் வைத் துள்ளார். எமது கட்சியானது முதல மைச்சரிடம் கோரியதெல்லாம் பதவி விலக்கப்பட்ட டெனீஸ்வரன் வசமி ருந்த துறைகளை எம்மால் பரிந்துரைத்த விந்தனிடம் வழங்குங்கள் என் பதே. எந்தச் சந்தர்ப்பத்திலும் நாம் சுகாதார அமைச்சைக் கோரவில்லை.
தற்போது சுகாதார அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள குணசீலன் உள்பட 15 பேர் கலந்து கொட்ட எமது தலைமைக் குழுக் கூட்டத்தில் சுகாதார அமைச்சை வழங்கினால் ஏற்பதில்லை என்றும் தீர்மானித்திருந்தோம். முதலமைச்சர் தனது முடிவுக்கு மேலதிகமாகக் கூறும் நியாயங்கள் வேடிக்கையானது.
அவற்றைவிரிவாக ஆராய விரும்பவில்லை. ஆனால் முதலமைச்சரின் முடிவின் மூலம் புதியதொரு அரசியல் புயல் மையம்கொள்வதற்கு வழி அமைக்கப் பட்டுள்ளது என்று மட்டும் கூறமுடியும்.
இந்தச் சூழலில் முதலமைச்சர் அழைத் தார் என்பதற்காக எமது உறுப்பினர் குணசீலன் ஓடோடிச் சென்று பதவி ஏற்றது கட்சியின் கட்டுப்பாட்டை அப் பட்டமாக மீறிய ஓர் பொறுப்பற்ற நட வடிக்கையாகும். குணசீலனுக்கு நடவ டிக்கை எடுக்கும்நோக்கில் கட்சியின் தலைமைக் குழுவானது இரண்டு வாரத் தில் கூடும் என்றார்.
இதற்கிடையே, எதிர்வரும் 26ஆம் திகதி வவுனியாவில் கூடுவதாக இருந்த தமிழ் அரசுக் கட்சியின் மையக் குழுக் கூட்டம் மேலும் பின் தள்ளிப் போயி ருக்கிறது. அந்தக் கூட்டம் கூட்டப்படும்போது அமைச்சர் அனந்தி சசிதரனுக்கு எதிராக அந்தக் கட்சியும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும்.
தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் வடக்குமாகாண சபையில் அமைச்சுப் பதவி எதனையும் வகிப்பதில்லை என்று எடுக்கப்பட்ட முடிவை மீறினார் என்பதற்காகவே அனந்தி மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிகிறது. அப் படி நடவடிக்கை எடுக்கப்பட்டால் கட் சியிலிருந்து அவர் நீக்கப்படவும்கூடும். அப்போது அந்த இடத்துக்கு வேறு ஒருவரை நியமிக்க வேண்டி ஏற்படும். (உ 5,101)

# வடக்கு உள்ளூராட்சி சபைகள் குறித்து சிறப்புக் கவனம் தேவை

## சிறிதரன் எம்.பி. வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், ஒக.25
"வடக்கு மாகாணத்தில் இன்றுவரை பிரதேசசபைகளே இல்லாத இடங்கள் தொடர்பிலும், ஓர் மாவட்டத்தின் நகரமேபிரதேசசபையாகவும்உள்ளமை தொடர்பிலும் உள்ளூராட்சிசபைகள் அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும்" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்நாடாளுமன்றஉறுப்பினர் சி.சிறிதரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

"வடக்கு மாகாணத்தின் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப்பிரதேசசபையானதுதற்போது இருபிரதேசசெயலாளர் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் சுமார் 90 ஆயிரம் மக்களுடன் வாழும்ஓர்மாவட்டத்தின்தலைநகரை உள்ளடக்கியுள்ளது.

இந்தச் சபையை நகரசபையாக தரம் உயர்த்துவது தொடர்பிலும், கரைச்சி பிரதேசசபையை கரைச்சி, கண்டாவளை ஆகிய இரு சபைகளாக உருவாக்குவதுதொடர்பிலும்கவனமெடுக்குமாறு கோரி ஏற்கனவே உள்ளூராட்சி அமைச்சருக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் மருதங்கேணி, முல்லைத்தீவுமாவட்டத்தில்ஒட்டுசுட்டான், மன்னார் மாவட்டத்தில் மடு பிரதேச செயலாளர்பிரிவுகளுக்குஇன்றுவரை உள்ளூராட்சிசபைகளே கிடையாது.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு ஒரு முழுமையாக்கப்பட்ட நகராட்சி மன்றத்தினையும், கரைச்சி மற்றும் கண்டாவளை ஆகிய இரண்டு பிரதேசசபைகளையும் கொண்டிருக்க வேண்டிய தேவையுள்ளது.

இதில் 58 கிராம அலுவலர் பிரிவுகளும், 620.66 ச.கி.மீற்றர் பரப்பளவு நிலப்பகுதியும் உள்ளடங்குகின்றது.

இவற்றைக் கருத்திற் கொண்டு எமது பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பிலும் கவனம் செலுத்துமாறு கோரியிருக்கிறோம்" என்றார்.

(ய-101)

# தாதியர் கற்கைக்கு ஓக. 31க்கு முன் விண்ணப்பிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக.25
"வடக்குமாகாண தாதியர் பற்றாக்குறையைத் தீர்க்க தாதிய கற்கைக்கு விரும்புபவர்கள் இந்த மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும்."

இவ்வாறுமாகாணதாதியர்உத்தியோகத்தர் சங்கத்தின் செயலாளர் க.நதீஸ் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு மாகாணத்தில் உள்ள மருத்துவமனைகள் அனைத்தும் மேல்மாகாண தாதியர் உத்தியோகத்தர்களைநம்பியேஇயங்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பெரும்பாலும் சகோதர மொழி பேசும் தாதியர்களே எமதுமாகாணத்தில்பணியாற்றிவருகின்றார்கள்.

இதனால்எமதுமாகாணவைத்தியசாலைகளில்சிகிச்சைபெறும்சிலநோயாளர்கள் மொழிப் பிரச்சினையால் அவதிப்பட்டு வருகின்றனர். அதேநேரம் மேல்மாகாண தாதியர்கள் தமது மாகாணத்தை விட்டு பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் எமது மாகாணத்தில்பணியாற்றுகின்றனர். அவர்கள்குறிப்பிட்டகாலப்பகுயின்பின்னர் தமது மாவட்டங்களுக்கு இடமாற்றலாகிச் செல்கின்றனர். மீண்டும் அதே அளவிலான மேல்மாகாண ஆளணியை நம்பியே இந்த இடமாற்றம் வழங்கப்பட்டு வருகிறது.

எனவே, எமதுமாகாணத்தின்தாதியர் சேவையானது நிரப்பப்படாது பற்றாக்குறையாகவே தொடர்ந்தும் காணப்படுகின்றது. இதனால்எமதுமாகாணாங்களில் புதிய அலகுகளை நிர்மாணிக்க முடியாமலும், அதனை தொடர்ந்தும் இயக்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. இந்த நிலைக்கு காரணம் எமது மாகாணத்தில்பலர்தாதியர்சேவைக்கு விண்ணப்பிக்காமையே.

கடந்தவருடம்கோரப்பட்ட விண்ணப்பங்களில் எமது மாகாணத்தின் சில மாவட்டங்களில் மிகக்குறைந்த அளவிலானவர்களேவிண்ணப்பித்துள்ளனர். ஆகவே, இம்முறை வடக்கின் வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி மற்றம் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இருந்து அதிகளவிலானவர்கள்விண்ணப்பிப்பதன் மூலம் தாதியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யமுடியும்.

2015, 2016ஆம்ஆண்டுகளில்உயர்தரப்பரீட்சையில்விஞ்ஞானப்பிரிவில் தோற்றிமூன்றுபாடங்களிலும்(3எஸ்) சித்தியும், சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கிலத்தில்'சீ'சித்திபெற்றவர்களும் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

தகுதியானவர்கள் இம்மாதம் 31ஆம் திகதிக்குமுன்னர்விண்ணப்பபடிவங்களை புத்தக நிலையங்களில் பெற்று விண்ணப்பித்து எமது மாகாண தாதியர் பற்றாக்குறையை தீர்க்க முன்வர வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

(ய-402)

### கூழாமுறிப்பு குடியேற்றத்துக்கு

# 179 ஏக்கர் கோரியபோதும் 100 ஏக்கருக்கே அனுமதி

யாழ்ப்பாணம், ஒக. 25
"முல்லைத்தீவு கூழாமுறிப்பில் ஆயிரக்கணக்கானஏக்கருடைய காட்டுப் பகுதியில், குடியேற்றத் திட்டத்துக்காக 179 ஏக்கரை விடுவிக்கு மாறு மாவட்டச் செயலகத்தால் கோரப்பட்டபோதும் 100 ஏக்கர் மட்டுமே விடுவிக்கப்படவுள்ளது. வனவளத் திணைக்களத்தினர் இதனைத் தெரிவித்திருக்கின்றனர்" என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று, ஒட்டுசுட்டான் போன்ற பிரதேசங்களில் காணி அற்ற குடும்பங்களுக்கு நிலம் வழங்குவதற்காக கூழாமுறிப்பு பிரதேசத்தின் வனப் பகுதியில் சாலையோரம் இருந்த காட்டுப்பகுதியை வழங்குவது என்று 2015 இல் இனங்காணப்பட்டது. அவ்வாறு இனம் காணப்பட்ட பகுதியில் 549 ஏக்கரை வனவளத் துறையினர் மாவட்டச் செயலகத்துக்கு விடுவிக்க வேண்டும் என்றும், அவ்வாறுவிடுவிக்கப்படும்போது இரண்டு பிரதேசசெயலாளர்கள் பிரிவுகளிலும் உள்ள காணி அற்றவர்கள் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

இருப்பினும்அப்போதைய அரசு அந்த இடத்தில் 179 ஏக்கர் மட்டுமே வழங்க முடியும் என்று அறிவித்தது.

புதிய அரசின் நடைமுறைக்கேற்ப வனப்பகுதிகளின் நடவடிக்கைக்கு மீண்டும் அனுமதி பெறப்படவேண்டி இருந்ததால் குறித்த வனப்பிரதேசத்தில் மக்களின் குடியேற்றத்துக்காக குறிக்கப்பட்ட பிரதேசமான 179 ஏக்கரை விடுவிக்கு மாறு மீண்டும் அனுமதிகோரப்பட்டது. இரண்டு வாரங்களுக்குமுன்னர்கொழும்பில் இருந்து வந்திருந்த அதிகாரிகள் குறிக்கப்பட்ட வனப் பகுதியைப் பார்வையிட்டிருந்தனர்.

அது தொடர்பில் அமைச்சுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

அந்த அறிக்கையின் அடிப்படையில் கூழாமுறிப்பில் மாவட்டச் செயலகம் அனுமதி கோரிய 179 ஏக்கர் நிலத்துக்குப் பதிலாக 80 தொடக்கம் 100ஏக்கருக்கும் இடைப்பட்ட பிரதேசமே அனுமதிக்கப்படவுள்ளது. அந்தப் பகுதியில் அடர்ந்த காட்டுக்கு முன்பாகவுள்ள சாதாரண காட்டுப்பகுதிகளான இரண்டு துண்டுகளை மட்டுமே அனுமதிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறுஅனுமதிக்கப்படும்இருபக்க நிலங்களிலும் மக்களைக் குடியேற்றுவதற்காக ஏற்பாடுகளைச் செய்யும் அதேநேரம் மாவட்டஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத் தீர்மானத்தின் பிரகாரம் காணி அற்ற குடும்பங்களின் எண்ணிக்கை விகிதத்தில் இன ரீதியாகவும்கணிக்கப்படவேண்டியுள்ளது.

அது தொடர்பிலும் ஆராயப்படுகிறது. குறித்த அனுமதியானது எழுத்து மூலம் கிடைக்கப்பெற்றதும் மேற்கொண்டு நடவடிக்கைகள் இடம்பெறும் - என்றார்.

குறித்த பிரதேசத்தில் காணியை முஸ்லிம்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் முயற்சி அமைச்சர் ஒருவரால்மேற்கொள்ளப்பட்டது. அதற்குத் தமிழ் மக்கள் சார்பில் எதிர்ப்புத்தெரிவிக்கப்பட்டது.

காடழிப்புக்கு எதிராகக் கடந்த மாதம்கவனவீர்ப்பும்நடத்தப்பட்டது. இந்த நிலையில் குறித்த காணியைஇருஇனத்தவர்களுக்கும் விகிதாசார ரீதியில் பிரித்துக் கொடுக்கப்படவுள்ளது. (4-101)

# சேதனமுறை விவசாய உற்பத்திகளுக்கு பயிற்சி நிலையங்களில் சந்தைவாய்ப்பு

யாழ்ப்பாணம். ஒக.25
"சேதனமுறையில் செய்கை பண்ணப்படும் விவசாய உற்பத்திகளை மாவட்ட விவசாய பயிற்சி நிலையங்களில் விற்பனை செய்வதற்கு ஒழுங்குகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன" என வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் சேதனமுறையில் விவசாயத்தில் ஈடுபடுவோருக்கு சிறந்த ஊக்குவிப்புகளை வழங்கும் வகையில் அவர்களுக்கான சந்தை வாய்ப்பை நாம் வழங்கியுள்ளோம்.

வடக்கின் 5 மாவட்டங்களிலும் கடமையாற்றி வரும் பிரதி மாவட்ட விவசாய பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

சேதனமுறையில் உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறிகள் மற்றும் பழவகைகளை விவசாயிகள் விவசாய பயிற்சிநெறி விற்பனை நிலையங்களுக்கு கொண்டுவந்து கொடுக்க முடியும். அதற்கான அனைத்து ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

மேலும் வவுனியா மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்திலும் பிரத்தியேகமாக சேதன முறையிலான உற்பத்தி பொருள்களை விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

சேதன முறையில் விவசாய உற்பத்தியில் ஈடுபடும் பொருள்கள் சந்தைப் பெறுமதியிலும் பார்க்க கணிசமான விலையில் கொள்வனவு செய்யப்படுகின்றன. இதனால் விவசாயிகள் எதிர்பார்த்த வருமானத்தையும் பெறமுடியும்.

இதன் ஊடாக சேதன விவசாய உற்பத்திகளில் ஈடுபடும் விவசாயிகளை ஊக்குவிக்க முடியும்.

இந்த உற்பத்திப் பொருள்களுக்கு மக்கள் மத்தியிலும் பெரும் வரவேற்பு உள்ளது" -என்றார். (ய-8)

# வறட்சி உதவிகளுக்காக முல்லைக்கு ரூ.61 மில்லியன்

யாழ்ப்பாணம், ஒக.25
முல்லைத்தீவுமாவட்டத்தில்வறட்சியால்பாதிக்கப்பட்டோருக்கு உடனடி உதவிகளை வழங்க 61 மில்லியன் ரூபா கிடைத்துள்ளது என மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிக வறட்சியின் காரணமாக 90 கிராம அலுவலர் பிரிவுகளின் மக்கள் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

அவ்வாறுபாதிப்படைந்தகிராமங்களில்28ஆயிரம் குடும்பங்கள்நேரடியாகவேபாதிப்படைந்துள்ளனர். வறட்சியின் காரணமாக தொழிலை இழந்த நிலையில் அந்தக் குடும்பங்களைச் சேர்ந்தோர் காணப்பட்டனர். இதனை நாம் உரிய இடங்களின் கவனத்துக்குக் கொண்டுசென்றதன் பயனாக அவர்களுக்கான வாழ்வாதார ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

அந்தவகையில் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட 28ஆயிரம்குடும்பங்களுக்கானஉதவிக்குஅனுமதி கிடைத்துள்ளது. அரைவாசிக்கொடுப்பனவும்முதல் கட்டமாக கிடைத்துள்ளது.

அந்தவகையில்எமதுமாவட்டத்தின்மொத்தவறட்சி உதவித் தொகையாக 122 மில்லியன் ரூபா அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதில் 61 மில்லியன் ரூபா தற்போது கிடைக்கப் பெற்றுள்ளது - என்றார். (ய-101)



# வன வளத் துறையினர் மீது நீதிமன்ற நடவடிக்கைவேண்டும்

## வடக்கு மாகாண சபையில் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 25

வடக்கு மாகாணத்தில் வனவளத்திணைக்களத்தினர் அத்துமீறிய செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் என்று மாகாண சபையில் உறுப்பினர்களால் கடுங்கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்தால் வடக்கு மாகாண சபை நீதிமன்றம் மூலமாக என்றாலும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

வவுனியாவில் வனவளத் திணைக்களத்தினர் அத்துமீறிய செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் என்றுகூறி பிரேரணை ஒன்றை வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம் சபையில் நேற்று முன்மொழிந்தார். அந்த பிரேரணை தொடர்பில் கருத்துகளை முன்வைக்கும் போதே உறுப்பினர்கள் கூட்டாக இதனை வலியுறுத்தினர்.

பிரேரணையில், பல்வேறு சந்தர்ப்பங்களில் வனவளத் திணைக்களத்தின் செயற்பாடுகள் அத்துமீறிய வகையிலும் மாவட்ட, மாகாண நிர்வாகங்களுக்குக் கட்டுப்படாது தன்னிச்சையான எதேச்சை அதிகாரங்களுடன் இயங்குவது அவதானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் கூறப்பட்டது. பயனளிக்கவில்லை.

வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் மூன்று தசாப்தங்களாக அகதிவாழ்க்கை வாழ்ந்த உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களுக்காக வவுனியா வடக்கில் தனியார் நிறுவனத்தின் நிதியுதவியுடன் வீட்டுத்திட்டம் அமைக்கப்பட்டது. அங்கு குடிதண்ணீர்ப் பிரச்சினையால் வவுனியா வடக்குப் பிரதேச செயலாளரால் குடிதண்ணீர்க்கிணறு அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. இடத்தைப் பிரதேச செயலாளரே அடையாளப்படுத்த கிணறுகள் அமைக்கப்பட்டன. அந்த இடத்துக்குச்சென்ற வனவளத்துறையினர் கிணறு அமைக்கும் காணி தங்கள் திணைக்களத்தின் ஆளுகைக்குள் வருவதால் கிணறு அமைக்கத் தடைவிதித்தனர். இது பிரதேச கிராம அலுவலரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. கிராம அலுவலர் அங்கு வந்து வனவளத்துறையினருட்ன் பேசியுள்ளார். அவரின் பேச்சையும் செவிமடுக்காத வனவளத்துறையினர், தோண்டப்பட்ட கிணறுகளை மூடிவிடு மாறும் இல்லையெனில் தாங்கள் கைதுசெய்யப்போவதாகவும் பயமுறுத்தியதால் கிணறு மூடப்பட்டது. அங்கு குடிதண்ணீரின்றி மக்கள் அல்லல்படுகின்றனர்.

"பலவருடங்களுக்கு முன்னர் பழப்பயிர்ச்செய்கையை மேம்படுத்துவதற்காகத் இந்தக்காணியைத்தனியாருக்கு அரசு வழங்கியது. அதற்கு அண்மையில் வனவளத்துறையினர் நடுகற்களை போட்டுள்ளனர்" என்று பிரதேச செயலர் தெரிவித்தார்.

இவ்வாறான செயற்பாடுகளை இனியும் அனுமதிக்க முடியாது. வடக்கு மாகாணத்தில் மாகாண சபை நிர்வாகம் நடைபெறுகின்றபோதும் எம்முடனும் கலந்துரையாடாமல் கொழும்பு அரசின் கீழ் இயங்கும் மாவட்ட, பிரதேச நிர்வாகத்தையும் புறந்தள்ளி தான்தோன்றித்தனமாகச் செயற்படுகின்றனர். இது தொடர்பில் வனவளத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்துக்கு இந்தச் சபையின் கண்டனத்தை எழுத்துமூலமாக அனுப்பி வைப்பதோடு, எதிர்காலத்தில் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளில் திணைக்கள அதிகாரிகளை ஈடுபடுத்த வேண்டாமெனவும் கேட்டுக்கொள்கிறோம்" என்று தெரிவித்தார். இதன்போது சபையில் இருந்த உறுப்பினர்கள் பலரும், வனவளத் திணைக்களத்தின் அத்துமீறிய செயற்பாடுகள் வடக்கில் அனைத்து பிரதேசங்களிலும் காணப்படுகின்றது. இது தொடர்ந்தால் அவர்களுக்கு எதிராக வடக்கு மாகாண சபை நீதிமன்றம் மூலமாக என்றாலும் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர்.

இது தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்வதா அல்லது வேறு நடவடிக்கை எடுப்பதா என்று பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவைத் தலைவர் தெரிவித்தார். (4-8)

# வவு. வடக்கில் சிங்களக் குடியேற்றம் தடுக்கக்கோரி சபையில் பிரேரணை

## சத்தியலிங்கம் முன்வைத்தார்

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 25

வவுனியா மாவட்டத்தில் தமிழர்களின் உரிமைகளைப் பறிப்பதற்கு வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவில் திட்டமிடப்பட்ட பெரும்பான்மையின குடி யேற்றங்கள் நடைபெற்றுவருவதாக குற்றஞ்சாட்டியுள்ள வடக்கு மாகாண சபை முன்னாள் சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம், அதனைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி அவசர பிரேரணை ஒன்றை நேற்று முன்வைத்தார்.

பிரேரணையில் தெரிவித்திருப்பதாவது:

2015ஆம் ஆண்டு ஒகஸ்ட் 21ஆம்திகதி சிறப்பு வர்த்தமானி வெளியீட்டில் வவுனியா வடக்கு பிரதேசசபையின் வரையறை தொடர்பில், வட்டாரங்களின் எண்ணிக்கை 14. தனி உறுப்பினர்களைக் கொண்ட வட்டாரங்கள் 14. பல உறுப்பினர்களைக்கொண்ட வட்டாரங்கள் எதுவுமில்லை. இதன்பிரகாரம், 10 வட்டாரங்கள் தமிழ் மக்களை மட்டுமே கொண்டுள்ளன. 4 வட்டாரங்கள் முற்றுமுழுதாக சிங்கள மக்களைக் கொண்டது. தமிழ் வட்டாரத்தின் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 7928. சிங்கள மக்கள் மட்டுமே வாழும் வட்டாரங்களில் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 3819.

கடந்தமுறை பிரதேசசபையில் நான்கு சிங்கள உறுப்பினர்கள் அங்கம் வகித்துள்ளதுனர்.

பிரதேசசபையின் 2015ஆம் ஆண்டு நடைபெற்ற 47ஆவது அமர்வில் மணலாறுபிரதேசத்துக்குத் தனியான பிரதேசசபை ஒன்றை அமைத்து அதனுடன் இணைந்து செயற்பட விரும்புவதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளார்கள்.

அங்கு குடியமர்த்தப்பட்ட மக்கள் வவுனியா மாவட்ட நிர்வாக எல்லைக்குள் குடியமர்த்தப்பட்டிருந்தாலும், தேவைகளை மாகாணத்துக்குள்ளும், மூன்று மாவட்டங்களிலிருந்தும் பெற்று வருகின்றார்கள்.

இவர்களுடைய பிரதேச செயலகமாக மணலாறும், பிரதேசசபையாக வவுனியா வடக்கும் உள்ளது.

இந்த வருடம் வெளியாகிய 2016 தேருநர் இடாப்பின் பிரகாரம் வவுனியா வடக்குப் பிரதேசசெயலகப் பிரிவில் உள்ள தமிழ் மக்கள் வாழ்ந்து வந்த பாரம்பரிய கிராமங்களை உள்ளடக்கிய இரண்டு கிராமஅலுவலர் பிரிவுகளுக்குள் 17 கிராமங்களைச் சேர்ந்த 3819 வாக்காளர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் வவுனியா வடக்கில் நடைபெற்ற பிரதேசசபை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கருத்து தெரிவித்த குடியேற்ற வாசிகள், தமக்கு வவுனியா வடக்குடன் இணைந்திருக்க விருப்பமில்லை என்றும், அடர்ந்த வனப்பகுதி ஊடாக நெடுங்கேணியை வந்து செல்வது ஆபத்து எனவும் தெரிவித்தனர்.

எனவே, இதுதொடர்பில் கண்டனத்தைத் தெரிவிப்பதோடுகுடியேற்றவாசிகளின் விருப்பத்துக்கு ஏற்ப அவர்களை வவுனியா சிங்கள பிரதேச சபையுடன் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்துகிறேன். மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சருக்கு இந்தத் தீர்மானத்தை அனுப்பி வைக்குமாறு பிரேரணையில் கோரியுள்ளார்.

பிரேரணை ஏற்றுக் கொள்ளப்பட்டது. (ய-8)

## கடவைக் காப்பாளர்களுக்கு தீர்வு வழங்காவிடின்

# வடமாகாண சபை உறுப்பினர்கள் ரயில் பாதையில் அமரும் நிலை வரும்

## சபையில் நேற்று சுகிர்தன் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 25

வடக்கு மாகாணத்தில் உள்ள தொடருந்துக் கடவைகளில் இருக்கின்ற பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு உயிர்களைப் பாதுகாக்க, வடக்கு மாகாண மற்றும் கொழும்பு அரசு ஒருமாத காலத்துக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறின் வடக்குக்கு வரும் தொடருந்துகளை மாகாண சபை உறுப்பினர்கள் அனைவரும் வழிமறித்துப் போராட்டத்தில் குதிக்கவேண்டிவரும்."

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் 103 ஆவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, வடக்கில் உள்ள தொடருந்துக் கடவைகள் தொடர்பில் பிரேரணை ஒன்றை முன்மொழிந்தார். அதன் போதே சுகிர்தன் இவ்வாறு தெரிவித்தார்.

தவராசா தனது பிரேரணையில், வடக்கிலுள்ள தொடருந்துக் கடவைகள் பல பாதுகாப்பற்றவையாகக் காணப்படுகின்றன. பல விபத்துகளும் உயிரிழப்புகளும் தொடர்கின்றன. இவற்றைத் தடுக்க, பாதுகாப்பற்ற கடவைகள் காணப்படும் பிரதேசத்துக்குரிய உள்ளூராட்சி சபைகள் தற்காலிக பாதுகாப்பு முறைகளை ஏற்படுத்தி செயற்படுத்துவதற்கு பிரதேச சபைச் செலவிலே நிரந்தரமாக பணியாளர்களை நியமிக்க வேண்டும். நியமிக்கப்படுபவர் அண்மித்த தொடருந்து நிலையங்களுடன் தொடர்புகளை மேற்கொள்வதன் மூலமாக தொடருந்து வருகின்ற நேரங்களில் கடவைகளை மூடமுடியும்.

இதற்கு முதலமைச்சர் மற்றும் நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணிகள், மின்சாரம், வீடமைப்பும் கட்டட நிர்மாணமும், தொழிற்துறை, சுற்றுலாத்துறை, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகத்துறை அமைச்சு உள்ளூராட்சி சபைகளுக்குப் பணிப்புரை வழங்கவேண்டும்.

தொடருந்து சேவைகள் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுகூறித் தனது பிரேரணையை சபையில் முன்மொழிந்தார்.

இது தொடர்பில் சுகிர்தன் தொடர்ந்து கருத்துரைக்கையில்: "வவுனியா மாவட்டத்திலிருந்து காங்கேசன்துறை வரையான தொடருந்துப் பாதையில் உள்ள கடவைகளில் அநேகமான விபத்துக்கள் சமீபகாலமாக இடம்பெறுகின்றன. இது தொடர்பில் முன்பும் பிரேரணைகளை கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இன்று வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. மாகாணசபை நடவடிக்கைக் குறிப்பேட்டில் (கன்சாட்) பிரேரணைகள் பதிவதை விடுத்து ஆக்கபூர்வமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு மாகாண சபையும் கொழும்பு அரசும் இணைந்து ஒருமாதத்துக்குள் நடவடிக்கை எடுக்கவேண்டும். தவறின் அனைத்து மாகாண சபை உறுப்பினர்களும் இணைந்து ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபடுவோம்" என்றார்.

"வடக்கு மாகாணத்தில் உள்ள தொடருந்துத் திணைக்களத்தினர், மாவட்டச் செயலர்கள், பொலிஸார் ஆகியோர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாட வேண்டும். அதற்கான ஒழுங்குகளை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மேற்கொள்ள வேண்டும். தொடருந்துப் பாதை அமைக்க உதவிய இந்திய அரசின் உதவியுடன் பாதுகாப்பான கடவைகளை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

"இந்தியாவில் தடை செய்யப்பட்ட சமிக்ஞை விளக்குகளையே வடக்கில் பொருத்தியுள்ளனர். அதனால் தொடர்ச்சியாக சமிக்ஞை விளக்குகள் பழுதடைகின்றன. விபத்துக்கள் ஏற்பட அதுவும் காரணமாகிவிட்டது" என்று உறுப்பினர் லிங்கநாதன் தெரிவித்தார்.

"நாம் வழமையாக கொழும்பு அரசையே வலியுறுத்தி பிரேரணை கொண்டு வருகின்றோம். ஆனால் வடக்கு உள்ளூராட்சி அமைச்சைக் கோரியே நான் பிரேரணை சமர்ப்பிக்கிறேன். ஏனெனில் வடக்கில் உள்ள பிரதேச சபைகள், தத்தமது எல்லைகளில் உள்ள கடவைகளைக் கண்காணிக்க உத்தியோகத்தர்களை நியமிக்க ஏற்பாடுகள் செய்யலாம்.

அதற்கு உள்ளூராட்சி அமைச்சர் என்ற வகையில் வடக்கு முதல்வர் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று தவராசா வலியுறுத்தினார். உரிய நடவடிக்கை எடுப்பதாக முதலமைச்சர் விக்னேஸ்வரன் பதிலளித்தார். (4-8)

## வடக்கு கல்விச் செயலர் இடமாற்றம்;

# மாகாண சபைத் தலைமைகள் மீது தமிழர் ஆசிரியர் சங்கம் பாய்ச்சல்

யாழ்ப்பாணம், ஓக. 25

"வடக்கின் நிர்வாக நடைமுறைகளை முறையாகக் கையாளத் தெரியாத மாகாண சபைத் தலைமைகள் அதிகாரிகளை இடமாற்றஞ் செய்து மக்களைத் திசை திருப்பப் பார்க்கின்றனர்." இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பில் சங்கம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு மாகாணம் கல்வியில் பின்னடைவுகளைச் சந்தித்துக்கொண்டிருக்கின்றது. இதற்கு அதிகாரிகளையோ, அதிபர்களையோ, ஆசிரியர்களையோ குறைகூறமுடியாது. வடக்கின் அரசியல் கள நிலவரமே இதற்கு முழுமையான காரணம்.

மாகாண நிர்வாக நடைமுறைகளுக்குப் பின்னர் வடபுலத்துக் கல்வியில் என்றுமில்லாத அளவுக்கு வீழ்ச்சி ஏற்பட்டுவருகின்றது. இதன் ஒரு கட்டமே வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு செயலாளர் இ.இரவீந்திரனின் இடமாற்றம். வடக்கு மாகாணத்தின் கல்வி நிலையை உயர்த்துவதற்காக அவர் பல்வேறு திட்டங்களை வகுத்து செயல்வடிவங்களைக் கொடுக்க முனையும்வேளை இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண நிர்வாக நடைமுறை வந்த பின்னர் கல்வி அமைச்சில் மட்டுமல்ல அனைத்து அமைச்சுகளிலுமே தலையீடுகளும், நெருக்கீடுகளும் அதிகரித்துள்ளன. இடமாற்றங்களை வழங்கிவிட்டு அதற்குப் போலியான பொருத்தமில்லாத காரணங்களைக் கூறுகின்றனர் என்றுள்ளது. (4)

20 வது
ஆண்டு நிறைவு
1997 - 2017

011 5 411 411
www.sdb.lk | @SDBbank
www.facebook.com/sdbbank

# உங்களுக்கு எங்களின் வாழ்த்துக்கள்



சணச அபிவிருத்தி வங்கியின் அடுத்த நிலையாகிய, நாடளாவிய ரீதியில் காணப்படும் சிறு வணிகங்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு மென்மேலும் சேவை வழங்கலை விஸ்தரிப்பது தொடர்பில் ஆதரவினை வழங்கலானது, பிரமிட்டின் அடித்தளத்தில் நிதி உட்செலுத்தல்கள் தொடர்பிலான எமது நோக்கின் கருப்பொருளாக காணப்படுகின்றது. இவ்வெற்றிகரமான நிறுவனத்தின் மூலம் எமது சொந்த நிதிவளங்களுக்கும் அப்பால் எமது தாக்கத்தினை அதிகரிக்க முடியுமாகிய அதேவேளை, உள்நாட்டு முயற்சியாண்மையாளர்கள் மற்றும் அவர்களது சமூகங்களையும் வலுப்படுத்த முடியும்.

**யெஹான் ரிக்டரிங்**

பிரதான நிறைவேற்று அதிகாரி - FMO

இலங்கையின் கிராமிய சமூகத்தில் நிலையான வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியை ஏற்படுத்தியதனூடாக பூர்த்தி செய்யப்பட்டுள்ள 20 வருடத்தினை கொண்டாடுவதையிட்டு சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சியின் தோற்றுவிப்பாளர்கள், தலைவர்கள், அங்கத்தவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு கனடாவின் கூட்டுறவு அபிவிருத்தி மன்றத்தின் இயக்குனர் சபை சார்பாக எமது மனம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். எதிர்வரும் காலங்களில் தொடர்ந்தும் வெற்றி மற்றும் நேர் விளைவுகளை அடைந்துகொள்வதற்கும் எனது ஆசிகளை கூறிக்கொள்கின்றேன்.

**மிஷெல் ஆஸ்காட்**

இடைக்கால தலைவி - கனேடிய கூட்டுறவு அபிவிருத்தி மன்றம்



வங்கியின் 20 வருட பூர்த்திக் கொண்டாட்டத்திற்குஎனது நல்வாழ்த்தினை தெரிவித்துக் கொள்வதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

தெற்காசியப் பிராந்தியத்திலேயே தனித்துவமானதொரு வங்கி மாதிரியாக SDB வங்கியினை நாம் காண்கின்றோம். தெற்காசியப் பிராந்தியத்தில் காணப்படும் ஏனைய வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு அவர்கள் ஒரு முன்னுதாரணமாக திகழ்கின்றனர் என நாம் நம்புகின்றோம். SDB வங்கியானது நாடளாவிய ரீதியில் 91 கிளை வலையமைப்புடன் மக்களுக்கு தனது சேவையை வழங்குவதோடு, அவர்களுடைய அபிவிருத்தித் தந்திரோபாயமானது 1 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகையினைக் கொண்ட சணச சமூகத்துடனான நெருக்கமான உறவை பேணலிலேயே தங்கியுள்ளது என்பதை நாம் கண்காணித்துள்ளோம். அவர்கள், இயலுமை விருத்திப் பயிற்சிகள், நிதிக் கல்வி, சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மை, சந்தைப்படுத்தல் தொடர்புகள் போன்ற வங்கிப்படுத்தல் வசதிகளுக்கு அப்பாற்பட்ட பல்வேறு வசதிகள் மற்றும் நிதியை பெற்றுக்கொள்வதற்கான வசதியளித்தல் போன்றவற்றின் மூலமாக முறைசாரா துறையினருக்கும் தமது சேவைகளை வழங்குகின்றார்கள்.

'SBI Holding Groups' (ஜப்பான்)ற்கு இலங்கையில் முதலிடுதல் தொடர்பில் உறுதியான ஈடுபாடு இருப்பதோடு, எமது SBI-FMO உருவாகும் ஆசிய நிதித்துறை நிதியினூடாக SDB வங்கியில் முதலிட்டுள்ளதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். டிஜிடல் கண்டுபிடிப்புகள் மற்றும் வாடிக்கையாளரை நெருங்குதலில் விஸ்தீரணம் போன்ற பல்வேறு வழிகளில் நாம் நமது ஆதரவினை தொடர்ந்தும் வழங்க உள்ளோம்.

இவ் 20 வருட பூர்த்தியினையிட்டு SDB வங்கியின் தோற்றுவிப்பாளர் கலாநிதி பி.ஏ.கிரிவந்தெனிய, தலைவி, பணிப்பாளர் சபை, முகாமைத்துவம் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**திரு. யொஷிடகா கிடாஓ**



சணச் அபிவிருத்தி வங்கி தனது 20 வருட பூர்த்தியினை கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இலங்கையின் கிராமிய பொருளாதாரத்தினை வலுப்படுத்துவதை தனது பிரதான நோக்காகக்கொண்ட சணச, மதிப்பிடமுடியாத நிதியுதவிகளை நுண், சிறு மற்றும் நடுத்தர முயற்சியாண்மைகள் மற்றும் கூட்டுறவுத்துறை என்பவற்றுக்கு வழங்குவதன் மூலம் நாட்டுக்கு அதன் சேவை வழங்கலில் முக்கியமானதொரு மைல்கல்லை அடைந்துள்ளது. சணசவானது அதன் ஆரம்ப காலமான 1980களிலிருந்து கனடாவுடனான நீண்டு நிலைத்திருக்கும் அபிவிருத்திக்கான பங்காளராக இருந்து வருகின்றது.

இலங்கைக்கான கனடா உயர் ஸ்தானிகர் காரியாலயமானது சணச அபிவிருத்தி வங்கி உட்பட சணச குழுவின் தேசத்தின் அபிவிருத்திக்கான தலைமைத்துவத்தை வழங்குவதில் முக்கியமான வகிபாகத்தினை கொண்டிருப்பதை மிகவும் பாராட்டுகின்றது. நுண், சிறு மற்றும் நடுத்தர கைத்தொழில்களானவை சந்தேகமற இலங்கையின் வளர்ச்சிக்கு தேவையான மிக முக்கியமான சமூக பொருளாதார இயந்திரமாகும் அதேவேளை, இம்முயற்சியாண்மையாளர்களுக்கு இத்தனை காலமும் சணசவினால் அதன் பரந்த கிளை வலையமைப்பினூடாக வழங்கப்பட்டு வந்த ஆதரவானது உண்மையில் பாராட்டத்தக்கதாகும். மேலும், பாலின சமத்துவம் மற்றும் பெண்களை வலுப்படுத்தல் என்பவை இலங்கை மற்றும் கனடாவிற்கு முன்னிலைப்படுத்தப்பட்ட நோக்கமாக ஆகிய போது, சணச அபிவிருத்தி வங்கியானது மாற்றத்திற்கான முகவர்களாக பெண்களை அடையாளம் கண்டுகொண்டதும், பெண் முயற்சியாண்மையாளர்களை வலுப்படுத்தலை மேம்படுத்தக்கூடிய உத்தமி என்று தலைப்பிடப்பட்ட பொருத்தமான நிதி உபகரணத்தினை கொண்டிருப்பதும் குறிப்பிட்டுக் கூறக்கூடிய விடயமாகும்.

இந்நீண்டு நிலைத்திருக்கும் சணச மற்றும் கனடாவிற்கு இடையேயான பங்குடமை உறவானது, இன்று இலங்கையின் முயற்சியாண்மையாளர்களுக்கான நிதி மத்திய நிலையம் (EFECS) ஒன்றை உருவாக்கும் புதிய செயற்றிட்டத்தின் மூலம் தொடரும் அதேவேளை, இம்மத்திய நிலையமானது, பெறுமதிச் சங்கிலியை உருவாக்குவதனூடாக நிலைத்திருக்கக்கூடிய வகையில் நுண், சிறு மற்றும் நடுத்தர முயற்சியாண்மையாளர்கள், குறிப்பாக பெண்களுக்கு நிதி மற்றும் வணிகத்தை முகாமைசெய்வதற்கான இயலுமையினை அதிகரிப்பதற்கு தமது ஆதரவினை வழங்குவதை நோக்காகக்கொண்ட கனேடிய அரச சார்பற்ற நிறுவனமொன்றான டெஸ்ஜார்டின்ஸ் அபிவிருத்தி சர்வதேசம் (DID) த்துடனான பங்குடமையுடன் உருவாக்கப்படுகின்றது.

சணச அபிவிருத்தி வங்கியின் பொருளியல் செழுமையினை நோக்கி நாட்டினை வழிநடத்தும் குறிக்கோள் மிக்க பயணத்திற்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**மேதகு ஷெல்லி வைடிங்**



சணச அபிவிருத்தி வங்கிக்கு அதன் 20வது வருட பூர்த்தியினை முன்னிட்டு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதோடு, நாடளாவிய ரீதியில் நுண் மற்றும் சிறு வணிகங்களின் வளர்ச்சிக்கு உதவுவதில் தொடர் வெற்றியை வங்கி பெற்றுக்கொள்வதற்கும் எமது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

SDBயானது இலங்கையில் காணப்படும் IFCயின் குழுக்களிடையே தனித்துவமானது. அவர்கள் சேவை வழங்கும் சமூகத்தினரிடையே கிளைகளை நிறுவுவதன் மூலம் உறுதிமிக்க நிதி உட்செலுத்தல்களை ஏற்படுத்தும் இயலுமை கொண்டது. நகர மற்றும் கிராமிய பிரதேசங்களிலுள்ள இளைஞர், ஓய்வூதியம் பெறுவோர், பெண்கள் மற்றும் சிறுவணிகங்கள் உட்பட்ட, சமூகத்தில் குறைவான சேவை வழங்கப்பெற்ற பிரிவினரை நோக்கி செல்வதற்கு சணச கூட்டுறவு வலையமைப்பிற்கு தலையீட்டினை மேற்கொள்வதற்கு இது வழிவகுக்கின்றது.

நுண், சிறு மற்றும் நடுத்தர முயற்சியாண்மைகள் அல்லது MSMEகள் என்பவை நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 52% பங்களிப்பு செய்வதன் மூலம் இலங்கைப் பொருளாதார வளர்ச்சியில் விஷேட பங்காற்றுகின்றன. எவ்வாறெனினும், இலங்கையிலுள்ள சிறுவணிகங்கள் நிதிச் சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு பற்றாக்குறையான வாய்ப்புக்களையே தொடர்ந்தும் பெற்றிருப்பதோடு, இது அவர்களின் வளர்ச்சிக்கான சாத்தியப்பாடுகளை வரையறுக்கக்கூடியதாகவும் காணப்படுகின்றது.

இலங்கையில் 98%க்கும் அதிகமான முயற்சியாண்மைகள் MSMEகளாக வகைப்படுத்தப்பட்டிருப்பதோடு, தீவிர வறுமை நிலையினை முடிவுக்கு கொண்டு வருதல் மற்றும் பகிரப்பட்டுள்ள செழுமையினை அதிகரித்தல் என்பவற்றிற்கு உதவுவதற்கு ஏற்ற வகையில் நிதிப்படுத்தல் இடைவெளியானது சுருக்கப்பட்டிருப்பதானது சிறந்த தீர்மானமொன்றாகியுள்ளது.

இலங்கையானது அதன் வளர்ச்சிக்கான சாத்தியப்பாடுகளை அதிகரிக்க எதிர்பார்க்கும் வேளையில், தனது 20ஆவது ஆண்டு நிறைவை இவ்வருடம் கொண்டாடும் சணச அபிவிருத்தி வங்கி போன்ற நிதி நிறுவனங்களானவை, சிறு வணிகங்களின் வளர்ச்சிக்கு தேவையான நிதி வசதியை பெற்றுக்கொள்வதற்கு உதவும் ஒரு முக்கிய வகிபாகத்தினை கொண்டிருக்கின்றன. அவர்கள் எதிர்காலத்தினை நோக்காகக்கொள்ளும் போது, நிதி உட்செலுத்தல்களுக்கு ஆதரவு வழங்கல் மற்றும் பொருளாதார வளர்ச்சியின் நிலையான தன்மையினை உறுதிப்படுத்தல் போன்றவற்றுக்காக புத்தாக்கமுடைய மற்றும் பரந்த அளவில் மக்களால் பெற்றுக்கொள்ளக்கூடியதான வியாபார தீர்வுகளின் மீது வங்கியானது தொடர்ந்து தனது நோக்கத்தை செலுத்தல் வேண்டும்.

உலக வங்கிக் குழுவில் ஒரு அங்கத்தவராகிய IFCயானது, இலங்கையில் அதிகமாக பெற்றுக்கொள்ளக்கூடியதும் கிடைப்பனவு மிக்கதுமான முறைசார் நிதிச் சேவைகளை மேற்கொள்வதன் மூலம், அதிகமான சிறு வணிகங்கள் மற்றும் கூட்டுறவுகளை அடைந்துகொள்ளக்கூடிய வகையில் சணச அபிவிருத்தி வங்கியுடன் 2009ஆம் ஆண்டிலிருந்து பணியாற்றுவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

சணச அபிவிருத்தி வங்கியின் மூலதன உரிமை பங்கினை கொண்டிருப்பதற்கு மேலதிகமாக IFCயானது, நுண் மற்றும் சிறு வணிகங்கள், கூட்டுறவுகள் மற்றும் நாடளாவி ரீதியிலான சில்லறை வாடிக்கையாளர்களை அடைந்துகொள்வதனை அதிகரித்தல் மற்றும் நிதி உட்செலுத்தல்களை அதிகரித்தல் போன்றவற்றிற்கு வங்கிக்கு உதவுவதற்கு ஆலோசனை சேவைகளையும் வழங்குகின்றது.

**அமீனா ஆரிப்**

SDB வங்கி

சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் விஷேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. Fitch Rating BB+ (stable), Reg No: PB62PQ

SINGER
யாழ் FIESTA
ஓர் அற்புதமான அனுபவம்

புத்தம் புதிய பொருள்களுக்கு

50% வரை கழிவு

ஆகஸ்ட்

25 26 27

உலகத் தரம்வாய்ந்த வர்த்தக நாமங்களின் வீட்டுப்பாவனைப் பொருள்கள்
ஒரே கூரையின் கீழ் நம்பமுடியா விசேட விலைக் கழிவுடனும் சலுகைகளுடனும்

காலை 09.30 - இரவு 09.00 வரை

நுழைவு இலவசம்

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம்

# தடைக்கல் அகற்றப்பட்டுள்ளது விசாரணைகள் துரிதமாகும்

## விஜயதாச பதவி விலகிய பின்னரும் அவரைச் சாடிய ஐதேக. எம்பிக்கள்

கொழும்பு, ஓக. 25

ஊழல் பற்றிய விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை, ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் 40 பேர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை, நேற்றுமுன் தினம் இரவு அரச தலைவர் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளானவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அது விரைந்து செய்யப்பட வேண்டும் என்று இந்தச் சந்திப்பில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முன்னாள் ஆட்சியாளர்களின் ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பில் விசாரணை நடத்தி நடவடிக்கை எடுப்பதற்குத் தடையாக இருந்த ஒரு கல் அகற்றப்பட்டுள்ளதாக அவர்கள் இதன்போது குறிப்பிட்டுள்ளனர்.

முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச மீது ஐக்கிய தேசியக் கட்சியினர் மேற்படி குற்றச்சாட்டை முன்வைத்தே அவரைப் பதவி இறக்கம் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

## வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் - 27.08.2017

**இடம்** :- வலி.கிழக்கு கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம் - கோப்பாய்
**காலம்** :- 27.08.2017 (ஞாயிற்றுக்கிழமை)
**நேரம்** :- முற்பகல் 10 மணி
**தலைமை** :- திரு.மு.சிவசுந்தரலிங்கம் (சங்கத் தலைவர்)

மேற்படிச் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டத்துக்கு சமூகமளிக்கத் தகைமையுடைய சகல உறுப்பினர்களும் இவ் அறிவித்தலை பொது அறிவித்தலாக ஏற்று மேற்படி தினத்தில் கூட்டத்துக்கு சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தலைவர்,**
**வலி.கிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்,**
**கோப்பாய்.**

## அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இலங்கைக்கிளை

**முன்பள்ளிஆசிரியராகுங்கள்!பட்டம் பெறுங்கள்!**

- இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்டபட்டங்கள்.
- இலங்கையில் முதல்முறையாக முன்பள்ளிக் கல்வியில் பட்டப்படிப்பு.
- புகழ்பெற்ற அதிஉயர் பல்கலைச்கழகத்தின் முன்பள்ளிக் கல்வியி BA பட்டம்.
- புகழ்பெற்ற விரிவுரையாளர்களினால் கற்பிக்கப்படுகிறது.
- பரீட்சைகள் யாவும் யாழ்ப்பாணத்திலேயே நடத்தப்படும்.
- பட்டமளிப்பு விழாவும் இங்கேயே நடத்தப்படும்.
- BA– முன்பள்ளிக் கல்வி
- BA– உள்ளடக்கல் கல்வி
- BA– கல்வி
- க.பொ.த உயர்தரத்தில் 3 பாடசித்தியுள்ள ஆண்,பெண் அனைவரும் விண்ணப்பிக்கலாம்
- வயதெல்லை கிடையாது

விண்ணப்பகள் பெறுவதற்கு இன்றே தொடர்புகொள்ளுங்கள்
முடிவு திகதி -10/09/2017
தொடர்புகொள்க–

Administrative Officer
Jaffna Academy of Tertiary Education
No.115, Thirunelvely North
(Opposite of Old DS Office-Nallur)
Jaffna. T.P No: - 021-221-5137
077-386-7458

## அடம்பன் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஆட்காட்டிவெளி பதவி வெற்றிடம்

01. பதவி : காவலாளி
02. ச.கு.இல. : 315/17
03. தகைமைகள் : 8 ஆம் வகுப்பு கல்வி சான்றிதலும், நல்ல தேக ஆரோக்கியமும் இருத்தல் வேண்டும்.
04. வேறு தகைமைகள் :
05. வயது எல்லை : 18 - 45 இக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
06. சம்பளம் : 12800 - 100 X 10 - 110X10 -14900
153600 - 1200X10 - 1320 X 10 - 178800
07. பொது : தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பத்தாரி ரொக்கப் பிணையாக சம்பளத்தில் ஐந்து மடங்கினைச் செலுத்துவதற்குத் தயாராக இருத்தல் வேண்டும் சங்கத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட விண் ணப்பப் படிவத்தைப் பூர்த்திசெய்து பொருத்தமான சான்றிதழ் பிரதிகளுடன் தலைவர் அடம்பன் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஆட்காட்டி வெளி அடம்பன் மன்னார் எனும் முகவரிக்கு 09.09.2017 மாலை 4.00 இக்கு முன்பாக கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாக சமர்ப்பித்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சையின் போது சான்றிதழ்களின் மூலப்பிரதி சமர்ப்பிக்கப்படவேண்டும்.

பொது முகாமையாளர்
அடம்பன் பனை, தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் அடம்பன்

## கேள்வி அறிவித்தல் சபைநிதி மூலமான வேலைத்திட்டம் - 2017 துணுக்காய் பிரதேசசபை, துணுக்காய்

**வேலையின் பெயர்:-**
1. துணுக்காய் பொதுநூலகம் அமைத்தல் கட்டம் II

**ஒப்பந்த இலக்கம்:-**
NP/14/44(5)/02/18(2)/2017

**துணுக்காய் பிரதேசசபை நிதி மூலமான வேலைத்திட்டத்தின் கீழ் ஒருபகுதி நிதி கீழ் காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட திட்டத்துக்கான கொடுப்பனவிற்கெனப் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.**

01. **தலைவர், பெறுகைக்குழு துணுக்காய் பிரதேசசபை, முல்லைத்தீவு, வடமாகாணம்,** தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.
02. தேசிய போட்டிகேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
03. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List)சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும்.அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி அமைப்பிற்கான இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள். கேள்விஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule)பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், துணுக்காய் பிரதேச சபை,துணுக்காய் (தொலைபேசி: -024-3243623** E-mail:psthunukai@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 08.09.2017 ஆம் திகதிவரை மேற்கூறிய இடத்தில் வேலைநாள்களில் மு.ப 09.00 மணிமுதல் பி.ப 14.00 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை பிரதேச சபை, துணுக்காய் எனும் முகவரியில் 25.08.2017 ஆம் திகதியிலிருந்து 08.09.2017 வரை மு.ப 09.00 மணிக்கும் பி.ப14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/- (வரிநீங்கலாக) செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், துணுக்காய் பிரதேச சபை,துணுக்காய்** எனும் முகவரிக்கு 08.09.2017 ஆம் திகதி மாலை 14.30மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கேள்விகளானது கேள்விசமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து 77 (எழுபத்தேழு–24.11.2017) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.
09. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலைவிவரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் (வீதி) | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம |
| NP/14/44(5)/02/18(2)/2017 | துணுக்காய் பொது நூலகம் அமைத்தல் கட்டம் II | 2.39 | 02 மாதம் | C8 | 24,000.00 | 22.12.2017 |

10. கேள்விகோரல் பற்றியமுன் கூட்டிய கூட்டம் 31.08.2017ஆம் திகதி பி.ப14.30 மணிக்கு துணுக்காய் பிரதேசசபைக் கட்டடத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமதுசொந்தச் செலவில் கலந்துகொள்ளமுடியும்.

**தலைவர்.**
**உள்ளூர் அதிகாரபெறுகைச்சபை,**
**துணுக்காய் பிரதேச சபை, துணுக்காய். வடமாகாணம்**
**24.08.2017**

## கேள்வி அறிவித்தல் சபைநிதி மூலமான வேலைத்திட்டம் - 2017 துணுக்காய் பிரதேசசபை, துணுக்காய்

**வேலையின் பெயர்:-**
**1. அனிஞ்சியன்குளம் 13வது ஒழுங்கைதிருத்தவீதி**

**ஒப்பந்த இலக்கம்:-**
**NP/14/44(5)/02/18(1)/2017**

துணுக்காய் பிரதேசசபை நிதி மூலமான வேலைத்திட்டத்தின் கீழ் ஒருபகுதி நிதி கீழ் காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட திட்டத்துக்கான கொடுப்பனவிற்கெனப் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

01. **தலைவர், பெறுகைக்குழு, துணுக்காய் பிரதேசசபை, முல்லைத்தீவு, வடமாகாணம்.** தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்குமுத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட வேலைகளுக்காகக் கோருகின்றார்.
02. தேசியபோட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்விகோரப்படுகின்றது.
03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு. வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும். அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமானதரத்தில் வீதி அமைப்பிற்கான இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப் பட்டிருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள். கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், துணுக்காய் பிரதேச சபை, துணுக்காய் (தொலைபேசி: -024-3243623** E-mail:psthunukai@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 08.09.2017 ஆம் திகதிவரை மேற்கூறிய இடத்தில் வேலைநாள்களில் மு.ப 09.00 மணிமுதல் பி.ப 14.00 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை **பிரதேச சபை, துணுக்காய்** எனும் முகவரியில் 25.08.2017 ஆம் திகதியிலிருந்து 08.09.2017வரை மு.ப 09.00 மணிக்கும் பி.ப 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/- (வரிநீங்கலாக) செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர் துணுக்காய் பிரதேச சபை, துணுக்காய்** எனும் முகவரிக்கு 08.09.2017 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது.கேள்விநேரம் முடிவடைந்தஉடனேயேவருகைதரும் கேள்விதாரர் அல்லதுஅவர்களதுபிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கேள்விகளானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து 77 (எழுபத்தேழு–24.11.2017) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.
09. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழேஅட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்

| ஒப்பந்த இலக்கம் | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்.) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் (வீதி) | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு (ரூபா) | செல்லுபடி யாகும்காலம் |
| NP/14/44(5)/02/18(1)/2017 | அனிஞ்சியன்குளம் 13வது ஒழுங்கைதிருத்தவீதி | 5.08 | 02 மாதம் | C7 | 51,000.00 | 22.12.2017 |

10. கேள்விகோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 31.08.2017ஆம் திகதி பி.ப 14.30 மணிக்கு துணுக்காய் பிரதேசசபைக் கட்டடத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமதுசொந்தச் செலவில் கலந்துகொள்ளமுடியும்.

**தலைவர்.**
**உள்ளூர் அதிகாரபெறுகைச்சபை,**
**துணுக்காய் பிரதேச சபை, துணுக்காய். வடமாகாணம்**
**24.08.2017**

## கிழக்கில்
# இருதுருவங்களாகியுள்ள தமிழ் - முஸ்லிம் சமூகம்
## கவலைப்படுகிறார் ஹக்கீம்



இன நுணுக்குக் கண்ணாடி அணிந்துதான் மக்கள் அபிவிருத்தியையும், ஏனைய நிர்வாகக் கருமங்களையும் உற்றுநோக்குகின்ற நிலைமை காணப்படுகின்றது. எமது பகுதிக்கு, எமது இனத்திற்கு, எமது மக்களுக்கு என்ன வந்தடைந்திருக்கின்றது என்றே கேள்வி எழுப்பப்படுகின்றது. இந்த மனப்பாங்குகளால் கிழக்கு மாகாணத்தில் இரு சமூகங்களும் இரு துருவங்களாகப் பிரிந்து தனிமையாக நிற்கும் நிலை காணப்படுகின்றது. இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாணம் இன ஒருங்கிணைவுள்ள மாகாணம். இன சமத்துவமும் இங்கிருக்கின்றது. நாங்கள் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி எல்லோரும் சேர்ந்து ஒரு இணக்கப்பாட்டு ஆட்சியை முதலமைச்சர் நசீர் அஹமட் தலைமையில் நிறுவியுள்ளோம். அனைத்து சமூக மக்களின் எதிர்பார்ப்பையும் தேவைகளையும் தழுவியதாக மாகாண நிர்வாகம் செயற்படுகின்றது என்று நாங்கள் நினைத்துக் கொண்டிருக்கின்றோம்.

ஆனால் அடிமட்ட மக்களிடத்தில் அவ்வாறான எண்ணம் இல்லை. அவர்களது உணர்வலைகள் வித்தியாசமாக இருக்கின்றன. அவர்கள் இன நுணுக்குக் கண்ணாடி அணிந்துதான் அபிவிருத்தியையும், ஏனைய நிர்வாகக் கருமங்களையும் உற்று நோக்குகின்றனர். இது ஆபத்தானது. இது இரண்டு சமூகமும் இரு துருவங்களாகப் பிரிந்து நிற்பதையே காட்டுகின்றது.

இந்த நிலைமை உடனடியாக அகற்றப்பட வேண்டும். ஆளுநர், முதலமைச்சர், அரசியல்வாதிகள் எல்லோரும் சேர்ந்து இத்தகைய துருவமயப்பட்ட சூழலை மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். கல்வியை சக்தி வாய்ந்த உபகரணமாகப் பயன்படுத்த முடியும். எல்லா வகையான பிரிதல்களையும் ஒன்றிணைப்பதற்குக் கல்வி உதவும்.

துரதிஷ்டவசமாக எல்லா விடயங்களையும் குறுகிய இன நுணுக்குக்காட்டி கொண்டு பரிசோதிப்பது கவலையளிப்பதாய் உள்ளது. இது ஐக்கியப்பட்ட அரசை நடாத்திச் செல்லும் எமக்குச் சங்கடத்தை ஏற்படுத்துகின்றது. இன ரீதியில் பிரிந்து தனிமைப்படுத்தப்பட்டு சமத்துவமின்றி துருவப்பட்டுள்ள சமூகத்தை ஐக்கியப்படுத்த வேண்டும். பழைய சிந்தனைகளை மறந்து ஆக்கபூர்மானபுதியநோக்குப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். இது காலத்தின் தேவையாகும் - என்றார். (5,46)

# போதையை ஒழிக்க வெளிநாட்டு உதவி
## அதிகாரிகளுக்கு மைத்திரி பணிப்பு

கொழும்பு, ஓக. 25

நாட்டில் போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கு வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

போதைப்பொருள் ஒழிப்புத் தொடர்பாக நேற்று முன்தினம் பிற்பகல் அரச தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற சிறப்புக் கலந்துரையாடலின்போதே அவர் இந்தப் பணிப்புரையை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் போதைப்பொருள் பரவுவதைத் தடுப்பதற்குப் பொலிஸாரும் முப்படைப் புலனாய்வுப் பிரிவுகளும் சிறப்பு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். சட்டவிரோத போதைப்பொருள் விற்பனை மற்றும் நாட்டிற்குள் போதைப்பொருள் கொண்டு வருவதற்கு எதிரான சட்டங்கள் எவ்வளவு தூரம் பலமாக இருந்தபோதும், நாட்டின் சில பிரதேசங்களில் போதைப்பொருள் பரவுவது அதிகரித்திருப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

நாட்டிற்குள் போதைப்பொருளைக் கொண்டு வருவதைத் தடுப்பதற்குத் தற்போது நடைமுறையில் உள்ள நிகழ்ச்சித்திட்டங்களை மேலும் இறுக்கமாக நடைமுறைப்படுத்த வேண்டும். இந்த நடவடிக்கைகளில் வெளிநாடுகளின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளுங்கள். நான் மேற்கொண்ட பல வெளிநாட்டு பயணங்களின் போது போதைப் பொருள் நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்க பல நாடுகளின் அரச தலைவர்கள் உறுதியளித்திருந்தனர்.

பாடசாலைப் பிள்ளைகளை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் போதைப்பொருள் வியாபாரத்தைத் தடுப்பதற்கு எதிர்காலத்தில் விரிவான நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும். போதைப்பொருள் ஒழிப்புத் தொடர்பாக முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்கி அந்தத் திட்டங்களைப் பலப்படுத்தும் விடயத்தில் அரசு தனது பொறுப்பை முழுமையாக நிறைவேற்றும் - என்றார். (5)

## ஐ.நா. தீர்மானம்
# இலங்கையின் முன்னேற்றம் என்ன?
## அழுத்தம் கொடுக்கக் கோருகிறது மன்னிப்புச் சபை

கொழும்பு, ஓக. 25

இலங்கை வழங்கிய முக்கியமான வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் முன்னேற்றங்களைக் காண்பிக்குமாறு இலங்கை அரசுக்கு ஐ.நா. மனித உரிமைகள் சபை அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று பன்னாட்டு மன்னிப்புச் சபை கோரியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடர் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில், மனித உரிமைகள் சபைக்குச் சமர்ப்பித்துள்ள அறிக்கையிலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதன் முன்னேற்றங்களை உறுதிப்படுத்த வேண்டும் என்று இலங்கைக்கு ஐ.நா மனித உரிமைகள் சபை அழைப்பு விடுக்க வேண்டும். இந்தத் தீர்மானத்தைச் செயற்படுத்துவதற்கு இலங்கை அரசு கடந்த மார்ச் மாதம் 2 ஆண்டுகள் கால அவகாசத்தைப் பெற்றுக் கொண்டது.

நல்லிணக்கப் பொறிமுறைகளுக்கான கலந்தாய்வு செயலணியின் பரிந்துரைக்கு அமைய, உண்மை, நீதி மற்றும் இழப்பீட்டுப் பொறிமுறைகளுக்கான வரைவை உருவாக்க வேண்டும்.

இவை பன்னாட்டுத் தரம் வாய்ந்ததாக இருக்கும் வகையிலும், சட்ட மறுசீரமைப்பு மற்றும் மீள நிகழாமையை உறுதி செய்வதற்கான ஏனைய நடவடிக்கைகளை எடுப்பதற்கும், ஐ.நா. மனித உரிமைகள் சபை தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளை வழங்க வேண்டும்.

பன்னாட்டுச் சட்டம் அல்லது ஏனைய மோசமான மனித உரிமை மீறல் குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் மற்றும் வழக்கு நடவடிக்கைகளுக்குப் பரஸ்பர சட்ட உதவிகளையும், ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும், என்று ஐ.நா. மனித உரிமைகள் சபையிடம் பன்னாட்டு மன்னிப்புச் சபை கோரியுள்ளது. (5)

## விபத்துக்களில் தினமும்
# 8பேர் சாவு

கொழும்பு, ஓக. 25

இலங்கையில் விபத்துக்களால் தினமும் 8 பேர் உயிரிழக்கின்றனர். 12 தொடக்கம் 15 பேர் வரையில் படுகாயங்களுக்கு உள்ளாகின்றனர். என்ற அதிர்ச்சிகரமான தகவலை வெளியிட்டார் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர.

பொலிஸ் குற்றப் பதிவுப் பிரிவில், போக்குவரத்து தொடர்பில் பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்த 156 இளநிலைப் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்றுபயங்கரவாதத்தாக்குதல்கள் இல்லை. பயங்கரவாதத்தால் உயிர், சொத்துக்கள் இழந்த காலம் மாறி அதனை ஒத்த இழப்புக்கள் இன்று விபத்துக்களால் வருகின்றது.

இவற்றைக் கட்டுப்படுத்த தண்டத் தொகை அதிகரிக்கப்படுகின்றது. வீதிகள் விசாலமாக்கப்படுகின்றன. ஊடகங்கள் ஊடாகத் தெளிவுபடுத்தல்கள் இடம்பெறுகின்றன.- என்றார். (5,31)

# ஆசிரியரின் அநாகரிகம்


கொழும்பு, ஓக. 25

சிறுவர் துர்நடத்தையுடன் தொடர்புடைய சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட தனியார் கல்வி நிறுவன ஆசிரியர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு புதுக்கடை நீதிவான் நீதிமன்றத்தினால் இந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாகத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை கூறியுள்ளது.

15 வயது மாணவனுக்கு ஆபாச படங்களைக் காட்டி துர்நடத்தைக்கு உட்படுத்த முயற்சித்த ஆசிரியர் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சிறப்புப் பொலிஸ் விசாரணைப் பிரிவால் கைது செய்யப்பட்டிருந்தார்.

ஆசிரியர் தொடர்ச்சியாக மாணவனுக்குத்தொல்லை கொடுத்து வந்துள்ளமை விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது என்று சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கூறியுள்ளது. (5)



# சட்டரீதியான கருக்கலைப்பு இலங்கையில் அறிமுகமாகும்
## மருத்துவ நிபுணர் தகவல்

கொழும்பு, ஓக. 25

இரு காரணங்களுக்காகக் கருக்கலைப்புக்கு அனுமதியளிக்கும் வகையில் சட்டம் கொண்டு வரப்படவுள்ளதாகச் சிறப்பு சமூக மருத்துவ நிபுணர் கபில ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள சுகாதாரக் கல்வி பணியகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாலியல் வன்முறையால் உருவாகும் மற்றும் மரபணுப் பிறழ்வுக்குள்ளான கருக்களைக் கலைப்பதற்குச் சட்ட ரீதியாக அனுமதியளிக்கும் வகையில் இந்தச் சட்டம் கொண்டு வரப்படவுள்ளது. உத்தேச சட்ட வரைவுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் பெற வேண்டியுள்ளது.

சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர் கருவை கலைப்பதா? அல்லது சுமப்பதா? என்ற தீர்மானத்தைத் தாய் தான் எடுக்க வேண்டும். அரச மருத்துவ மனையில் கருக்கலைப்புக்கான சிபாரிசுகளை உரிய இரு மருத்துவ நிபுணர்கள் செய்ய வேண்டும்.

தாயொருவர் கர்ப்பம் தரித்து 20ஆவது வாரத்தில் சிசுவின் மரபணு பிறழ்வு பற்றி மருத்துவர்களினால் இனம் காண முடியும். பிறப்பு குறைபாடுடைய பிரசவத்தினால் தாய்மார்கள் பல்வேறு துன்பங்களை வாழ்நாள் முழுவதும் அனுபவிக்கின்றார்கள். அந்த பிள்ளையும் உயிர் வாழ துன்பப்படுகிறது. உத்தேச சட்ட வரைவின் மூலம் தாயின் வலியையும் தாய் சேய் துன்பங்களையும் தடுக்க முடியும் - என்றார். (5)

## பிள்ளைப் பேறு அற்றோர்
# 15% பேர்
## இலங்கையில் இந்த நிலை

கொழும்பு, ஓக. 25

இலங்கையில் 15 சதவீதத்துக்கும் அதிகமானோர், பிள்ளைப்பேறு அற்ற நிலையில் உள்ளனர் என்று இனங்காணப்பட்டுள்ளதாகச் சுகாதார அமைச்சினால், அமைச்சரவையின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இவற்றைக் கருத்திற் கொண்டு, பிள்ளைப்பேறு அற்ற தன்மை தொடர்பில் அறிவுறுத்தும் வேலைத்திட்டத்தை நாடளாவிய ரீதியில் முன்னெடுப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரச தலைவர் தலைமையில் செவ்வாய்க்கிழமை கூடிய அமைச்சரவைக் கூட்டத்திலேயே, போசணை மற்றும் சுதேச அமைச்சர் ராஜித சேனாரத்னவால் தாக்கல் செய்யப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பிள்ளைப்பேறு அற்ற தன்மை தொடர்பான பிரச்சினைக்காக, பொதுமக்கள் மற்றும் சுகாதார சேவை அதிகாரிகளின் கவ னத்தைச் செலுத்தி, இந்த ஆண்டில் தேசிய குடும்பத் திட்டமிடல் தினத்தை செப்ரெம்பர் 26ஆம் திகதி கடைப்பிடிப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (5)

# சின்னையா தளபதியானதில் தவறேதுமில்லை

## அமெரிக்க திணைக்களத்தில் பணியாற்றியது மேலதிக தகைமை என்கிறார் முன்னாள் படை அதிகாரி



கொழும்பு, ஓக. 25

"ட்ராவிஸ் சின்னையா கடற்படைத் தளபதி யாக நியமிக்கப்பட்ட தில் எந்தத் தவறும் இல்லை. அமெரிக்க அரச திணைக்க ளத்தில் அவர் சேவை யாற்றியதை மேலதிக தகைமையாகக் கருதி, சின்னையாவை தளபதியாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நியமித்திருக்கலாம்" என்று முன்னாள் பிரதி அமைச்சரும் ரியர் அட்மிரலுமான சரத் வீர சேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வின் பின்னர் பத்தி ரிகை யாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை கடற்படையின் புதிய தளபதியாக சின்னையா நியமிக்கப்பட்டுள்ளதில் தவறு இல்லை. கடற்படைத் தளப தியை நியமிக்கும் அதிகாரம் அரச தலைவரின் கைகளி லேயே உள்ளது. அரசமைப்பின் அடிப்படையில் அவர் செயற்பட்டிருக்கின்றார்.

இவர் முன்னர் கடற்படையில் இருந்து விருப்பத்தில் பதவி விலகியிருந்த நிலையில் அரசியல் பழிவாங்கலுக்குள்ளான தாலேயே மீண்டும் கடற்படையில் இணைத்துக் கொள்ளப் பட்டார். இதில் சற்றுச் சிக்கல் இருக்கின்றது. கடற்படை அதி காரி என்ற அடிப்படையில் அவர் சிறந்த வீரர். அமெரிக்க அரச திணைக்களத்தில் பணியாற் றியவர் என்பதைக் காரணமாகக் கூறி அவர் பதவிக்குப் பொருத்தமற்றவர் என்று கூற முடி யாது. அங்கு பணியாற்றியதை மேலதிக தகை மையாகப் பார்க்க வேண்டும் - என்றார்.

(5,31)

# விஜயதாச போன்று குற்றச்சாட்டுக்கள் என்மீது இல்லை

## சுசில் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 25

முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாச எதிர்நோக்கும் குற்றச்சாட்டுப் போன்று நான் எந்தவொரு குற்றச் சாட்டையும் எதிர்கொள்ள வில்லை. இவ்வாறு சிறி லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்க ளத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பத்திரிகையா ளர் சந்திப்பில், அமைச்சர வைக் கூட்டுப் பொறுப்பை மீறியதாக விஜயதாச மீது நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கின்றது. இதேபோன்று அமைச்சர் சுசில்பிரேம ஜயந்தவும் செயற்படுகின் றார். அவர் மீதுநடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேள்வி எழுப்பப்பட்டிருந் தது. இது தொடர்பில் கருத் துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தா வது:

எனக்கு அமைச்சரவைக் கூட்டுப் பொறுப்பைப் பற்றித் தெரியும். பொதுமக்கள் மத் தியில் எவ்வாறு பேச வேண்டும் என்பதும் தெரியும். விஜயதாச போன்று என்மீது எந்தக் குற்றச்சாட்டும் இல்லை - என்றார்.

(5)

**மருந்து இல்லா மருத்துவம்**

மாறாத நெஞ்சு சளி, முள்ளத்தண்டு விலகல், நாட்பட்ட வாதம், குழந்தை இன்மை மற்றும் அனைத்து வித நாட்பட்ட ரோகங்கள், பக்க விளைவுகள் இன்றி குணமாக்கலாம்

**வைத்தியரை யாழில் 25, 26, 27 இல் சந்திக்கலாம்**

Dr.R.Sivagurunathan
077 730 1669

**தேவை**

* கொப்பறா. தேங்காய் கொள்வனவு செய்யப் படும்.
* மில்வேலை செய்யக்கூடியவர்கள் தேவை.

077 772 2215 (CS 7069) (14)

**வேலையாள்கள் தேவை**

கொடிகாமத்தில் இயங்கும் பதிப்பகம் ஒன்றுக்கு கணினி அறிவுடைய, பழக விரும்பும் பெண்கள் தேவை.

076 694 1854

**வீடு வாடகைக்குண்டு**

யாழ். ஆஸ்பத்திரியில் இருந்து 1Km தூரத்துக்குள் உடனடியாக வாடகைக்குண்டு.

076 900 2588

**வைத்தியம்**

தலைமுடி உதிர்தல், முள்ளந்தண்டு பிரச் சினை, பாரிசவாதம், சலரோகம், உடல் பருமன் குறைத்தல் அல்லது கூட்டுதல் (வயிறு / மார்பு / கை) ஆண்மைக் குறைபாடு கள், குழந்தையின்மை போன்றவற்றுக்கு மருந்தின்றி, பக்கவிளைவின்றி அக்குபன்ச் சர் சிகிச்சை வழங்கப்படும்.

நோய் எதுவாயினும் தீர்வு உண்டு.

(ACU) Dr.Sanker
077 035 7307

**மாணவர்களுக்கான புதிய கற்கைநெறிகளுக்கு உடனடியாக விண்ணப்பிக்கவும்**

**பின்வரும் பயிற்சிநெறிகள் Sept.2017 ஆரம்பம்**

Computer Certificate Courses ( 3 – 4 months Part time)

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- AutoCAD 2D & 3D Modeling

Certificate in Craft Courses (6 months Full Time)

- மின் இணைப்பும் நிர்மாணமும் - Electrical Wiring
- மோட்டார் வாகனம் திருத்துதல் - Motorcycle Mechanic
- இலத்திரனியல் சாதனங்கள் திருத்துதல் - Radio, TV & Electronic Servicing

மூன்றாம் நிலைக்கல்வி தொழி[illegible] ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டது.
பதிவு இலக்கம் : P25/0014, Facilities : Hostel, Library & Sports

For More Information:
DIRECTOR
Jaffna College Institute of Technology.
Vaddukoddai, Jaffna, Sri Lanka.
Tel: 021 321 3139/ 021 225 0975 E-mail: ejcit@sltnet.lk

# புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு மாங்குளம் சந்தைக் கட்டடத்தின் கடைகளுக்கான திறப்புப் பண மீள்கேள்விஅறிவித்தல்

**புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட மாங்குளம் சந்தைக் கட்டடத்தின் கடைகளுக்கான திறப்புப்பணகேள்விகள் 2017 புரட்டாதி 15 ஆம் திகதி தொடக்கம் கீழ் குறிப்பி டப்படும் மாதாந்த குத்தகையின் அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்கு ஏதுவாக கோரப்படுகின்றன.**

**கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 2017.08.25 – 2017.09.11 அலுவலக நாள்களில் பிற்பகல் 12.00 வரை**

**கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:- 2017.09.11 நண்பகல் 12.30 மணிவரை**

**கேள்விகள் திறந்துபரசீலிக்கப்படும் திகதி :- 2017.09.11 பிற்பகல் 01.00 மணி**

கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரித்து மூலப் பிரதியை **செயலாளர், புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு** என்னும் முகவரிக்கு அரக்கு (சீல்) முத்திரையிட்டு தபாலுறை யின் இடது பக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் 2017.09.11 ஆம் திகதி பிற்பகல் 12.30 மணிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கெனப் புதுக்குடியிருப்பு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். மறு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு என்ற முக வரிக்கு 2017.09.11 பிற்பகல் 12.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

1. கேள்விப்பத்திரங்களை பெறவிரும்புபவர்கள் வதிவிடச் சான்றிதழ் மற்றும் கிராம சேவை யாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் நேரடியாக புதுக் குடியிருப்பு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திற்கு சமூகமளிக்க வேண்டும்.
2. கேள்விப்பத்திரங்கள் கீழ் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக் கட்டணங்கள், மீளளிக்கக் கூடிய வைப்புப்பணமும் செலுத்தி மேற் குறித்த காலத்திற்குள் பெற்றுக் கொள்ள வேண்டும். (விவரம் இணைக்கப்பட்டுள்ளது.)
3. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரங் கள் வழங்கப்படமாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப் படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்படமாட்டாது.
4. ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிரா கரிக்கப்படுவதுடன் கேள்விவைப்புப் பணமும் மீளளிக்கப்பட மாட்டாது.
5. கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூக மளிக்கமுடியும்.
6. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்வி கோரிக்கைகளை நிரா கரிக்கவும்,எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ சபை யினது செயலாளருக்கு அதிகாரம் உண்டு.
7. வாடகை வருடா வருடம் சபையால் நிர்ணயிக்கப்படும் கால ஒழுங்கில் வாடகையின் அடிப்படையில் 10% அதிகரிக்கப்படும்.
8. கடையை வாடகைக்கு எடுப்பவராலேயே நடத்தப்படவேண்டும். பிரதிநிதி எவரும் அவர் சார்பில் நடத்த அனுமதிக்கப்பட மாட்டார். இருந்தும் அவரது வாரிசு நடத்த அனுமதிக்கப் படுவார். (உதாரணம் :- மகன்,மகள்)
9. சபைச் செயலாளரின் அனுமதியின்றி எதுவித புனரமைப்பு வேலைகளும் மேற் கொள்ள முடியாது.
10. நிராகரிக்கப்பட்ட கேள்விதாரரின் பிணைப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்க முடியும்.
11. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் முழுத் தொகை யையும் முழுமையாகச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.
12. பெற்றுக் கொள்ளும் கடைகளில் ஏற்படும் பாதிப்புக்களுக்கு குத்தகைக்கு எடுத்தவரே பொறுப் புடையவராவார்.
13. குத்தகைக்கு பெற்ற கடைக்கான மின்சாரசெலவு குத்தகைக்கு பெற்றவரினாலேயே செலுத்தப் படவேண்டும்.
14. வாடகைப்பணம் மாதாந்தம் இறுதி வேலை நாளுக்கு முன்னர் தாங்களாகவே செலுத்தப் படவேண்டும். தவறின் 10% தண்டமும் சேர்த்துஅறவிடப்படும் என்பதுடன் வாடகைப் பணம் இரு மாதங்கள் தொடர்ந்து கட்டத்தவறின் முன்னறிவித்தலின்றி வாடகை ஒப்பந்தம் தானா கவே இரத்துச் செய்யப்பட்டதாகக் கருதப்படும்.
15. சபையின் செயலாளரின் இந்த ஒப்பந்தம் தொடர்பாக எவ்வித முடிவையும் ஏற்க வேண்டும். இது தொடர்பாகச் சபைக்கெதிராகவோ/ செயலாளருக்கு எதிராகவோ நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க முற்படலாகாது.
16. கேள்வி சம்பந்தமாக மேலதிக விவரங்களை/ தகவல்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலகநேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | கடை இலக்கம். | மாதாந்த வாடகை (ரூபா) | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (VAT,NBT நீங்களாக) | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம். | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை. |
|---|---|---|---|---|---|
| 01 | U.F - 01 | 2,000.00 | 1,000.00 | 11,000.00 | 108,000.00 |
| 02 | U.F - 02 | 2,000.00 | 1,000.00 | 11,000.00 | 108,000.00 |
| 03 | U.F - 03 | 2,000.00 | 1,000.00 | 11,000.00 | 108,000.00 |
| 04 | U.F - 05 | 2,000.00 | 1,000.00 | 11,000.00 | 108,000.00 |
| 05 | S - 01 | 2,000.00 | 1,000.00 | 11,000.00 | 108,000.00 |

**திரு.ந.ஜெயராஜா**
**செயலாளர், பிரதேசசபை,**
**புதுக்குடியிருப்பு.**

**2017.08.24**

# இரவிலும் குடிதண்ணீர் வழங்கல் தொடரும்

## ரவூப் ஹக்கீம் அறிவிப்பு

கொழும்பு, ஓக. 25

வறட்சியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு எந்தத் தடையுமில்லாமல் குடி தண்ணீர் விநியோகம் நடைபெறுகின்றது. இரவு நேரங்களிலும் பவுசர் மூலம் குடிதண்ணீர் விநியோகம் இனிமேல் இடம்பெறவுள்ளது. இவ்வாறு நீர் வழங்கல் மற்றும் நகர திட்டமிடல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் மக்கள் விடுதலை முன்னணியினால் நேற்றுமுன்தினம் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வறட்சி நீடித்த போதிலும் எந்தவொரு தடையும் இல்லாத நீர் வழங்கல் முன்னெடுக்கப்படுகின்றது. குருநாகலில் மாத்திரம் சிக்கல் நிலை ஏற்பட்டது. 340 பவுசர்களை பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பியுள்ளோம். வடக்கு கிழக்கு உள்பட அனைத்துப் பகுதிகளுக்கும் குடிதண்ணீர் பவுசர்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இடர் முகாமைத்துவ அமைச்சின் ஊடாகவும் பவுசர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கிணறுகளை மறுசீரமைத்து வருகின்றோம். இதுவரை ஆயிரத்து 225 குடிதண்ணீர்த் தாங்கிகள் பகிர்ந்து வழங்கப்பட்டுள்ளன. பகல்நேரங்களில் முன்னெடுத்த குடிதண்ணீர் விநியோகத்தை இனிமேல் இரவு நேரங்களிலும் பவுசர்கள் மூலம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம் - என்றார். (5,31)

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில் 02 . 03 . 1946

இறைவன் அடியில் 29 . 08 . 2014

திருமதி

**கண்ணகாதேவி உருத்திரசுந்தரம்**

திதி: ஆவணி சதுர்த்தி

அம்மா!

நின் நினைவுகள் என்றுமே
நிழலாக அன்றி நிஜமாக
மூன்றோடு நின்றுவிடாது - நம்
மூச்சுள்ள வரை தொடரும்
அருகில் நீயில்லா வலி
அனைவரையும் வாட்டுதம்மா!
மறுபிறவி எடுத்தாவது
மறுபடியும் வந்தெம்மை
அரவணைத்திட வேண்டி
ஆறுமுகனடி பணிகின்றோம்.

புலம் வீதி,
கைதடி மேற்கு,
கைதடி.

கா.உருத்திரசுந்தரம்
(ஓய்வு நிலை சாலை முகாமையாளர்,
இ.போ.ச. காரைநகர்) குடும்பத்தினர்.

## 5 ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்

**இந்திரா சபாரத்தினம்**



தோற்றம்
10.02.1950

மறைவு
25.08.2012

ஐந்து வருடங்கள் ஆனாலும் உங்களது
சிந்தும் புன்னகை சிந்தையில் நிறைந்திருக்க
பந்தமென எங்களிடை வாழ்ந்த தெய்வம் - நீ
சந்தமென ஒலிக்கும் எங்கள் இதயத்தின் நாதம் நீ!

இல.5, கல்லடி வீதி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.
"திலக வாசம்"
தபாலக வீதி, சாவகச்சேரி.

## முதலாம் ஆண்டு நினைவு



**அமரர் பாலச்சந்திரன் சாந்தினி**

பிறப்பு 02.06.1963

மறைவு 25.08.2016

ஆண்டு ஒன்று ஆனபோதிலும்
பறந்துசென்ற உம் அன்பினைப் பிரிவதனால்
சோகத்தில் நாமிங்கு தவிக்கின்றேமே - நாள்தோறும்
சோகம் எனும் கடல்தனில் மூழ்கின்றோம்
எத்தனை எத்தனை பொழுதுகள் இங்கு ஆனாலும்
எம் தலைவி உங்களுக்கு நிகர் தான் எதுவோ! எம் வாழ்விலே
நீங்கள் இல்லாத எம் கோயில் கொண்ட வீடு வெறிச்சோடியது
நிம்மதி ஏதுமின்றித் தவியாய்த் தவிக்கின்றோம்
உற்றவொரு துணைபோன்று உம் ஆத்மா எம்முடன்
உடனிருந்து நல்லதொரு வழியதனைக் காட்டும் அம்மா!
நீங்கள் எம்மைக் காலமெல்லாம் கண்களிரண்டின் இமைபோல
காத்திடுவீர் எம் குடும்பத்தின் ஒளிவிளக்கே!

12.09.2017 அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனை [illegible]
அவரின் இல்லத்தில் [illegible] நடைபெறும்.

பாலன் [illegible],
நாவலர் வீதி, ஆனைக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

## நெஞ்சை விட்டகலா முதலாம் ஆண்டு நினைவுகள்



**திருமதி சரஸ்வதி (B.A.)**

**கனகேஸ்வரன்**

(ஓய்வுபெற்ற ஆசிரியை-
மகாஜனாக் கல்லூரி)

மலர்வு
11.12.1937

உதிர்வு
25.08.2016

நட்புடனே தந்தீரே நல்லதொரு
- தென்னம்பிள்ளை
நட்டேன் நானுமதை என் யன்னலோர
- முன்றலிலே
தென்னோலை இதழ்விரிக்கும் தெம்பாங்கு
- இசையில்
தொலைபேசிக் கெட்டாத என் சரசின் குரல்
- கேட்பேன்
இளம் தென்னை தருமந்த இனிய
- பசுங் காட்சி
நிகம் [illegible] புன்சிரிப்பை நினைக்க
- வைக்கிறதே!

திருமதி அருள்நாயகி
சண்முகரட்ணம்
கேணியடி ஒழுங்கை, கொல்லங்கலட்டி.

## சங்கிலி திருடியதாக படைச்சிப்பாய் கைது

### பலாலியில் பணியாற்றுபவராம்

கொழும்பு, ஓக. 25

பலாலி இராணுவ முகாமின் புலனாய்வுப் பிரிவில் பணியாற்றிய 24 வயதான சிப்பாய் ஐந்து பெண்களின் தங்கச் சங்கிலிகளை அறுத்த சம்பவத்தில் தம்புத்தேகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் விடுமுறையில் வீட்டிற்குச் சென்றிருந்தபோதே தங்கச் சங்கிலிகளை அறுத்துள்ளார். வீதிகளில் தனியாகச் செல்லும் பெண்களிடமே அவர் தனது கைவரிசையைக் காட்டியிருந்தார்.

அறுத்தெடுக்கும் சங்கிலிகளை அடகுவைத்து தனது காதலியின் கல்விச் செலவுக்குப் பயன்படுத்தி வந்ததாக அவர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்திருக்கிறார்.

இவரை நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (5)

## ஞானசாரதேரருக்கு ஒரு நீதியா ?

### மகிந்த கேள்வி

கொழும்பு, ஓக. 25

மகிந்த அணியினர் வெளிநாடு செல்லவேண்டுமென்றால் ஆயிரம்முறை நீதிமன்றத்திற்கு ஏறி இறங்க வேண்டும். ஆனால் ஞானசார தேரருக்கு மாத்திரம் அப்படி எதுவுமில்லை. இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

ஞானதேரர் நீதிமன்ற அனுமதியில்லாமல் ஜப்பான் சென்றமை தொடர்பில் மகிந்த ராஜபக்சவிடம் கேள்வி எழுப்பப்பட்டது. எமது அரசில் ஞானசார தேரரைப் பாதுகாத்தவர்கள் இந்த அரசில் அவருக்கு ராஜதந்திர அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளனர் என்று குறிப்பிட்டார். (5)

## இராணுவ பிரிகேடியருக்கு விளக்கமறியல் நீடிப்பு

ரத்துபஸ்வெல வெலிவேரிய பிரதேசத்தில் குடிதண்ணீருக்காகப் போராட்டம் நடத்திய பொதுமக்கள் மீது சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்தி மூன்று இளைஞர்களின் உயிரிழப்புக்குக் காரணமாகவிருந்த சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட இராணுவ பிரிகேடியர் ஒருவர் உள்பட நான்கு இராணுவத்தினரும் சமர்ப்பித்திருந்த பிணைமனுவை நிராகரித்த கம்பகா மேல்நீதிமன்ற நீதியரசர் பிரயந்த பர்னாந்து. 4 பேரையும் 31ஆம் திகதிவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். சந்தேக நபர்களைப் பிணையில் விடுதலை செய்தால் பொதுமக்களின் தாக்குதல்களுக்கு அவர்கள் ஆளாகும் அபாயம் இருப்பதாக புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்ததையடுத்து பிணை மனுவை நிராகரித்த நீதியரசர் அவர்களை இம்மாதம் 31 ஆம் திகதிவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (5)

# பொருளாதாரத் தடை வடகொரியாவை ஒன்றும் செய்யாது

*சீனா சொல்கிறது*

வடகொரியாவை இலக்காகக் கொண்ட அமெரிக்காவின் பொருளாதாரத் தடையால் ஒரு பயனும் ஏற்படப் போவதில்லை என்று சீனா தெரிவித்துள்ளது.

உலக நாடுகளின் எதிர்ப்பை மீறி தொடர்ந்து அணுஆயுத ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வரும் வடகொரியா மீது ஐ.நா. பாதுகாப்புச் சபை உதவியுடன் புதிய பொருளாதாரத் தடையை அமெரிக்கா விதித்தது. அமெரிக்காவின் இந்தப் பொருளாதாரத் தடையால் வடகொரியாவுடன் தொடர்புவைத்து கொண்ட சீன நிறுவனங்களும் பாதிக்கப்பட்டு வருகின்றன. இதுகுறித்து சீன அயலுறவுத்துறை அமைச்சின் செய்தித் தொடர்பாளர், "அமெரிக்காவின் புதிய பொருளாதார தடை வடகொரியா விவகாரத்தில் முடிவு ஏற்பட எந்த உதவியும் செய்ய ப்போவதில்லை. அத்துடன் அமெரிக்காவுடன் சீனா கொண்டுள்ள பரஸ்பர நம்பிக்கை ஒத்துழைப்புக்கும் இது 'உதவாது" என நேற்றுமுன்தினம் தெரிவித்தார். (ம)



# பீகாரில் வெள்ளப்பெருக்கு சாவு 257ஆக உயர்ந்தது

புதுடெல்லி, ஒக. 25

பீகாரில் இடம்பெற்ற வெள்ளப் பெருக்கால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 257 ஆக அதிகரித்துள்ளது.

பீகார் மாநிலத்தின் வட பகுதியில் கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக பெய்து வரும் பலத்த மழை காரணமாக பல நதிகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. கிசன்கஞ்ச், சமஸ்திபூர், தர்பங்கா உள்பட 18 மாவட்டங்கள் மழை, வெள்ளத்தால் முழுமையாகப் பாதிக்கப்பட்டு உள்ளன. சுமார் ஒரு கோடியே 50 லட்சம் மக்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தில் பாதிவித்துக் கொண்டிருந்த சுமார் 7 லட்சம் மக்கள் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். வெள்ள இடரில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 257 ஆக அதிகரித்துள்ளது. மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதனால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம)



## பிரேசிலில் படகு விபத்து; 7 பேர் சாவு

பிரேசிலியா, ஒக. 25

பிரேசிலில் சுமார் 70 பேருடன் சென்ற படகு விபத்துக்குள்ளானதில் 7 பேர் உயிரிழந்துள்ளனர் என்று நேற்று மதியம் முதல் கட்டத் தகவல் வந்திருந்தது.

பார் மாநிலத்திலேயே இந்த விபத்து நடைபெற்றுள்ளது. சம்பவ இடத்துக்கு வந்த மீட்புப் படையினர் கடலில் தத்தளித்த 25 பேரை மீட்டுள்ளனர். 7 பேரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஏனையோரைத் தேடும் பணிகள் நடைபெற்று வருகின்றன. (ம)



## பங்களாதேஷுக்கு தப்பித்துச் செல்கின்ற ரொகின்கயர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

டாக்கா, ஒக. 25

மியன்மாரில் இருந்து பங்களாதேஷுக்குத் தப்பித்துச் செல்லும் ரொகின்கய இஸ்லாமியர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

மியன்மார் நாட்டில் இராணுவ ஆட்சி முடிவுக்கு வந்து ஜனநாயக முறைப்படி கடந்த ஆண்டு நவம்பர் 8ஆம் திகதி தேர்தல் நடைபெற்றது. ஆங் சான் சூகியின் ஜனநாயகத்துக்கான தேசிய கட்சி (என்.எல்.டி.) 80 சதவீதத்துக்கும் அதிகமான இடங்களில் வெற்றிபெற்று ஆட்சியைக் கைப்பற்றியது. இந்த ஆட்சியிலும் ரொகின்கய இஸ்லாமியர்கள் தொடர்ந்து துன்பங்களையே அனுபவித்து வருகின்றனர். இதைப் பல தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் சமீப காலமாக வெளிப்படுத்தி வருகின்றன. பௌத்த நாடான மியன்மார் ரொகின்கய இஸ்லாமியர்களை இனச் சுத்திகரிப்புச் செய்கிறது என்றும் காலாகாலமாகக் குற்றம் சுமத்தப்படுகிறது.

இந்த நிலையில் கடந்த ஒரு வருடத்தில் மட்டும் சுமார் 70 ஆயிரம் ரொகின்கய இஸ்லாமியர்கள் மியன்மாரில் இருந்து பங்களாதேஷுக்குத் தப்பிச் சென்றுள்ளனர் என்றும், இந்த மாதம் மட்டும் இந்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 500ஆக உள்ளது என்றும் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



தென்னாபிரிக்காவில் உள்ள வனவிங்குப் பூங்காவில் வசித்துவரும் காண்டாமிருகமொன்றின் கொம்பு அந்தப் பூங்காவின் பராமரிப்பாளர்களால் வெட்டப்பட்டுள்ளது. குறித்த காண்டாமிருகம் ஏனைய வனவிலங்குகளுக்கு அளவுக்கு அதிக அச்சுறுத்தலாக உள்ளது. இதனாலேயே அதன் கொம்பு வெட்டப்பட்டுள்ளது என்று பூங்கா நிர்வாகம் தெரிவித்துள்ளது. எனினும் பூங்கா நிர்வாகத்துக்கு எதிராகக் கடுமையான எதிர்ப்பலை ஏற்பட்டுள்ளது. (ம)

## ரக்காவில் தாக்குதல் 19 குழந்தைகள் சாவு

டமஸ்கஸ், ஒக. 25

சிரியாவின் ரக்கா நகரில் முகாமிட்டுள்ள ஐ.எஸ். ஆயுததாரிகளுக்கு எதிராக அமெரிக்கா கடும் தாக்குதல்களை நடத்தி வருகிறது. அவ்வாறு நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலில் 19 குழந்தைகள் சாவடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தகவலை சிரிய போர் கண்காணிப்பகம் தெரியப்படுத்தியுள்ளது. இது இலக்குத் தவறிய தாக்குதலாக இருக்கலாம் என்றும் குறிப்பிடப்பட்டது. 19 குழந்தைகள் உட்பட மொத்தம் 42 பேர் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் போர் கண்காணிப்பகம் அறிவித்தது. (ம)



## ஹொங்கொங்கை புரட்டியது புயல்

ஹொங்கொங், ஒக. 25

ஹொங்கொங் நகரை நேற்றுமுன்தினம் சுழற்றியடித்த 'ஹாட்டோ' புயலால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

ஆசியாவின் பொருளாதார மையம் என அழைக்கப்படும் ஹொங்கொங் நகரை நேற்றுமுன்தினம் பத்தாம் எச்சரிக்கை எண் கொண்ட 'ஹாட்டோ' புயல் தாக்கியது.

மணிக்கு 155 கிலோமீற்றர் வேகத்தில் தாக்கிய இந்த பெரும்புயலால் கடல் அலைகள் மிகப் பெரிய அளவில் ஏற்பட்டன.

புயலின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் பல மரங்கள் வேரோடு சாய்ந்ததால் சாலைகளில் போக்குவரத்து முற்றிலுமாக பாதிக்கப்பட்டுள்ளது. ஹொங்கொங் வானூர்தி நிலையம் மூடப்பட்டுள்ளது. சுமார் 450 வானூர்திச் சேவைகள் கைவிடப்பட்டன. இந்தப் புயலால் மூன்று பேர் உயிரிழந்தனர், சுமார் 30 பேர் காயமடைந்தனர். எனினும் இந்தத் தகவல் உத்தியோகபூர்வமான தகவலாக அமையவில்லை. (ம)



உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## வாதங்களின் வலிமை

வடக்கு மாகாண சபை குழம்பிக் கிடக்கிறது. அமைச்சரவையில் ஏற்படுத்தப்பட்ட குழப்பம் இரண்டு மாதங்களாகத் தீராமல் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. நேற்றுமுன்தினம்தான், புதிய அமைச்சரவை பதவியேற்றுக் கொண்டது. ஆனால், அதுவும் எத்தனை நாளைக்கு நீடிக்குமோ தெரியாது. அதில் இருவரின் நிலை அவர்களது கட்சிகளினால் அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருக்கிறது.

முதலமைச்சருக்கு அதைப்பற்றியெல்லாம் கவலையில்லை. தான் நினைத்ததனை, அது நல்லதோ கெட்டதோ, அதனால் கட்சிகளுக்குள் பிளவு வருகிறதோ இல்லையோ, மக்களுக்கு நன்மை கிடைக்கிறதோ இல்லையோ செயற்படுத்தியே ஆக வேண்டும். அவ்வளவுதான் அவரது எண்ணப்பாங்கு. அதனால் இந்தப் பிரச்சினை இப்போதைக்குத் தீரும் போலத் தெரியவில்லை. சபை தொடர்ந்தும் குழம்பிப்போய் இருப்பதற்கான அத்தனை வழித் தடங்களையும் முதலமைச்சர் உருவாக்கி.விட்டிருக்கிறார்.

ஆனால், இந்தப்பிரச்சினை ஆரம்பித்தபோது முதலமைச்சரின் ஆதரவாளர்கள் ஒரு விமர்சனத்தை வைத்தார்கள். அதில் அவர்கள் கூறியதெல்லாம் வடக்கு மாகாணசபையைக் குழப்புவதென்பது கொழும்பு அரசின் நிகழ்ச்சி நிரல் என்பதுதான். அந்த நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவே தேசியக் கூட்டமைப்பின், குறிப்பாகத் தமிழ் அரசுக் கட்சியின் நாடளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் மாகாணசபை உறுப்பினர்கள் சிலரும் செயற்படுகிறார்கள் என்றார்கள் அந்த விமர்சகர்கள்.

''புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் கொழும்பு அரசு தமிழ் மக்களுக்கு எந்தத் தீர்வையும் தரப்போவதில்லை. வடக்கு கிழக்கு இணைப்புக் கிடையாது, ஒற்றையாட்சி நீக்கப்படப்போவதில்லை, கூட்டாட்சிக்கான அதிகாரப் பகிர்வு இல்லை. இவை எதுவும் இல்லாத ஓர் அரைகுறைத் தீர்வைத் திணிக்கவே கொழும்பு முயல்கிறது. அப்படித் தமிழ் மக்களைக் கொழும்பு ஏமாற்றுவது குறித்து அவர்கள் விழித்துக் கொண்டுவிடக்கூடாது என்பதற்காகவே வடக்கு மாகாண சபையைக் குழப்பி, அதன் மீது தமிழ் மக்களின் கவனத்தைக் குவிக்கப் பண்ணியிருக்கிறார்கள். கொழும்பு அரசின் முகவர்களான தமிழ் அரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் மாகாண சபை உறுப்பினர்களுமே இந்தக் குழப்பங்களுக்குக் காரணம்'' என்றார்கள்.

ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்கள் மீதான விசாரணையைத் தொடர்ந்து அண்மையில் தனது பதவியை முதலமைச்சருக்காகத் தியாகம் செய்த வடக்கு மாகாண சபை முன்னாள் விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன்கூட இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார். அவரைப் போன்ற முதலமைச்சரின் ஆதரவாளர்கள் பலரும்கூட இது போன்ற விமர்சனங்களை முன்வைத்திருந்தார்கள்.

இது ஒரு தர்க்க நியாயத்தின் படியான விமர்சனம்தான். 2016ம் ஆண்டுக்குள் எட்டப்படும் என்று தெரிவிக்கப்பட்ட ஒருதீர்வு 2017ஆம் ஆண்டிலும் எட்டப்படாது என்று தோன்றுகின்ற அரசியல் சூழல்நிலையில் அதன் மீதான கவனக் குவிப்பை குலைக்கும் முயற்சிகள் எடுக்கப்படலாம் என்பதை நிராகரிக்க முடியாது என்பது நியாயமானதுதான்.


ஆனால், அந்த முயற்சிக்கான பங்காளிகள் யார் என்பதுதான் இப்போது கேள்வி. கடந்த இரண்டு வாரங்களாக மாகாண சபையில் நடந்துவரும் குழப்பங்களில் தமிழ் அரசுக்கட்சி எந்த வகையிலும் நேரடித் தொடர்பைக் கொண்டிருக்கவில்லை. முதலமைச்சரும், அவரை அந்தப் பதவியில் போராடித் தக்க வைத்த கட்சிகளுமே நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ளன. தன்னுடைய நேர்மை அரசியல் என்று முதலமைச்சர் எண்ணும் அரசியலின் முன்பாகத் தன்னைப் பாதுகாத்த கட்சிகள் ஒரு பொருட்டே இல்லை என்று அவர் எடுத்தெறிந்துவிட்டார். இப்போது அமைச்சரவைக் குழப்பத்துக்கு அதுவே காரணம்.

“அரசியல் கட்டாக்காலிகளை எல்லாம் கட்சியில் வைத்திருக்கவே முடியாது” என்று ரெலோ அமைப்பு அறிவித்திருக்கும் நிலையில், இந்தப் பிரச்சினை இப்போதைக்கு முடிவுக்கு வராது என்பது நிச்சயம். அப்படியானால் கொழும்பு அரசின் நிகழ்ச்சி நிரலை இப்போது முன்னெடுத்துச் செல்பவர்கள் யார்? முதலமைச்சரும் முன்னாள் ஆயுதக் குழுக்களுமா? இல்லை எல்லோருமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தானா? அப்படியானால் அதில் முதலமைச்சர் மட்டும் எப்படிப் புனிதராகுவார்?

# தேர்தலை பிற்போடுவது ஜனநாயக மீறல்

### தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

தமிழில் : எம்.ஐ.முபாறக்



**எ**திர்வரும் செப்ரெம்பர் மாதம் ஆயுட்காலம் முடிவடையும் கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வட மத்திய மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தும் நோக்கில் எதிர்வரும் ஒக்டோபர் இரண்டாம் திகதி வேட்பு மனுக்களைக் கோருவதற்குத் திட்டமிட்டிருப்பதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.
அதேவேளை, செப்ரெம்பர் 15ஆம் திகதி, உள்ளுராட்சித் திருத்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றில் நிறைவேற்றினால், 75 நாள்களுக்குள் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை நடத்த முடியும் என்றும் அவர் கூறியுள்ளார். சிங்கள தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் வழங்கிய செவ்வி ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவருடனான முழுமையான செவ்வியின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**கேள்வி:** தேர்தல் திணைக்களம் மற்றும் தேர்தல் ஆணைக்குழு ஆகிய இரண்டுக்கும் இடையில் உள்ள வித்தியாசம் என்ன?

**பதில்:** தேர்தல் ஆணைக்குழுவொன்றின் தேவைபற்றி 20 வருடங்களுக்கு முன்பிருந்தே பேசப்பட்டுக்கொண்டுவருகின்றது. நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் இது பற்றிப் பரவலாகப் பேசப்பட்டன. 2001ஆண்டில் ஐந்து உறுப்பினர்களை உள்ளடக்கி இந்த ஆணைக் குழு அறிமுகப்படுத்தப்பட்டது.
ஐந்து உறுப்பினர்களின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டபோதிலும், ஆணைக்குழு அறிமுகப்படுத்தப்பட்டபோதிலும் அரச தலைவர் அந்த வேளையில் இந்த உறுப்பினர்களை நியமிக்கவுமில்லை; ஆணைக்குழுவை நியமிக்கவும் இல்லை.
இதனால் தேர்தல் திணைக்களம் தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரங்களையும் உள்ளடக்கிக்கொண்டு 2009ஆம் ஆண்டு வரை தொடர்ந்து இயங்கியது. 2015ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். இதனால் தேர்தல் திணைக்களம் இல்லாமல் போய் தேர்தல் ஆணைக்குழு உருவானது. இப்போது தேர்தல் திணைக்களம் என்ற ஒன்று இல்லையென்றே சொல்ல வேண்டும்.

### தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்கள் நியமிப்பில் தாம் அழுத்தம் மேற்கொள்ளவில்லையாம்

**கே**: உறுப்பினர்கள் நியமிப்பு தொடர்பில் பிரச்சினை ஒன்று தோன்றியது. உங்களின் அழுத்தம் காரணமாகவே ஐந்து உறுப்பினர்கள் மூன்று உறுப்பினர்களாகக் குறைக்கப்பட்டனர் என்று சொல்லப்படுகிறதே?

**ப**: மூன்று பேராகக் குறைக்கப்படவேண்டும் என்ற யோசனையை முன்வைத்தவர் முன்னாள் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயகவாகும். அப்போது நான் உதவி ஆணையாளர். 18 ஆவது சட்டம் நிறைவேற்றப்பட்ட சந்தர்ப்பத்தில் நான் பிரதி ஆணையாளராகக் கடமையாற்றினேன்.
18 ஆவது திருத்தச் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர்தான் இந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை மூன்றாகக் குறைக்கப்பட்டிருந்தது. அப்போது நான் இருந்த பதவி நிலையை வைத்துப் பார்க்கும்போது, என்னால் இப்படியான தோர் அழுத்தத்தைக் கொடுக்க முடியாது என்பது புரியும். அன்று முன்வைக்கப்பட்ட கோரிக்கைதான் இப்போது நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

**கே**: உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் பிற்போடப்பட்டமைக்கு எல்லை நிர்ணய குளறுபடியே காரணம் என்றால், இது சட்ட ரீதியாக சரியானதா?

**ப**: ஆம். தொகுதி இல்லையென்றால் எப்படித் தேர்தலை நடத்துவது? 2012ஆம் ஆண்டு வரை பிரதிநிதித்துவ முறைமை மூலமே தேர்தல் நடத்தப்பட்டது. 2012ஆம் ஆண்டில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டமூலத்தை நிறைவேற்றினாலும்கூட, அதை நடைமுறைக்குக் கொண்டுவராததால் எல்லை நிர்ணயப் பணிகள் இடம்பெற்றுக்கொண்டிருந்தபோதே தேர்தலை நடத்தி இருக்க முடியும்.
இந்தச் சட்டத்தின் அடிப்படையில் எல்லை நிர்ணயக் குழு 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நியமிக்கப்பட்டது. அந்தக் குழு எல்லை நிர்ணய அறிக்கையை 2015ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வெளியிட்டது. இது வெளியிடப்பட்ட அந்தச் சந்தர்ப்பத்திலேயே தேர்தலை நடத்தி இருக்க முடியும். ஆனால், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் உள்ளூராட்சி சபைகளது உறுப்பினர்களின் எண்ணிக்கையை வர்த்தமானியில் வெளியிட்டிருக்கவேண்டும். ஆனால், அவர் அதைச் செய்யவில்லை.
இந்தத் தேர்தலைப் பிற்போடுவதற்கு மூன்று காரணங்கள் உள்ளன. ஒன்று எல்லை நிர்ணயம். அந்தப் பணி இப்போது பூர்த்தியாகிவிட்டது. இரண்டாவது உறுப்பினர்களின் எண்ணிக்கை. இப்போது அதுவும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்

பட்டுள்ளது. அதை நடைமுறைப்படுத்துவது ஒத்திப்போடப்பட்டுள்ளது. மற்றையது 2012 சட்டத்தில் உள்ள தொழில்நுட்பப் பிரச்சினைக் குளறுபடிகள்.

**தேர்தல் சட்டம் திருத்தப்படும்வரை தேர்தலை நடத்த முடியாது**

**கே**:உடனடியாகத் தேர்தலை நடத்துவதற்குமாற்றுவழிகள் எவையேனும் உண்டா?

**ப**:மேற்படிதேர்தல்சட்டம்திருத்தப்படும் வரை, தேர்தலை நடத்த முடியாது. இந்தக்குளறுபடியானசட்டத்தைத் திருத்துவதற்காக அதனை இன்னமும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்காமல்இருப்பதேதேர்தல்நடத்தப்படாமல் இருப்பதற்கான உண்மையான காரணமாகும்.

இல்லாவிட்டாலும்தேர்தலைநடத்துவதற்கு மாற்று வழி ஒன்று உள்ளது. இந்தவிடயம்தொடர்பில்உயர்நீதிமன்றில் இரண்டு வழக்குகள் உள்ளன. இந்தச் சட்டத்தை நாடாளுமன்றம் திருத்தத் தேவை இல்லை. வர்த்தமானிஅறிவித்தலின் ஊடாக, தேர்தல் ஆணைக்குழு இதில் திருத்தத்தைக் கொண்டு வர முடியும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தால், எம்மால் மேற்படி வேலைகளைச் செய்து தேர்தலை நடத்த முடியும்.

தேர்தல்ஆணைக்குழுவுக்குமேலாக அதிகாரம் கொண்ட நாடாளுமன்றமும் நீதிமன்றமும் உள்ளன. இந்த இரண்டையும்மீறிதேர்தல்ஆணைக்குழுவால் எதையும் செய்ய முடியாது. எழ் மிடம் அதிகாரம் இருந்திருந்தால் 2013ஆம்ஆண்டிலேயே இந்தப்பிரச்சினையைத் தீர்த்திருப்போம்.

இவற்றைப் பற்றி எவரும் பேசுவதில்லை. இந்தப் பிரச்சினைகள் பற்றி 2013 ஆம் ஆண்டு முதல் தேர்தல் திணைக்களம் பேசிவருகின்றது.

**கே**:தேர்தலைஒத்திப்போடுவதற்காகத்தான் இந்தச் சிக்கலை சட்டத்தில் இருந்து நீக்காமல் இழுத்தடிக்கின்றனர் என்று சொல்லலாமா?

**ப**: இல்லை. அவ்வாறு சொல்ல முடியாது.

**அரசியல்வாதிகளின் செயற்பாடுகளை நாம் விமர்சிப்பதில்லை**

**கே**:தேர்தல் ஆணையாளர் என்ற அடிப்படையில் மக்களின் ஜனநாயக உரிமையைப் பாதுகாக்கும் விடயத்தில் நீங்கள் போதுமான அளவு வெளிப்படைத் தன்மை உள்ளவராக இல்லை என்று சொல்லப்படுகிறதே?

**ப**:அப்படிஇல்லை. தேர்தல் மேடைகளில் ஏறி இது பற்றி எம்மால் பேச முடியாது. இந்த உரிமை மீறப்படுவதற்கு அரசியல்வாதிகளேகாரணம் என்று எம்மால் சொல்ல முடியாது. நாங்கள் தேர்தல் திணைக்களத்துக்கு ஒருவரை வேலைக்கு நியமித்தால் வாக்களிப்பதைத் தவிர அவருக்கும் அரசியலுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று ஒப்பந்தம் மேற்கொண்டே அவரை வேலையில் நியமிப்போம்.

எந்தவொருசந்தர்ப்பத்திலும்அரசியல்வாதிகளின் செயற்பாடுகளை நாம் விமர்சிக்கமாட்டோம். அதில் இருந்து நூறுவீதம்விலகியேஇருக்கின்றோம்.

**கே**:தேர்தல் ஆணையாளருக்கு மகிந்தஆட்சியில்இருந்தசுதந்திரத்தைவிட இந்த ஆட்சியில்தான் சுதந்திரம் அதிகம் என்று அமைச்சர் பைசர் முஸ்தபா கூறிகின்றாரே?

**ப**:எந்தஆட்சியிலும்நாம்ஒரேமாதிரியேஇருக்கின்றோம். துணிச்சலுடனேயே செயற்படுகின்றோம். அரச தலைவர்தேர்தலின்போதுநாம்தலை குனிந்து இருக்கவில்லை. ஊவா தேர்தலின்போது நாம் துணிந்தே செயற்பட்டோம். ஊர்வலங்களை நிறுத்தினோம். இதெல்லாம் செய்யும்போது இருந்தது இந்த அரசு அல்ல. வேறு அரசு. எல்லா அரசிலும் நாம் நாமாகவே இருக்கின்றோம்.

**கே**:புதியதேர்தல்முறைமையின் கீழ் சிறு கட்சிகள் பாதிக்கப்படனவா?


**ப**:சிறு கட்சிகள் என்ற வார்த்தையைப் பயன்படுத்த முடியாது. அதிகவாக்குகளைபெறமுடியாதகட்சிகள் என்றுதான் சொல்ல வேண்டும். அவ்வாறானகட்சிகள்எப்படியும்பாதிக்கப்படவே செய்யும்.

பிரதிநிதித்துவ முறைமை ஒழிக்கப்பட்டு தொகுதிவாரி முறைமை நடைமுறைக்கு வந்ததும், மக்கள் செல்வாக்கு அதிகம் இல்லாத பகுதிகளில் கூட்டுச் சேர்ந்து போட்டியிடாவிட்டால் எந்தக் கட்சியானாலும் சரி, பாதிக்கப்படவே செய்யும்,

ஆனால், பிரதிநிதித்துவ முறைமை அப்படியல்ல. அதில் ஒரு வர்க்குக்குக் கூட பெறுமதி உண்டு. தொகுவாரியில் அப்படி ஒரு வாக்குக்கு மதிப்பில்லை.

**கே**:தேர்தல் தொடர்ச்சியாக பிற்போடப்பட்டுக்கொண்டேசெல்கின்றது. தேர்தல்ஆணையாளர்என்ற வகையில்இதுதொடர்பில்உங்களின் கருத்து என்ன?

**ப**:குறிப்பிட்ட காலத்தில் தேர்தலை நடத்தாமை மக்களின் ஜனநாயகத்துக்கு ஆபத்து ஏற்படுத்தும் என்று சர்வதேசச் சட்டத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதியில் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் அதில் இருந்து 75 நாள்களில் எம்மால் தேர்தலை



நடத்த முடியும். அதாவது டிசெம்பர் ஆரம்பத்தில். ஆனால், தேர்தல் ஒத்திப்போடப்படுகின்றமைக்கு தேர்தல் ஆணைக்குழுமீது குற்றம் சுமத்துவதில் பயனில்லை.

**கட்சிகளின் தலைவர்கள் ஒன்று கூடி பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்**

**கே**:இந்தச்சட்டமூலம்இன்னமும் சமர்ப்பிக்கப்படாமைக்குக் காரணம் கட்சிகளுக்கிடையிலான பிரச்சினைகள் என்று சொல்லலாமா?

**ப**:உண்மையில், கட்சித் தலைவர்கள்தான் இதைத் தீர்மானிக்க வேண்டும். அவர்கள் ஒன்றுகூடி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண வேண்டும். பின்புசட்டமூலத்தைநாடாளுமன்றத்துக்குக் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும்.

உள்ளூராட்சித் தேர்தல் இழுபட்டுக் கொண்டேசெல்கின்றது. பலகாரணங்களைக்கூறிஒத்திப்போட்டுக்கொண்டே செல்கின்றனர். இதற்குஅப்பால்எந்தக் காரணத்தைக் கூறித் தேர்தலை ஒத்திப்போடுவது என்ற கேள்வி எழுகின்றது.

**கே**:ஆயுட்காலம் முடிவடையவுள்ள சப்ரகமுவ, கிழக்கு மற்றும் வட மத்திய மாகாண சபைகளின் நிலைமை என்னவாகும்?

**ப**:இந்தச் சபைகளுக்கு வேட்பு மனுக்களைக் கோரும் அறிவித்தலை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் இரண்டாம் திகதி விடுப்பதற்குத் திட்டமிட்டுள்ளோம். நாட்டில் மூன்றரை லட்சம் புதிய வாக்காளர்கள் , வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டியுள்ளனர். அதைச் செய்துவிட்டே மேற்படி வேட்பு மனுக்களைக் கோருவதற்கு விரும்புகிறோம்.

**கே**:அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தலை ஒரே நேரத்தில்நடத்துவதென்று அரசுவர்த்தமானி அறிவித்தலை விடுத்துள்ள நிலையில், ஒக்ரோபர் மாதம் எப்படி உங்களால் வேட்பு மனுக்களைக் கோர முடியும்?

**ப**:இது நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 20ஆவது திருத்தச் சட்டமூலத்துக்குள்அடங்குகிறது. எந்தவொரு சட்டமூலமும் நிறைவேற்றப்பட்டு சபாநாயகர் அதில் கையெழுத்திடும்வரைசட்டமூலமாகவே இருக்கும். அதுசட்டமல்ல. சட்டமாகும்வரைநாம் வேட்புமனுக்களைக் கோர முடியும்.

**கே**:இதற்கு பொதுவான வாக்கெடுப்புநடத்தப்பட வேண்டுமல்லவா?

**ப**:அதைத் தீர்மானிப்பது நீதிமன்றம். இது தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்ற யோசனைகளும் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

**கே**:தேர்தலை இவ்வாறு பிற்போடுவது, ஜனநாயக மீறல் என்ற உண்மையை அரசுக்குநீங்கள்எவ்வாறுதெளிவுபடுத்தியுள்ளீர்கள்?

**ப**:மூன்றுமாதங்களுக்குஒரு தடவைநான்கட்சிச்செயலாளர்களுடன் சந்திப்பை மேற்கொண்டேன். அப்போதெல்லாம் இதுபற்றிக் கூறினேன். 2013 இல் இருந்து மட்டக்களப்பு தேர்தல்ஒத்திப்போடப்பட்டதில்இருந்து. இந்த விடயத்தைத் தெளிவுபடுத்திக்கொண்டே வருகிறேன்.

அதுபோக, இதுபற்றி அவர்களுக்கு எழுதி அனுப்பிய கடிதங்கள் கட்டுக்கணக்கில் உள்ளன. ஒருஅளவைத்தாண்டிநாம்அவர்களைத் தெளிவுபடுத்தியுள்ளோம்.

உள்ளூராட்சிச்சபைத்தேர்தலைதேர்தல்ஆணைக்குழுதாமதப்படுத்துகின்றது என அரசியல்வாதிகள் கூறுவது அவர்களின்அரசியல்நோக்கங்களுக்காகும். தேர்தல் தாமதத்துக்கும் தேர்தல் ஆணைக்குழுவுக்கும் இடையில் எந்தத் தொடர்பும் இல்லை என்பதையும், 2012ஆம் ஆண்டில் தேர்தல் சட்டம் திருத்தப்படாமையே தாமதத்துக்குக்காரணம்என்பதையும்நான்இந்த நாட்டுமக்களுக்குகூறவிரும்புகிறேன் - என்றார்.

## ஆசிரியருக்கான கடிதம்

### தொற்றுநோய்களுக்கு உட்படாதிருக்க விழிப்புணர்வு அவசியம்

தத்தமது ஊரிலோ அல்லது தமது வீடுகளின் அண்டை அயலிலோ பாரதூரமான திருட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றுவிட்டால் உடனடியாகத் தம்மைச் சுதாகரித்துக் கொண்டு தமது வீடுகளினதும், சொத்துக்களினதும், பாதுகாப்பில் தீவிர அக்கறை காட்ட ஆரம்பித்து விடுவார்கள் எம்மவர்கள். நாள்கள் நகர நகர அத்தகைய கடும் அக்கறை நலிவடைந்துவிடும். இது சாதாரணமனித இயல்பு.

இன்றைய எமது வாழ்வியல் போக்கையும், நிலைமையையும் அவதானித்தால், நாம் எந்த வேளையிலும் அவதானத்துடனும் முன்னெச்சரிக்கையுடனும் செயற்பட்டாக வேண்டியது அவசியமாகிறது.

அந்த வகையில் கடந்த காலத்தில் முழுநாட்டையுமே வருத்தி வந்த, அச்சத்தில் ஆழ்த்தி வந்த டெங்கு நோயின் தாக்கம் சுகாதாரத் துறையினரதும் நாட்டு மக்களினதும் முன்னெச்சரிக்கைச் செயற்பாடுகளால் கட்டுப்பாட்டுக்குள் வரும் நிலை அவதானிக்கப்பட்டது. நாடு தழுவிய ரீதியில் கடந்த ஜூலை மாத இறுதி வாரத்தில் இருந்த டெங்கு நோயாளர்களது தொகை இந்த மாதத்தின் இரண்டாவது வாரத்தில் 41 வீதத்தால் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் அதனுடன் சேர்ந்து அண்மைய நாள்களாக அடிக்கடி பெய்யும் மழையால் நுளம்புகளின் பெருக்கம் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக வெளியிடப்பட்டுள்ள எச்சரிக்கையைப் புறம் தள்ளிவிட்டு விடாது, கவனத்தில் எடுத்து, நாம் ஒவ்வொருவரும் விழிப்பாகச் செயற்பட்டு எமது சுற்றுச்சூழல் சுகாதாரத்தைச் சிறப்பாகப் பேண வேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளோம். சமூகப்பொறுப்புடைய நாம் ஒவ்வொருவரும் இது விடயத்தில் அண்டை அயலாருடன் இணைந்து முன்னெச்சரிக்கையுடன் செயற்பட்டு எமது சுற்றுச் சூழல் சுகாதாரத்தைப் பேணிப் பாதுகாக்க முன்வரவேண்டும்.

அ. கலைவாணி
அரியாலை

## வரலாற்றில் இன்றைய தினம் 25.08.2017

1609 - கலிலியோ கலிலி, வெனிஸ் சட்டவாளர்களுக்கு தொலைநோக்கியைச் செயற்படுத்திக் காட்டினார்.
1825 - பிரேசிலிடமிருந்து உருகுவே சுதந்திரம் பெற்றது.
1830 - பெல்ஜியப் புரட்சி தொடங்கியது.
1933- சீனா சிச்சுவன் மாவோ மாநிலத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத் தால் 9 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.
1980 - சிம்பாப்வே ஐக்கிய நாடுகள் சபையில் இணைந்தது.
1992 - சில்லாலையில் ஒருவர் சுட்டுச் சாவு.
2006 - மானிப்பாயில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை.
2006 - குடாநாட்டுக்கு அரசு அனுப்பிய கப்பலில் 500 தொன் உணவுப் பொருள்கள் மட்டுமே. இது அறிவிக்கப்பட்ட அளவுடன் ஒப்பிடுகையில் அரைவாசிலும் குறைவு எனச் சுட்டிக்காட்டு.
2016 - வடக்கு, கிழக்கு சிங்கள மக்களுக்காகவும் ஆணைக் குழுவை நிறுவ வேண்டும் என ஹெல உறுமய கோரிக்கை.



1940- இரண்டாம் உலகப்போரில் பிரிட்டன் போர் வானூர்திகளால் பேர்லின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.




## இடபம்

முயற்சியை எப்போதும் கைவிடாத அன்பர்களே! 02.09.2017 முதல் 02.10.2018 வரை குரு பகவான் உங்கள் ராசிக்கு 6ஆம் வீட்டில் பிரவேசிக்க இருக்கிறார். சகட குரு கலக்கத்தைத் தருவாரே என்று அச்சப்பட வேண்டாம். சின்னச் சின்னப் போராட்டங்களைச் சந்திக்க வேண்டியிருந்தாலும், அதனால் பெரிதும் பாதிப்பு ஏற்படாது. செலவுகளும் துரத்தும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தம்பதிகள் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்லவும். கடன்கள் கவலை தரும். புதியவர்களை நம்பி முடிவு எடுக்க வேண்டாம்.

**குரு பகவானின் பார்வை:** குரு பகவான் தனது 5ஆம் பார்வையால் 10ஆம் வீட்டைப் பார்ப்பதால் தடைப்பட்ட வேலைகள் முடியும். வெளிநாட்டில் இருக்கும் நண்பர்களால் அனுகூலம் உண்டாகும். மகளுக்கு நல்ல வரன் அமையும். குரு பகவான் தன்னுடைய 7ஆம் பார்வையால் 12ஆம் வீட்டைப் பார்ப்பதால் சுபச் செலவுகள் அதிகரிக்கும். காணாமல் போன முக்கியமான ஆவணம் திரும்பக் கிடைக்கும். குரு பகவான் தன்னுடைய 9ஆம் பார்வையால் 2ஆம் வீட்டைப் பார்ப்பதால் எதிர்பார்த்த வகையில் பணம் வரும். உடல் ஆரோக்கியம் மேம்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**குரு பகவானின் நட்சத்திர சஞ்சாரம்:** 02.09.2017 முதல் 5.10.2017 வரை உங்கள் ராசிக்கு 7 மற்றும் 12 ஆகிய வீடுகளுக்கு உரிய செவ்வாயின் நட்சத்திரமான சித்திரை 3, 4ஆம் பாதம் துலாம் ராசியில் செல்வதால் கணவன் மனைவிக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும். நீண்ட காலமாகச் செல்ல நினைத்த புண்ணிய இடங்களுக்குச் சென்று வருவீர்கள். திருமண முயற்சிகள் சாதகமாகும். 6.10.2017 முதல் 7.12.2017 வரை ராகு பகவானின் சுவாதி நட்சத்திரத்தில் செல்வதால் பிரச்னைகளைப் போராடி சமாளிக்கும் ஆற்றல் கிடைக்கும். வீடு கட்டும் பணியைத் தொடங்குவீர்கள். உங்கள் ராசிக்கு 8 மற்றும் 11ஆம் இடங்களுக்கு அதிபதியான குரு பகவானின் சுய நட்சத்திரமான விசாகம் 1, 2, 3ஆம் பாதம் துலாம் ராசியிலேயே 8.12.2017 முதல் 13.2.18 வரை மற்றும் 4.7.2018 முதல் 2.10.2018 வரை செல்வதால் பரபரப்பாகச் செயல்படுவீர்கள். செலவுகள் அதிகமாகும். பண விவகாரத்தில் கவனமாக இருக்கவும்.

**குரு பகவானின் அதிசார வக்கிர சஞ்சாரம்:** 14.2.2018 முதல் 10.4.2018 வரை விசாகம் நட்சத்திரம் 4ஆம் பாதத்தில் அதிசார வக்கிரத்தில் உங்கள் ராசிக்கு 7ஆம் வீட்டில் குரு பகவான் அமர்ந்து உங்களுடைய ராசியைப் பார்ப்பதால் திறமைகள் வெளிப்படும். பணவரவு அதிகரிக்கும். பிரிந்திருந்த கணவன் மனைவி ஒன்று சேருவீர்கள். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். விலை உயர்ந்த மின்னணு, மின்சார சாதனங்கள் வாங்குவீர்கள். வழக்கு சாதகமாகும். திருமணம் தள்ளிப்போனவர்களுக்குக் கூடி வரும்.

**குரு பகவானின் வக்கிர சஞ்சாரம்:** 7.3.2018 முதல் 3.7.2018 வரை தன் சுய நட்சத்திரமான விசாகம் நட்சத்திரம் துலாம் ராசியில் குரு பகவான் வக்கிர கதியில் செல்வதால் மனதில் இனம் தெரியாத கவலைகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் மிகுந்த கவனம் தேவை. உத்தியோகத்தில் எவ்வளவுதான் உழைத்தாலும் உரிய அங்கீகாரம் கிடைக்காது. சக ஊழியர்களுடன் அனுசரித்துச் செல்லவும். மாணவர்கள் படிப்பில் கவனமாக இருப்பது மிகவும் அவசியம். விளையாட்டுப் போட்டிகளில் அடிபடக்கூடும் என்பதால் எச்சரிக்கை யாக இருக்கவும்.

கலைத்துறையினர்களே! புதிய வாய்ப்புகளை அலைந்து திரிந்துதான் பெறவேண்டி இருக்கும். மூத்த கலைஞர்கள் உதவி செய்வார்கள்.

இந்த குருப்பெயர்ச்சி அவ்வப்போது சுகவீனங்களையும் தோல்விகளையும் தந்தாலும், ஆராய்ந்து செயல்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்துவதாக அமையும்.

## தேர்தல் ஆணைக்குழு

"வாக்கு உங்களின் ஓர் உரிமை
அதனிலும் பார்க்க உங்களின் ஒரு பொறுப்பு"

**வாக்களிப்பதற்கு வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டிருத்தல் கட்டாயத் தேவைப்பாடாகும்.**

2017 ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்பின் வரைபு நகல் தற்போது தேர்தல் ஆணைக்குழுவின் www.elections.gov.lk என்ற இணையத்தளத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அதேபோன்று புதிதாக உட்சேர்க்கப்பட பரிந்துரை செய்யப்பட்டுள்ள பெயர்கள், நீக்கப்படவுள்ள பெயர்கள் மற்றும் 2016 ஆம் ஆண்டின் பதிவேடு என்பவற்றைக் கிராம அலுவலர் அலுவலகங்களில் பரிசீலிக்க முடியும். நாட்டின் பெரும்பாலான நகர மற்றும் நகர்சார் பிரதேசங்கள் போலவே சில கிராம மற்றும் பெருந்தோட்டங்களை சார்ந்த பிரதேசங்களிலும் கூட வாக்காளர்களின பெயர்களை உட்சேர்ப்பதில் கணிசமானளவு வீழ்ச்சி அவதானிக்கப்பட்டுள்ளது.

ஆதலால் உங்களது பெயர் / உங்களது குடும்ப அங்கத்தினர்களின் பெயர்கள் என்பன 2017 ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்பில் உட்சேர்க்கப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். ஏனெனில், எதிர்வரும் தேர்தல்களின் போது 2017 ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்பில் பெயர் காணப்படுகின்றவர்களுக்கு மாத்திரமே வாக்கினைப் பிரயோகிக்க முடியும்.

2017 ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்பில் உங்கள் பெயர் உட்சேர்க்கப்படவில்லையெனில், வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்படுவதற்கான கோரிக்கைகளை 2017.09.06 ஆம் திகதிக்கு முன்னர் தயவுசெய்து உரிய மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்திற்கு அல்லது தேர்தல் ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்கவும். இது தொடர்பாக முடியுமானவரை ஏனையோரை அறிவுறுத்த நடவடிக்கையெடுக்கவும்.

தொலைபேசி இல. 011-2868441,42,43
மின்னஞ்சல் :info@elections.gov.lk
இணையத்தளம் : www.elections.gov.lk

தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
இராஜகிரிய.
2017.08.25

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொழும்பு மாநகர | 011-2872247 | அம்பாந்தோட்டை | 047-2256248 | குருநாகல் | 037-2222369 |
| கொழும்பு | | யாழ்ப்பாணம் | 021-2222655 | புத்தளம் | 032-2265246 |
| மாவட்ட | 011-2867472 | கிளிநொச்சி | 021-2285664 | அநுராதபுரம் | 025-2222551 |
| கம்பஹா | 033-2222047 | மன்னார் | 023-2222289 | பொலன்னறுவை | 027-2222012 |
| களுத்துறை | 034-2222266 | வவுனியா | 024-2222311 | பதுளை | 055-2222424 |
| கண்டி | 081-2233187 | முல்லைத்தீவு | 021-2061426 | மொனராகலை | 055-2276315 |
| மாத்தளை | 066-2222422 | மட்டக்களப்பு | 065-2224312 | இரத்தினபுரி | 045-2222023 |
| நுவரெலியா | 052-2222325 | அம்பாறை | 063-2224342 | கேகாலை | 035-2222561 |
| காலி | 091-2234028 | திருகோணமலை | 026-2222304 | | |
| மாத்தறை | 041-2222305 | | | | |

**சரியாகப் பதிவு செய்வதன் மூலம் வாக்களிக்க முடியுமென்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளவும்.**

## நாளை

**26.08.2017**
சனிக்கிழமை

**ஆவணி - 10**

திதி: பஞ்சமி மு.இ. 11.28 வரை
நட்சத்திரம்: சித்திரை மா.6.44 வரை
சுபநேரம்: 03.05–04.35 வரை
ராகுகாலம்: 09.05–10.35 வரை

மதுரகவி அருளானந்தன்

# ஆவணிச் சதுர்த்தி

## விநாயகர் அருள் கொள்ளும் திருநாள்

தமிழ் வருடப்பிறப்பின் முதல் மாதமான சித்திரையை சிறப்பாகக் கொண்டாடுவது போலவே வருடத்தின் ஐந்தாவது மாதமான ஆவணியில் வருகின்ற விநாயக சதுர்த்தி விழாவை இந்துக்கள் பக்திபூர்வமாகக் கொண்டாடி வருகின்றனர்.

### சிறப்பு

இந்தத் திருநாளில் விநாய அடியவர்கள் அதிகாலையிலேயே எழுந்து நீராடி, வீட்டைக் கழுவி சுத்தம் செய்வர். வாசலிலே கோலமிடுவர். மாவிலை, தோரணம், தென்னங்குருத்து வாழை கொண்டு ஆலயத்தையும், வீடுகளையும் அலங்கரிப்பர். களிமண்ணால் செய்த புதுப்பிள்ளையாரை பூஜை அறையில் உள்ள மர பீடத்தில வைத்து மலர் மாலைகள், நகைகள் அணிவித்து அலங்காரம் செய்து வழிபாடு இயற்றுவர். இந்த மரபு இந்து மக்களிடையே தொடர்புற்று இன்றும் நிலவி வருகிறது.

### அவதாரம்

விநாயகப் பெருமானின் அவதாரம் குறித்துப் பல கதைகள் பேசப்படுகின்றன. அவற்றுள் யானைமுகம் பெற்ற கதை அற்புதமானது. அருள் விற்பன்னமானது.

கஜமுகாசுரன் என்ற ஒரு கொடிய அரக்கன் இருந்தான். அவன் மாகத முனிவருக்கும், வீபூதி பெற்ற அசுர மாதுக்கும் பிறந்தவன். சிவபெருமானை நோக்கிப் பல்லாண்டு காலம் தவம் புரிந்தான். அதன் பயன் கொண்டு சிவப் பரம்பொருளின் அருட்காட்சியை கண்டுகொண்டான். அந்த சந்தர்ப்பத்திலே சிவபெருமான் கஜமுகாசுரனை நோக்கி, "உனக்கு என்ன வரம் வேண்டும்..?" என்று கேட்டார்.

### இறையருள் வரம்

கஜமுகாசுரன் பதிலுரைத்தான், "எனையாளும் பரம் பொருளே....! தேவரும், மூவரும் எனக்கு அடங்கியிருக்க வேண்டும். எல்லோரையும் வெற்றிகொள்ளும் வீரமும் வலிமையும், சாவு இல்லாத தகைமையும் வேண்டும்." என்று விழித்தான். இறைவரம் தனை தான் விரும்பிய விதமே பெற்றான். வரத்தைப் பெற்றுக்கொண்டவன் அமைதியாக இருக்கவில்லை. மிகுந்தசெருக்குடன் தேவர்களையும், முனிவர்களையும் துன்புறுத்தினான். அவர்களை வன்ம எண்ணங்கொண்டு அடக்கினான். மாலயானதி வானவர்களைப் பிடித்து இழுத்துக் கொண்டு வருமாறு கட்டளையிட்டான். அவனுடைய ஏவலர்களும் கட்டளைக்குப் பணிந்தனர். திருமால், திசைமுகன், இந்திரன் முதலிய இமையோர்களை ஆர்த்து ஈர்த்து வந்தார்கள்.

### துன்ப மிகுதி

மனம் பூரித்து உள மகிழ்ந்தான் கஜமுகாசுரன். அவர்களை நோக்கி, "ஏ தேவர்களே...! நீங்கள் என்முன் இரு காதுகளையும் பிடித்துக் கொண்டு அனுதினமும் காலை, உச்சி மாலை என மூ வேளையிலும் 1008 தோப்புக் கரணம் போட வேண்டும்" என்று கட்டளையிட்டான். தேவர்கள் அச்சம் கொண்டனர். கட்டளைப்படியே மூ வேளையும் 1008 தோப்புக்கரணங்களைப் போட்டனர். களைப்படைந்து அயர்ந்து போயினர். மிக மனம் வருந்தி வாடினர்.

துயர மிகுதியால் திருக்கயிலை மலை சென்று சிவபெருமானை வணங்கினர். அருட்பெருங்கடலே கஜமுகாசுரனுடைய கொடுமையால் நாங்கள் அதிக துன்பங்களை அனுபவித்துவிட்டோம். எங்களைக் காத்தருள வேண்டும். அதுவே தேவரீரது கடன் என்று முறையிட்டனர். இனியும் எம்மால் இத்தகு துயரங்களைத் தாங்க இயலாது. எமைக் காத்தருளீர் என அவன் தாழ் பணிந்து வேண்டினர். கயிலை நாதர் வேண்டுதலை ஏற்றார். கருணை புரிந்தார்.

### காத்தருளல்

தனக்கு அருகாமையில் வீற்றிருந்த விநாயகப் பெருமானைக் கடைக் கண்ணால் பார்த்தருளினார். விநாயகரை யானை முகத்தோடும், மனித உடலோடும் தோற்றுவித்து கஜமுகாசுரனை அழித்து வரும்படி அனுப்பிவைத்தார். விநாயகப் பெருமான் மணித்தேர்மீது ஆரோகணித்தார். வில், வாள் முதலிய படைக்கலங்களைத் தரித்தபடி பூத கணங்கள் புடைசூழப் போருக்குப் புறப்பட்டார். போர்ப் பறைகள் முழங்கின. வானவர்கள் மகிழ்ந்தனர். விண்ணும் மண்ணும் அதிர்ந்தன. பூத கணங்களும், அசுர கணங்களும் போர் புரிந்தன. இறுதியில் விநாயகப் பெருமான் கஜமுகாசுரனோடு கடும்போர் புரிந்தார். விநாயகர் ஏவிய கணைகள் யாவும் கஜமுகன் மீது வீழ்ந்தன. பாறையில் வீழ்ந்த மழைத் துளிகள் போல கூர் மழுங்கின.

இந்த சந்தர்ப்பத்திலே "கஜமுகாசுரனை எப்படைகளாலும் அழிக்க முடியாது. அவன் அழியாத மாயாவரம் பெற்றவன்" என்ற அசரீதி எழுந்தது. மாயாவரம்பெற்றஇவனை தந்தத்தால் அழிப்பேன் என விநா யகர் திருவுளம் கொண்டார்.



தமது திருமுகத்தில் உள்ள வலக்கொம்பை முறித்தார். சிவமந்திரத்தை உச்சரித்தபடி கொம்பை ஏவினார். ஞான வடிவான தந்தம் கஜமுகாசுரனைப் பிளந்தது. மாயாவரம் பெற்ற கஜமுகாசுரன் பெருச்சாளி வடிவம் பெற்றான். விநாயகரை எதிர்த்து மீண்டும் போர் புரிய வந்தான். விநாயகர் கருணைகூர்ந்தார். திருக்காட்சி கொடுத்தார். அவனுடைய அறியாமை அகன்றிட மெய்யுணர்வு பெற்றான். விநாயகரை வணங்கி நின்றான். அந்த மூஷிகத்தை விநாயகர் தனது வாகனமாகக் கொண்டருளினார். வானவர்கள் மலர் மழை பொழிந்தனர். விநாயகரைப் போற்றி வணங்கினர்.

### அருள் உய்ந்து வாழ்வு தரல்

விநாயகர் மாலயனாதி வானவர்களை நோக்கினார், "உமக்கு என்ன வரம் வேண்டும். கேளுங்கள்..?" என்று கூறினார். அருள் இன்பம் அளித்தார். தேவர்கள் "ஆனை முகத்து அண்ணலே நாங்கள் இத்தனை காலம் கஜமுகாசுரனுக்குக் காலை, உச்சி. மாலை என மூ வேளையும் ஆயிரத்தெட்டுத் தோப்புக்கரணங்கள் போட்டோம். இனித் தேவரீர் முன் அதனைச் செய்ய அருள்புரிக" என்றனர்.

விநாயகப் பெருமான் புன்முறுவல் பூத்தார். பின்பு, "மூன்று முறை தோப்புக்கரணம் இட்டால் போதும்" எனக் கூறி அருள் உவந்தார். அன்றுதொட்டு அமரர்களும், அடியார்களும் அந்தப் பெருமானுடைய திருமுகப் பொலிவின் முன்பாக நின்று தோப்புக்கரணம் இட்டு வழிபாடு செய்துவரலாயினர்.

விநாயகரது திருவுருவம் முன்பாக தோப்புக்கரணம் இடுவதனால் அறிவு வளர்ச்சியும், உடல் உள நலமும் உண்டாகும். அவருடைய பெருங்கருணைக்கு உரியவர்களாக விளங்குவர். ஆக, இத்தகு மகத்துவம் நிறைந்த ஆவணிச் சதுர்த்தித் திருநாளிலே அவதாரம்கொண்ட விநாயகப் பெருமானை வழிபாடு இயற்றுவோம். சகல ஐஸ்வரியச் சிறப்புக்களையும் பெற்று இன்பமாக வாழ்வோம்.

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## திருமதி இந்திராதேவி பரமேஸ்வரன்

திதி: ஆவணி சதுர்த்தி

மண்ணக வாழ்வு
20.10.1951



விண்ணக வாழ்வு
05.09.2016

### நீங்கா நினைவுகளுடன் ...........

தாயாய் எனக்கிருந்து
தயை கொடுத்த உத்தமியே !
முகவாட்டம் கண்டு என்
மனவாட்டங் கேட்ட பத்தினியே !
பார்த்துப் பார்த்துப் பக்குவமாய்
பண்டங்கள் ஆக்கி எமக்களித்து
உண்ணத் தந்த நும்மை இனி
எப்பிறப்பில் காண்போம் அம்மா ?
உனக்கு நான் எனக்கு நீ
என வாழ்ந்த முது வாழ்வை விட்டு
எனக்கினி யாரென்று எண்ணி
என்னை விட்டுச் சென்றாய் தேவி?
பார்த்த இடமெல்லாம்
உன் முகமே தெரிந்திருக்க
பேசும் பேச்செல்லாம்
உன் பேச்சாய் எனக்கிருக்க
முதுமைக்குத் தேவை நல்ல
துணையென்று தெரிந்திருந்தும்
தனிமையில் என்னைத் தவிக்கவிட்டு
எங்கு் தான் தத்தளிக்கின்றாய்?
நாட்டுக் கலவரத்தால்
வீடு விட்டு நாடு விட்டு
அன்னை தந்தை உறவைவிட்டு
சென்று விட்ட கோபத்தாலோ
எம் தாயே நீயும்
எம்மை விட்டுச் சென்றாய் அம்மா
எம்மடியில் பிள்ளைகள்
இருந்தும் உம்மடியில்
உறங்குகின்ற சுகத்தை இனி
எப்போது பெறுவோம் அம்மா ?
தேவி ! நீயே என் ஆவி !
அறிந்திருந்தும் உன் செயல்
அடுக்குமோ சொல்வாய் நீ
எம் இல்ல விளக்கே !
நீ எம்மை விட்டுச் சென்று
ஆண்டுகள் தான் ஆகிப் போகும்
காலம் தான் நீண்டு போகும்
எம்மோடு நீங்களிருக்கும்
நினைவுகள் நிலைத்திருக்கும்
அஞ்சலிக்கின்றோம்
ஆன்மா அமைதி பெறவல்ல
எம்முள் அடக்கம் பெறுதற்கு.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



உங்கள் நினைவுகளைச் சுமந்திருக்கும்
அன்புக் கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
"இந்திர கிரி"
வீரபத்திரர் கோயிலடி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
25.08.2017

(CS 6515) (14)

## இரசாயனவியல் வினாத்தாள் விவகாரம்

# தில்லு முல்லு அம்பலம்

## ரூபா 10 லட்சம் உடன்பாடு ஏ.எஸ்.பியின் மகனும் சிக்கினார்

கொழும்பு, ஓக. 25
உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் மகன், இரசாயனவியல் வினாத்தாளின் வினாக்களை நவீன தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தி, கம்பகாவிலுள்ள தனியார் கல்வி நிறுவன ஆசிரியருக்கு 'வட்ஸ்அப்பில்' அனுப்பியுள்ளார். ஆசிரியர் அவற்றுக்கான விடைகளை மாணவனுக்குச் சொல்லிக் கொடுத்துள்ளார். இதற்காக 10 லட்சம் ரூபா பணம் ஆசிரியருக்கு வழங்கப்பட்டுள்ளது. வினாக்களைப் பெற்ற ஆசிரியர் தனது வர்த்தகப் பிரபலத்துக்காக துண்டறிக்கை அச்சிட்டு வெளியிட்டுள்ளார். இதுவே நடந்தது. பரீட்சை நடைபெறுவதற்கு முன்னதாக வினாத்தாள் வெளியாகவில்லை. இவ்வாறு, விசாரணைகளை மேற்கொண்டுள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த 19ஆம் திகதி கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் இரசாயனவியல் பாடத்தின் பகுதி இரண்டிற்கான பரீட்சை நடைபெற்றது. பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே கம்பகாவில், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர் துண்டறிக்கையினை பல இடங்களில் ஒட்டியிருந்தார். அந்தத் துண்டறிக்கையில், தனது கல்வி நிலையத்தில் முன்னரே எதிர்வுகூறப்பட்ட 3 வினாக்கள் பரீட்சை வினாத்தாளில் உள்ளது. அத்துடன் அந்த வினாக்களை அப்படியே துண்டறிக்கையிலும் குறிப்பிட்டிருந்தார்.

உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டு வந்த மாணவர்கள் இந்தத் துண்டறிக்கையைப் பார்த்து அதிர்ச்சியடைந்தனர். உடனடியாகவே பெற்றோர்கள், பரீட்சைகள் திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்தனர். பரீட்சைகள் ஆணையாளர் பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்கு கொண்டு சென்றார். பொலிஸ் திணைக்களம் விரைந்து நடவடிக்கை எடுத்தது.

துண்டறிக்கை வெளியிட்ட ஆசிரியர் தலைமறைவானார். அவரது தந்தையும், சகோதரரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். துண்டறிக்கை வெளியிட்ட அச்சக உரிமையாளர் அதனைத் தொடர்ந்து கைதானார். இவர்கள் மூவரிடமும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டது. விடயம் பொலிஸாரிடமிருந்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்குப் பாரப்படுத்தப்பட்டது.

மூவரிடமும் பெற்றுக் கொள்ளப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில், பொலிஸ் திணைக்களத்தின் மருத்துவப் பிரிவில் கடமையாற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் மகன் கைது செய்யப்பட்டார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் பல 'திடுக்கிடும்' தகவல்கள் வெளியானது.

**என்ன நடந்தது ?**

பரீட்சையின்போது வினாத்தாளை 'ஸ்கான்' செய்யும் நவீன இலத்திரனியல் கருவியையும், காதில் மாட்டக் கூடிய சிறிய கருவியையும் மாணவன் பரீட்சை மண்டபத்துக்கு எடுத்துச் சென்றுள்ளார். இரசாயனவியல் வினாத்தாள் வழங்கப்பட்டதும் அதனை 'ஸ்கான்' செய்து 'வட்ஸ்அப்பில்' கம்பாக ஆசிரியருக்கு அனுப்பியுள்ளார். அவர் வழங்கிய பதில்களைக் கேட்டு விடைஎழுதியுள்ளார். இதற்காகக் கம்பகா தனியார் கல்வி நிறுவன ஆசிரியருக்கு 10 லட்சம் ரூபா பணம் வழங்கப்பட்டுள்ளது.

மாணவன் அனுப்பிய வினாத்தாளில் உள்ள மூன்று வினாக்களைத் தனது முன்னோடிப் பரீட்சையில் உள்ளதாகத் தெரிவித்து, ஆசிரியர் துண்டறிக்கை வெளியிட்டுள்ளார். அவர் வர்த்தக நோக்கிலேயே அதனை மேற்கொண்டுள்ளதை கண்டறிந்துள்ளதாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர். பரீட்சைக்கு முன்னதாக வினாத்தாள் வெளியாகவில்லை என்பதையும் அவர்கள் உறுதி செய்தனர்.

கம்பகா தனியார் கல்வி நிறுவன ஆசிரியரைக் கைது செய்வதற்கான முயற்சிகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாகக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர். (5,31)

## ராஜிதவுக்கும் ஆப்புத் தயார்

### நம்பிக்கையில்லாப் பிரேரணை சபாநாயகரிடம்



கொழும்பு, ஓக. 25
ஏழு குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் சுகாதார அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்னவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை சபாநாயகரிடம் நேற்று ஒப்படைத்துள்ளதாக மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா தெரிவித்தார்.

அரசு மதிப்பீடு செய்த பெறுதியை விடக் குறைந்த பெறுமதிக்கு மோதர மீன்படி துறைமுகத்தை குத்தகைக்கு விடல், ஊழல் மோசடி விசாரணைகளில் கலந்து கொள்ளாமல் தவிர்த்து வருகின்றமை உள்பட ஏழு குற்றச்சாட்டுக்கள் இவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (5)

## நடிக்க வேண்டாம்

### விஜயதாசவிடம் அஜித் கோரிக்கை



கொழும்பு, ஓக. 25
தேசப் பற்றுள்ளவர் போன்று பொய்யாக நாடகம் நடித்து உண்மையை மறைக்க முற்பட வேண்டாம். இவ்வாறு பிரதி அமைச்சர் அஜித் பீ பெரேரா, பதவி நீக்கப்பட்ட நீதி அமைச்சர் விஜயதாசவிடம் கோரிக்கை விடுத்தார்.

'பதவி நீக்கப்பட்டதும், அமைச்சரவையில் இருப்பதற்கு வெட்கப்படுவதாக விஜயதாச கூறியுள்ளார்.

பதவி நீக்கக் கடிதம் கிடைக்காமல் இருந்திருந்தால், வெட்கப்படும் அமைச்சரவையில் அவர் தொடர்ந்தும் இருந்திருப்பாரா ? அலரி மாளிகைக்கு சட்ட மா அதிபரை அழைத்து அவரை அச்சுறுத்தியதாகப் பதவி நீக்கப்பட்ட விஜயதாச கூறியுள்ளார். இது மிகவும் பொய்யான ஒரு குற்றச்சாட்டு. இதனை முற்றாக மறுக்கின்றோம்' - என்றார் அஜித் பீ.பெரேரா. (5)

Softlogic Finance தங்க கடன்
அவசர பணத்தேவைக்கு உங்கள் தங்கப் பவுணுக்கு அதிகூடிய முற்பணம்
முன்கூட்டிய அறிவித்தலின்றி தங்கநகைகளை துரிதமாக மீட்கும் வசதி
தங்க நகைகளுக்கு பூரண பாதுகாப்பு
செயற்றிறன் மிக்க சினேகபூர்வமான ஊழியர்கள்
பகுதிக் கொடுப்பனவுகள் செய்யும் வசதி
தெரிவுசெய்வதற்கு முற்பண கொடுப்பனவு முறைமைகள் பல



24 கரட் ரூ. 45,500/-
22 கரட் ரூ. 38,000/-
சுன்னாகம் - 0722 527664, 0212 242775
யாழ்ப்பாணம் - 0722 334596, 0212 219444

## திருமலையை ஜப்பானும் குறிவைப்பு

கொழும்பு, ஓக. 25
திருகோணமலையின் அபிவிருத்தியில் பங்கெடுக்க ஜப்பான் ஆர்வம் கொண்டுள்ளது என்று இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் கெனிச்சி சுகனுமா தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுனர் றோகித போகொல்லாகமவைச் சந்தித்துப் பேச்சு நடத்திய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை அபிவிருத்தி தொடர்பான திட்டங்களை வரைய ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சிங்கப்பூருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் பங்கெடுக்க ஜப்பானும் விருப்பம் கொண்டுள்ளது என ஜப்பானிய தூதுவர் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை இயற்கைத் துறைமுகத்தை மையமாக வைத்து, அங்கு கால் பதிக்க இந்தியா, அமெரிக்கா முயற்சித்துவரும் நிலையில் ஜப்பான் தூதுவர் இந்தக் கருத்தை வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

## விஜயதாச பொதுவேட்பாளரா?

### வாய்ப்பே இல்லை என்று அடித்துக் கூறுகிறது மகிந்த அணி

கொழும்பு, ஓக. 25
நீதி மற்றும் புத்த சாசன அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட விஜயதாச ராஜபக்ச மகிந்த அணியின் பொது வேட்பாளராக நிறுத்தப்படமாட்டார் என்று அந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகம தெரி வித்துள்ளார்.


பதவி நீக்கம் செய்யப்பட்ட விஜயதாச ராஜபக்சவை மகிந்த பொதுவேட்பாளராக நிறுத்தப் போவதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன. இதுகுறித்து கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், நாடாளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகமவிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

'மகிந்த அணி ஒருபோதும் பொது வேட்பாளருக்குப் பின்னால் செல்லாது. எதிர்காலத்தில் அவ்வாறு யாரையும் நிறுத்தாது. நாங்கள் எமது வேட்பாளரையே நிறுத்துவோம். விஜயதாச ராஜபக்ச எமது கட்சிக்கு வந்தால் ஏற்றுக் கொள்வோம். அவர் மட்டுமல்ல யார் வந்தாலும் சேர்த்துக் கொள்வோம்' - என்றார் திலும் அமுனுகம. (5,31)

**புன்னகை மன்னன்**

பிறப்பிலும் சரி
இறப்பிலும் சரி
மனிதனாகவே
ஜனனித்து
மரணிக்கிறோம்

இடையில் மட்டும்
நிறையவே மிருகமாக
வாழ்ந்து
தொலைக்கிறோம்



# 10 வருடங்களின் பின் மாதவன் ஐஸ்வர்யா இணைகின்றனர்

10 வருடங்களுக்கு பின்னர் ஐஸ்வர்யாராய், மாதவன் இருவரும் மீண்டும் இணைந்து நடிக்கவிருக்கின்றனர்.
ஹிந்தி பட இயக்குனர் அதில் மஞ்சுரேகர் இயக்கத்தில் தயாராகும் படம் 'பேனிகான்'.
இதில் அனில்கபூர், ஐஸ்வர்யாராய் உள்பட பலர் நடிக்கிறார்கள். இந்தப் படத்தில் ஐஸ்வர்யாராய்க்கு ஜோடியாக நடிக்க வேறு நடிகர்களிடம் பேசப்பட்டது அக்சய் ஒப்ராயை நடிக்கக் கேட்டனர். அவரும் நடிக்கவில்லை. இதையடுத்து, ஐஸ்வர்யாராய் ஜோடியாக மாதவன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் 'பேனிகான்' படத்தை வெளியிடத் திட்டமிட்டுள்ளனர். இந்தப் படப்பிடிப்பு விரைவில் தொடங்குகிறது. 2007ஆம் ஆண்டு மணிரத்னம் இயக்கிய 'குரு' படத்தில் ஐஸ்வர்யாராயும், மாதவனும் இணைந்து நடித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் புத்துணர்வு மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். மாமன், மைத்துனர் வகையில் கேட்ட உதவி கிடைக்கும்.

**இடபம்:** பிடிவாதக் குணத்தால் குடும்பத்தில் குழப்பம் ஏற்படலாம். தொழிலில் வருமானம் சுமாராக இருக்கும். பெற்றோரின் ஆலோசனை நன்மைக்கு வழிவகுக்கும்.

**மிதுனம்:** அடுத்தவர் வியக்கும் வகையில் பணியாற்றுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனையின் அளவு அதிகரிக்கும். சேமிக்கும் விதத்தில் வருமானம் கிடைக்கும்.

**கடகம்:** பணிகளில் மேம்போக்காக ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் சுமாரான ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும்.

**சிங்கம்:** பேச்சு, செயலில் நேர்மை நிறைந்திருக்கும். நல்லவர்களின் அறிமுகமும், ஆசியும் கிடைக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை முன்னேற்றம் பெறும்.

**கன்னி:** மனதில் எண்ணிய எண்ணம் செயல் வடிவம் பெறும். நண்பரின் உதவி தக்க சமயத்தில் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும்.

**துலாம்:** குடும்ப விஷயத்தைப் பற்றி பிறரிடம் பேச வேண்டாம். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைப்பதில் தாமதம் உண்டாகும். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

**விருச்சிகம்:** உறவினரின் செயலை விமர்சனம் செய்ய வேண்டாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பெண்களால் குடும்பத்தில் ஒற்றுமை ஏற்படும்.

**தனுசு:** கடந்த கால அனுபவம் வளர்ச்சிக்கு துணை நிற்கும். புதிய வாய்ப்பை சரியாகப் பயன்படுத்துவீர்கள். தொழிலில் வியத்தகு அளவில் இலாபம் அதிகரிக்கும்.

**மகரம்:** மனதில் மகிழ்ச்சி நிலைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். வாழ்க்கைத்தரம் மேம்படும். பணக்கடனில் ஒரு பகுதி அடைபடும்.

**கும்பம்:** சிலரது பேச்சால் சங்கடத்திற்கு ஆளாகலாம். பணியில் மட்டும் அக்கறை கொள்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும்.

**மீனம்:** செயலில் நிதானத்தைப் பின்பற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாவர்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | | | 3 | | | 5 |
| 8 | | 7 | | | 4 | | | |
| | 4 | | | | | 1 | | |
| | 9 | | 3 | | 5 | | 2 | |
| | | | 2 | 9 | 6 | | | |
| | | 6 | | 4 | | | | |
| 9 | | | | | | | 3 | |
| | | | | | | 2 | 5 | 6 |
| | 3 | | | 2 | | 4 | | 1 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 8 | 3 | 4 | 9 | 7 | 6 | 1 | 5 |
| 7 | 1 | 5 | 3 | 6 | 2 | 4 | 9 | 8 |
| 4 | 6 | 9 | 1 | 8 | 5 | 2 | 7 | 3 |
| 5 | 4 | 2 | 7 | 3 | 6 | 1 | 8 | 9 |
| 8 | 7 | 1 | 9 | 2 | 4 | 3 | 5 | 6 |
| 9 | 3 | 6 | 8 | 5 | 1 | 7 | 2 | 4 |
| 1 | 2 | 8 | 5 | 4 | 3 | 9 | 6 | 7 |
| 6 | 9 | 4 | 2 | 7 | 8 | 5 | 3 | 1 |
| 3 | 5 | 7 | 6 | 1 | 9 | 8 | 4 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல் களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. [உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்]. இந்த ஒவ் வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் [மீண்டும் மீண்டும்] வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங் கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டி ருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை.



# எமலோகத்தில் பேஸ்புக் விசாரணை

**எமன் :** சித்ரகுப்தா,யார் இந்த மானிடன்? இவன் செய்த தவறுகள் என்ன?
**சித்ரகுப்தன் :** எமதர்மா,இந்த மானிடன் மிகப்பெரிய குற்றத்தைச் செய்துள்ளான்.அதாவது பேஸ்புக் என்றழைக்கப்படும் இணையதளத்தில், மங்கையர்களின் பெயரில் சுமார் நூறுக்கும் மேற்பட்ட போலிக் கணக்குகளைத் திறந்து,அதன் மூலம் பல ஆடவர்களைக் கிறுக்குப் பிடிக்க செய்துள்ளான்.
**மானிடன் :** எமதர்மா... ஏதோ தெரியாம, ஒரு ஆர்வக் கோளாருல அப்படிச் செய்துவிட்டேன்.மன்னிச்சிடுங்க.
**எமன் :** நான் யாருக்கும் மன்னிப்புக் கொடுப்பதில்லை.நீ செய்த தவறுக்குக் கட்டாயம் தண்டனை அனுபவிக்கனும். ம்ம்ம்....யாரங்கே.... இவனை, பெரிய எண்ணெய்ச் சட்டியில் போட்டு வறுத்தெடுங்கள்.
**மானிடன் :** ஹாஹாஹாஹா
**எமன் :** ஏன் சிரிக்கிறாய்?
**மானிடன் :** பேஸ்புக்ல நூறு போலிக் கணக்கு வச்சிருந்த எனக்கே இவ்வளவு பெரிய எண்ணெய்ச் சட்டி என்றால் இந்த பேஸ்புக்க கண்டுபிடிச்ச மார்க்குக்கு எவ்ளோ பெரிய எண்ணெய் சட்டியா இருக்கும்னு நினைச்சுத் தான் சிரிச்சேன்.



அனைவரையும் அரவணைத்துப் போகும் முதல்வர் வேண்டும்.




அதுக்கு சிநேகனத்தான் முதல்வர் ஆக்கனும்..!

ஓவியா நீ யாரையோ நினைச்சு வாழா வெட்டியா இருக்கப் போற



நாங்க உன்னையவே நினைச்சு வெட்டியா வாழாம இருக்கப் போறோம்...

## வாழ்க்கை



# சூதும், வாதும் வேதனை செய்யும்

ஒன்றைப் பெற்று பின்னர் ஒன்பதை இழக்கச் செய்யும் ஆட்டம் சூதாட்டமே. ஒன்றை என்பது ஒரு ஆட்டத்தில் வெற்றி பெறுதல் ஆகும். அந்த வெற்றியே அடுத்தடுத்து நேரப்போதும் ஒன்பது தோல்விகளுக்கும் வித்தாக அமைகிறது. ஒரு வெற்றியே பல வெற்றிகளை அடைவோம் என்ற எண்ணங்களைத் தூண்டுகிறது. ஆனால் இதில் ஒன்றை மட்டும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். உண்மையாக ஆட முயல்வோர் தோல்வியைத் தான் தழுவி விடுவர். காரணம் சூதாடுவதில் ஏமாற்று வேலை தான் அதிகம். ஆனால் அந்த ஏய்க்கும் வேலை, ஏய்பவனுக்குத்தான் புலப்படுமேயன்றி ஏனையவர்களுக்குப் புலப்படாது.

எப்படி கண் கட்டி மாய வித்தைக்காரன் பார்ப்பவர்களை எல்லாம் தனது திறமையால் ஏமாற்றுகிறானோ அப்படியே சூதாட்டக்காரனான ஒருவனும் பிற ஆட்டக்காரர்களை சாதுரியமாக ஏமாற்றுகிறான் அவ்வளவே.



குடிப்பழக்கம் உள்ளோருக்கு அந்தப் பழக்கம் எப்படிக் காந்தம் போல் குடிக்கக் கவருகிறதோ, அதே போலத்தான் சூதாட்டமும்.

குதிரைப் பந்தயம் கூட ஒரு வகையில் அந்தத் தன்மையே. ஒரு குதிரையின் தோற்றப் பொலிவைப் பார்த்து குறித்த குதிரை ஜெயிக்கும் என்ற எண்ணத்தில் ஒருவர் அதன் மீது பணம் கட்டுவார். ஆனால் பாதித்தூரம் ஓடிய அந்தக் குதிரை ஏதாவது தவிர்க்க முடியாத காரணத்தால் பின் வாங்கி விடும். அவ்வளவுதான் அதனை நம்பி அதன் பேரில் பணம் கட்டியவர்கள் யாவரும் தலையின் மேல் தமது கைகளை வைத்துக் கொள்வார்கள்.

புகழேந்திப் புலவர் தான் இயற்றிய நளவெண்பாவில் "சூதாடுதல் மன்னர்க்கு இயல்பு" என்கிறார். சூதாட்டக்காரனான புட்கரனை நன்றாகவே வர்ணித்துப் பாடுகிறார். ஆனால் இறுதியில் சூதாட்டத்தால் நளன் நாடு நகர் மனைவி மக்களை இழந்த விபரீதங்களையும் அவலங்களையும் கூறிச் செல்கிறார்.

மகாபாரத்திலும் சூதாட்டம் முக்கிய பங்கு வகிக்கிறது. இதில் புகழ்பெற்ற சூதாட்டக்காரன் சகுனியே. இந்த சகுனி ஆடிய ஆட்டத்திலேயே பாண்டவர்கள் ஐவரும் தோல்வியைத் தழுவி வனவாசம் செல்கின்றனர். அரச சபை முன்னிலையில் பாண்டவர் மனைவி மானபங்கப்படுத்தப்படுகிறாள். சூதும் கூறி அதன் விளைவு களையும் கூறுவன காவியங்கள். இதன் தீய விளைவினால்தால் சூதாட்டத்தைப் பஞ்சமா பாதகங்களில் ஒன்றாகக் கருதி சூதாடுவதைச் சான்றோர்தடை செய்துள்ளனர்.

இந்தக் காலத்தில் மேலை நாடுகளில் சூதாடும் இயந்திரம் கூட வந்து விட்டது.

எது எப்படி இருப்பினும் தார்மீக ரீதியாகப் பார்க்கும் போது சூதாட்டம் தவிர்க்கப்பட வேண்டிய ஒன்றே.

# செயல்களை நிகழ்காலத்தில் எழுதுவோம்



உ+ம் நான் நடக்கிறேன்



அக்கா ..........................



அண்ணா படம் ...............



தங்கை........................



பாமா...................



நண்பன்......................

# பூகம்பம்




- பூகம்பம் உயிரையும் உடமைகளையும் அழிக்கும் இயற்கையின் சீற்றம் ஆகும்
- பூகம்பம் பூமிக்கு அடியிலும் ஏற்படும்.
- டெக்டானிக் பாறைகள் சுமார் 20கி.மீ.முதல் 300 கி.மீ.வரை கனம் கொண்டவை. இவை வெப்ப சலனத்தால் வருடத்துக்கு சுமார் 5 செ.மீ.முதல் 10 செ.மீ.வரை நகர்ந்து ஒன்றோடொன்று மோதுகின்றன.
- இதன் விளைவாக இந்தப் பாறைகளில் அழுத்தம் உண்டாகிறது.
- தொடர்ந்து இந்தப் பாறைகள் ஒன்றின் அழுத்தத்தை மற்றொன்று தாங்க முடியாத நிலையில் இந்தப் பாறைகள் ஒன்றிலிருந்து ஒன்று வழுக்கி விடுகிறது. அப்போதுதான் அந்தப் பாறையின் பிளவில் பூமி அதிர்வு உண்டாகிறது.
- இந்த அதிர்வுகள் பல விதமான அலைகளாக பூமியின் மேற்பரப்புக்கு வந்து நில நடுக்கத்தை ஏற்படுத்துகின்றன.
- நில நடுக்கங்கள் இயற்கையாகவும் செயற்கையாகவும் ஏற்படுகின்றன.
- பாறைகளை வெடி வைத்து தகர்த்தல், போர்க் காலங்களில் குண்டுகளை வெடிக்க வைத்தல், தீவிர வாதிகள் ஏகப்பட்ட ஆர்.டி.எக்ஸ் குண்டுகளை வெடிக்கச் செய்தால் தொடர் வண்டிகள் செல்லுதல் பெரிய கட்டடங்களை இடித்தல் ஆகியவற்றால் செயற்கை நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன.
- இந்த செயற்கை நிலநடுக்கங்களால் அதிக சேதங்கள் ஏற்படுவதில்லை.
- எரிமலைகள் குமுறும் போது அருகில் உள்ள பகுதிகளில் நிலநடுக்கம் ஏற்படுகிறது. சில சமயங்களில் எரிமலை வெடிப்பதற்கு முன்னரே நிலநடுக்கம் தோன்றுவதும் உண்டு.
- பூமிக்குக் கீழே இருக்கும் எரிமலைக் குழம்பு திடீரெனப் பீறிட்டு மேல் நோக்கி எழுவதால் இத்தகைய நிலநடுக்கம் ஏற்படுகிறது.
- திடீரென ஏற்படும் நில அசைவுகளினால் தோன்றும் பூகம்பம் மிகவும் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும். பூமியின் மேற்பகுதியில் இருந்து அதாவது புவியோட்டில் இருந்து சுமார் 5 கி.மீ. முதல் 50 கி.மீ. ஆழத்திலும் சில இடங்களில் 600 கி.மீற்றர் ஆழத்திலும் கூட பூகம்பம் உண்டாகிறது.
- பாறைகளில் பிளவுகள் ஏற்பட்டு பாறைகள் பிறவுத் தளத்தின் வழியாக பாறைக் குழம்பு இடம்பெயர்ந்து பூகம்பத்தைத் தோற்றுவிக்கின்றது.

# இலங்கையின் புகழ்பெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை

| நகரம், மாவட்டம் | புகழ்பெற்றதும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவையும் |
|---|---|
| கண்டி | தலதாமாளிகை, பெரதெனியா தாவரவியல் பூங்கா, எம்பக்க தேவாலயம் |
| யாழ்ப்பாணம் | நல்லூர் கோயில், யாழ்ப்பாணக் கோட்டை, மந்திரிமனை, நாகபூசணி அம்மன், ஜமுனாஏரி, ஊர்காவற்றுறை கடற்கோட்டை, |
| அனுராதபுரம் | புனித வெள்ளரசு மரம், மிகிந்தலை, அபயகிரி, றுவன்வெலிசாய, ஜேதவனராமய, மகாவிகாரை |
| கம்பளை | லங்காதிலக விகாரை, கடலாதெனிய விகாரை |
| குருநாகல் | யாப்பகூவ |
| பொலநறுவை | சிவன் கோயில், லங்கதிலக விகாரை |

# இரு படங்களுக்கும் இடையே பத்து வித்தியாசங்கள் கண்டுபிடிப்போம்



# 20ஆவது அகவையில் சனச அபிவிருத்தி வங்கி


சனச அபிவிருத்தி வங்கியானது வங்கித் துறையில் தனக்கென ஒரு இடத்தை தக்கவைத்திருக்கும் 2 தசாப்த கால வரலாற்றை கொண்ட ஒரு சிறந்த நிதி நிறுவனமாகும். அது இன்று தனது 20ஆவது அகவையில் கால் பதிக்கிறது. 1997ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி சனச வங்கி உருவாக்கப்பட்டது. ஆரம்பத்தில் கூட்டுறவுக் குழுக்களாக காணப்பட்டு பிற்காலத்தில் 8 ஆயிரம் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு அமைப்பாக வளர்ச்சி கண்டது. இலங்கையில் பொருளாதாரத்தை வளர்ச்சியடைய செய்யும் பொருட்டு பலமான வங்கியாக தோற்றம் பெற இது வித்திட்டது.

123 மில்லியன் ரூபா திரட்டப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட சனச வங்கி தனியொரு நபராலோ, அரசினாலோ நிறுவப்பட்டதல்ல. ஒரே இடத்தில் பணி புரிந்த 20 பேர் தமது வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக உருவாக்கிய அமைப்பே சனச வங்கி. எனவே இது மக்கள் சார்ந்த அமைப்பாக காணப்படுகிறது. இங்கு சமுதாய நோக்கோடு கட்டியெழுப்பப்பட்ட இந்த வங்கி சிறந்தக் கூட்டுறவை மக்களிடையே கட்டி யெழுப்புவதற்காகவும் தோற்றம் பெற்ற தாகும்.

போர், வெள்ளப்பெருக்கு, சுனாமி போன்ற அசாதாரண சூழலையையும் எதிர்த்து பலமான ஒரு நிறுவனமாக இது விளங்கிவருவதோடு ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் தற்போது வரை தடையற்ற துரித வளர்ச்சியை வங்கி கண்டுவருகிறது. நாடளாவிய ரீதியில் 91 கிளைகளை கொண்ட சனச அபிவிருத்தி வங்கி ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்களைக் கொண்டு இயங்குகிறது. வடமாகாணத்தில் மாத்திரம் 23 கிளைகள் உள்ளன. சனச அபிவிருத்தி வங்கி தொழில்நுட்ப ரீதியாக தன்னை நிலைப்படுத்திச் செயற்படுகிறது. மையப்படுத்தல் வங்கி முறைமை, தொலைபேசி வங்கி சேவை ஆகியவற்றுடன் தனது பணிகளை விரிவாக்கியுள்ளது.

சிறு முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு நுண் நிதி நிறுவனங்கள் தோற்றம் பெற்றன. ஆரம்பத்தில் இலங்கையில் வறுமை வீதம் 40 சதவீதமாகக் காணப்பட்டதோடு தற்போது 7 சதவீதமாகக் குறைந்துள் ளது. இதற்கு காரணம், இன்று தொழில் முயற்சியாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையாகும். சிறு தொழில் முயற்சியாளர்கள் எனும் போது குறைந்த செயற்றிறனுடனும் நிதி சந்தையின் தகவல்கள் அறியாத, சவால்களை சந்திக்கும் நிறுவனங்களுக்கு உதவுதலே சனச அபிவிருத்தி வங்கியின் முக்கிய இலக்காகும். வாடிக்கையாளர் இலகு டிஜிட்டல் உள்ளக வசதியையும் சனச வங்கி ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. கடன் வழங்கலில் துரித செயன்முறையை கொண்டு அமைந்தமையும் சனச வங்கியின் சிறப்பம்சமாகும். தனது பயணத்தில் கடந்த 10 வருட காலமாக இளைஞர், சமூகம் மற்றும் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. தெற்காசியாவில் சேமிப்பு குறைந்த நாடாக இலங்கை காணப்படுகிறது. சேமிப்பில் ஒழுக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு சனச அபிவிருத்தி வங்கி தனது 20 ஆவது ஆண்டு நிறைவையொட்டி 'ரொப் சேவர்' (TOP Saver) எனும் சேமிப்பு நடை முறையை அறிமுகம் செய்கிறது.

SDBL



சෙවණ / Development Fortune

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▶ 68
சீட்டிழுப்பு திகதி ▶ 24.08.2017 வியாழக்கிழமை

வெற்றி இலக்கங்கள்: 35 40 47 65
சுப்பர் இலக்கம்: 01
அதிர்ஷ்ட மாதம்: ஒக்டோபர்

அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் ரூ. 15, 847, 254/= | அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 27, 41, 228/= | அடுத்த ஜக்பொட் ரூ. 24, 06, 904/=

இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்
01 25 34 39
2 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ.20ம் 3 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ.500ம் மற்றும் 4 இலக்கங்களும் பொருந்துமாயின் ரூ.50,000ம் வெல்ல முடியும்

2017.08.26 ஆம் திகதி சனிக்கிழமை இளஞ்சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.த சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

## யாழ் மாவட்ட செயலகம், இலங்கை
## அழைப்பின் பேரில் வாகனங்களை வாடகைக்கு பெற கேள்விப் பத்திரங்கள் கோரல்

யாழ் மாவட்ட செயலகத்தின் உத்தியோகபூர்வ தேவைக்காக தேவையான நேரங்களில் பயன்படுத்துவதற்கு (on call basis) ஆங்கில இலக்கப் பதிவுடைய கீழ்க்குறிப்பிட்ட வாகனங்களின் சேவையைப் பெற்றுக் கொள்ளல். அவ்வாகனத்திற்கான சாரதி, எரிபொருள், காப்புறுதி மற்றும் திருத்தவேலைகள் போன்ற செலவீனங்களை உள்ளடக்கி, கிலோமீற்றர் அடிப்படையில் வாடகைக்கு வழங்கக்கூடிய வாகன உரிமையாளரிடமிருந்து விலைமனு கோரப்படுகின்றது.

| வாகன வகை | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் - ரூபா | கேள்வி ஆவணம் ஏற்றுக் கொள்ளும் காலம் | கேள்வி ஆவணம் பெற்றுக் கொள்ளும் பகுதி |
|---|---|---|---|
| 1. பேருந்து ஆசன எண்ணிக்கை 54 அரை சொகுசு | 1,000.00 | 28.08.2017 - 11.09.2017 பி.பகல் 1.30 மணிவரை | பெறுகைகள் பிரிவு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் |
| 2. வான் (Hiace) ஆசன எண்ணிக்கை 14 குளிரூட்டல் வசதியுடன் | 1,000.00 | | |
| 3. சிறிய Taxi | 1,000.00 | | |

**நா.வேதநாயகன்,**
**தலைவர், கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.**

உ

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

# திருமண அழைப்பு

**அன்புடையீர்,**

நிகழும் சுபமங்களகரமான ஏவிளம்பி வருடம் ஆவணித்திங்கள் 11 ஆம் நாள் (27.08.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.31 மணிமுதல் 11.00 மணிவரையுள்ள சுவாதி நட்சத்திரமும் சித்தயோகமும் துலாம் லக்கினமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

திரு.திருமதி மகேஸ்வரன் சுந்தராம்பாள் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் திருநிறைச்செல்வன்
**பிரதீப்**
அவர்களுக்கும்



திரு.திருமதி செல்லத்துரை இராஜேஸ்வரி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வி திருநிறைச்செல்வி
**சிந்துகா**
அவர்களுக்கும்

இறையருள் துணைகொண்டு அன்புள்ளங்கள் சேர, சுற்றமும் நட்பும் சூழ கன்னிகாதான மாங்கல்யதாரணம் இல.1229, காங்கேசன்துறை வீதி, பூநாறிமரத்தடி, **"செல்வா மஹால் திருமண மண்டபத்தில்"** நடைபெற பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தாங்கள் தங்கள் குடும்பசமேதரராய் வருகைதந்து மணமக்களை வாழ்த்தி தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**வரவேற்பு உபசாரம் :**

30.08.2017 புதன்கிழமை மாலை 6.00 மணியளவில் இல.10,12,பூநாறி மரத்தடி, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணத்தில் **"செல்வா பலஸ் மண்டபத்தில் ஆம்பல் அரங்கில்"** நடைபெறும்.

**குறிப்பு :**

இவ் அழைப்பினை சுற்றத்தார், உறவினர்கள், நண்பர்கள், எம்பணியில் தொடர்புடையவர்கள் அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

**இங்ஙனம் தங்களின் அன்பான இனிய நல்வரவை நாடும்,**

**இல.25/8, அரசடி ஒழுங்கை,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

திரு. திருமதி செல்லத்துரை இராஜேஸ்வரி குடும்பத்தினர்,
**கவியரசு நகைப்பூங்கா உரிமையாளர்,**
செல்வாமஹால் மண்டப உரிமையாளர்,
**இராஜேஸ்வரி மண்டப உரிமையாளர் (கோண்டாவில், தெல்லிப்பழை),**
**திவ்யமஹால் மண்டப உரிமையாளர், செல்வாபலஸ் மண்டப உரிமையாளர்.**
**021 221 9779, 021 222 4360**



**வேலைவாய்ப்பு**

கட்டட நிர்மாணத்துறையில் அனுபவமுள்ள Technical Officer யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களுக்குத் தேவை.

**தொடர்பு-078 502 9616**

**ஜயோதா**
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1392
சீட்டிழுப்பு திகதி 2017.08.24
வெற்றி இலக்கங்கள்: 24 30 54 65 C
12 53 57 62
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 17,510,064/-

**SUPER BALL**
உத்தியோகபூர்வ முடிவுகள் சீட்டிழுப்பு வாரம் ▶ 693
சீட்டிழுப்பு திகதி ▶ 24.08.2017 வியாழக்கிழமை
L 04 21 24 41
சுப்பர் ஜக்பொட் ரூ. 57, 088, 904/=
வெல்லப்படவில்லை
இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்: 01 39 46 53
நீல நிற டிக்கட்டுகள் 2017.08.26 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
2 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ.20ம், 3 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ.500ம் மற்றும் 4 இலக்கங்களும் பொருந்துமாயின் ரூ.50,000 வெல்லமுடியும்.
தொ.இல : 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 22 03 1938



இறப்பு 04 09 2016

### அமரர் நாகேஸ்வரி தர்மலிங்கம்

(நாமகள் பாலர் பாடசாலை இயக்குநரும் ஓய்வு நிலை ஆசிரியையும்)

சதுர்த்தி திதியில் இத்தியடி விநாயகனின் இறையடி சேர்ந்த எமது குடும்பத்தின் விளக்கு அணைந்து ஆண்டொன்று சென்றாலும் ஆறாத துயரத்தில்ஆழ்ந்திருக்கும் நாம் எம் அன்னையின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

நாமகள் பாலர் பாடசாலை
சங்கத்தானை,சாவகச்சேரி
077 494 4994,
004 795 432 934.

மகள்
த.தர்மினி
சகோதரி,பெறாமக்கள்
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நித்தியலட்சுமி சண்முகதாஸ்



No : 215\19 இராசாவின் தோட்டம் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நித்தியலட்சுமி சண்முகதாஸ் நேற்று (24.08.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகதாஸ்ன் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கனகசபை விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும் கனியாஸ்திரி ,திலகவதி, குகதாஸ், முருகதாஸ், தர்மதாஸ் (சிவா, நியூராகம்ஸ் பட்டுச்சேலை உரிமையாளர்)காலஞ்சென்றதியாகதாஸ்(செந்தில்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மலர், நவரத்தினம் , இராஜேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் தங்கராணியின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற சிவசம்பு மற்றும் புனிதவதி, லோகேஸ்வரன்,மங்களம்மா,சிவதாஸ், ஞானாம்பிகை, இராஜேஸ்வரி,காலஞ்சென்றவர்களான கிருஸ்ணதாஸ், நடராசா, நாகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (25.08.2017) வெள்ளிக்கிழமை மு.ப 9.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ்ப்பாணம் வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் .இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

No:215\19 இராசாவின் தோட்டம்
யாழ்ப்பாணம்.077 346 0071

தகவல்:மகன்
ச.தர்மதாஸ்(சிவா)

தோற்றம் 27 08 1945



மறைவு 24 08 2017

### இளையவர் பசுபதி

மணற்புலம் அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இளையவர் பசுபதி (24.08.2017) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இளையவர் தம்பதியரின் அன்புமகனும் முருகேசு, கிருஸ்ணர், பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச்சகோதரரும் செல்வமணியின் அன்புக்கணவரும் தவரஞ்சினி (வலி. வடக்கு பிரதேசசபை), தர்சினி (கோப்பாய் பிரதேச செயலகம்), தயானி, ஐங்கரன் (நன்னடத்தை உத்தியோகத்தர், வேலணை), சங்கீதா ஆகியோரின் அன்புத்தந்தையும் ரவிச்சந்திரன் ( நியூ லம்போதரா ஹாட்வெயார், சுன்னாகம்), பாலநாதன், சந்திரன், சுஜேஸ்கா (கணக்காளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாரும் இரஜிவர்ணன், பிரனீவா, சரணிகா, மதுமிதா, வேணுமிதா, டோஷகா, போமிகா, விஷ்ணுகன், ஜக்ஷயா, ஜனுக்ஷயா, கிஷால், கம்ஷத் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2016) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி, மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மணற்புலம், அளவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### அம்பலவாணர் ஸ்ரீஸ்கந்தராசா

(ஓய்வுபெற்ற விரிவுரையாளர் - பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை. தொழில்நுட்பக் கல்லூரி அதிபர். சம்மாந்துறை. யாழ்ப்பாண தொழில்நுட்பக் கல்லூரி உபஅதிபர்)



பிறப்பு 25.05.1933 இறப்பு 24.08.2017

மிருசுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் சங்கத்தானை மற்றும் கலாசாலை வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் ஸ்ரீஸ்கந்தராசா நேற்று (24.08.2017) வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, நடேசபிள்ளை மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் உலகேஸ்வரி. காலஞ்சென்ற அருணாசலம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் கேதீஸ்வரன். விவேகானந்தி, விவேகானந்தா. முருகானந்தா ஆகியோரின்சிறியதந்தையும்விஜயரூபன். கிருபாரூபன். ரோகினி. விக்ன விநாயகன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2017) வெள்ளிக் கிழமை மு.ப.10.00 மணியளவில் கலாசாலை வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள வசிப்பிடத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி வடக்கு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3 ஆம் ஒழுங்கை,
கலாசாலை வீதி, திருநெல்வேலி.

தகவல்: குடும்பத்தினர்.
076 703 3323, 077 494 0577,
076 311 9265

## மகாசமாதி

### ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவசுவாமிகள்



கிளிநொச்சி ஜெயந்திநகர், மகாதேவ ஆச்சிரம இரண்டாம் குருபீடாதிபதியான ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள் நேற்று (24.08.2017) வியாழக் கிழமை நண்பகல் மகாசமாதி அடைந்துள்ளார்.

சமாதிக்கிரியைகள் இன்று (25.08.2017) வெள்ளிக்கிழமை நடைபெறும்.

சைவப்பெரியோர்கள் யாபேரும் இவ் வைபத்தில் பங்குபற்றி குருநாதன் திருவருள் பெற்றுக் கொள்ளுங்கள்.

அன்பே சிவம்

024 3243 443

மகாதேவ ஆச்சிரம
நிர்வாகம்.

## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா (எப்சிபா) ஜெயராமன்



பிறப்பு 17.03.1939 இறப்பு 24.08.2017

நாவற்குழி சந்தி, நாவற்குழியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா (எப்சிபா) ஜெயராமன் 24.08.2017 வியாழக்கிழமை காலை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஜெயராமன் அவர்களின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னையா - இளையபிள்ளை தம்பதியரின் இளையமகளும் காலஞ்சென்ற செல்லப்பா மற்றும் குணரத்தினம் காலஞ்சென்றவர்களான நாகம்மா, தம்பிராசா மற்றும் சண்முகநாதன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, செல்லப்பா, கமலாம்பிகை மற்றும் சரஸ்வதி ஆகியோரின் மைத்துனியும் தேவராசா, விமலாதேவி காலஞ்சென்ற நடனராஜா மற்றும் சிங்கராசா (நீர்ப்பாசனத்திணைக்களம் யாழ்ப்பாணம்), தங்கராஜா (இந்தியா), தருமராஜா (சூட்டி), கமலராஜன் (அப்பன் - சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும் நேசமணி, இராமநாதன், லீலா, மலர்விழி (இந்தியா), பாமா, சயந்தினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் ஸ்ரீகாந்தன், ஸ்ரீசத்தியா, சுகீர்தா, யசோதா, மணிவண்ணன், சாந்தினி, யோகேஸ்வரன், மணிமாறன், மணிபல்லவன், டக்சன், சரவணன், சாரா, ஏஞ்சல், துவாரகன், கிரிதரன், தட்சிகா, கிரனியா, கின்சியா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ரியாஸ், தலிஷா, ஜெமிரா ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை A9 வீதி, நாவற்குழி சந்தி நாவற்குழியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று இன்று (25.08.2016) வெள்ளிக்கிழமை பி.ப. 3.30 மணியளவில் நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்பட்டு கைதடியில் உள்ள ஊரியான் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவற்குழிச்சந்தி,
நாவற்குழி.

தகவல்
குடும்பத்தினர்.

## அடுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் எப்ப வருவார்?'' என்று பதில் கேள்வி எழுப்பினார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் சிலர் புதிதாகப் பதவியேற்ற அமைச்சர் ஒருவரை மாகாண சபையில் நேற்று 'வறுத்தெடுத்துள்ளனர்'.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் தேநீர் இடைவேளையின் போது மாகாண சபை உறுப்பினர்கள் சபா மண்டபத்தைவிட்டு வெளியே வந்து கலந்துரையாடினர். அப்போது ஆளும் கட்சி உறுப்பினர் சக உறுப்பி னரைப் பார்த்து, புதிதாகப் பதவியேற்ற அமைச்சர் தனது அமைச்சுக்கு அலை பேசி அழைப்பு எடுத்துப் பேசியுள்ளார். நான் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளேன்.

சிறிது நேரத்தில் அமைச்சுக்கு வருவேன். தயாராக இருங்கள் என்று சொல்லியுள்ளார். அதற்கு அமைச்சுச் செயலர், அது சரி அடுத்த அமைச்சர் யார்? என்று கேட்டுள்ளார்.

இந்தக் கதையை இரு உறுப்பினர்களும் பேசிக் கொண்டிருக்கும்போது புதிதாகப் பதவியேற்ற அமைச்சர் அந்த வழியாக வந்துள்ளார். பேசிக் கொண்டிருந்த இரு உறுப்பினர்களில் ஒருவர், அந்த அமைச்சரை அழைத்து வந்து, உங்களைப் பற்றி இப்படிச் சொல்கின்றார்கள் என்று கூறியதும் அவர் சிரித்துக் கொண்டே அந்த இடத்தை விட்டு அகன்றுள்ளார்.

**லெற்றபாா்ட் நீண்டுவிட்டது அனந்தி பெருமிதம்**

அமைச்சுப் பதவி தனக்கு சுமையாக இருக்கின்றது என்று திருமதி அனந்தி சசிதரன் ஏற்கனவே தெரிவித்திருந்தார். புதிய அமைச்சுப் பொறுப்பு நேற்று முன்தினம் கையளிக்கப்பட்ட பின்னர் சபை அமர்வில் நேற்றைய தினம் சக உறுப்பினர்களுடன் பேசும் போது, எனது அமைச்சு கடிதத் தலைப்பு இப்போது நீண்டு விட்டது என்று குறிப்பிட்டுள்ளார்.

(வ-5,8)



## தடுப்பிலுள்ளோரை...

இடம்பெற்றது. சபைக்கு வருகை தந்த உறுப்பினர்கள் இவ்வாறு கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. மாகாண சபையில் சுலோகங்களை ஏந்தியவாறு உறுப்பினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். 'பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தண்டனை பெற்ற கைதிகளுக்கு பொதுமன்னிப்புவழங்குங்கள். அரசே! அரசியல்கைதிகளைவிடுதலைசெய், பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கு, மறுவாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளுக்கு ஆயுள் தண்டனையா? சிறைச்சாலைகளில் அரசியல் கைதிளை வைத்துக்கொண்டு தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியுமா? ஜே.வி.பி. அமைப்பில் இருந்தவர்களுக்கு 1971, 1989 ஆம்ஆண்டுகளில்பொதுமன்னிப்புவழங்கப்பட்டது, எம்மவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கமுடியாதா?' என்றுஎழுதப்பட்டசுலோகங்களைஏந்திஉறுப்பினர்கள்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அநுராதபுரம்சிறைச்சாலையில்தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தமக்கு எதிராக வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்தக்கோரிகடந்தஐந்துதினங்களாக உணவுஒறுப்புப்போராட்டத்தில்ஈடுபட்டுவருகின்றனர். (வ-4-8)

## பாழுங்...

தேடிப் பார்த்தபோது கிணற்றுக்குள் சடலம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

சடலமாக மீட்கப்பட்ட தொல்புரம் கிழக்கு, சுழிபுரத்தைச்சேர்ந்தஇருபிள்ளைகளின்தாயான குகதாஸ்தாரணி (வயது 37) என்று அடையாளம் காணப்பட்டார்.

இவர் கடந்த சனிக்கிழமை முதல் காணாமல் போயிருந்தார்என்றுதெரிவிக்கப்பட்டது. கணவரை இழந்த இவர் தெல்லிப்பழை மருத்துவமனையில்உளநலச்சிகிச்சைபெற்றுவருகின்றார் என்றும் கூறப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ற-8,ரி1)

## படகு...

அந்தோனியார் ஆலயத்துக்கு சென்றபோதே விபத்து நடந்தது. ஒரு படகில் 6 பேர் பயணித்தனர். படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. அங்கிருந்தவர்களால் உடனடியாக ஐவர் காப்பாற்றப்பட்ட ஒருவர் நீரில் மூழ்கினார். காப்பாற்றப்பட்டவர்கள்யாழ்ப்பாணம்போதனாமருத்துவமனையில்சேர்க்கப்பட்டனர். அவர்களில் ஒன்றரை வயதுக் குழந்தை ஒன்றும், பெண் ஒருவரும் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறுகின்றனர்.

தீவிர தேடுதலின் பின்னர் நீரில் மூழ்கியவர் சடலமாக மீட்கப்பட்டார். நாவாந்துறையைச் சேர்ந்தஅ.குயின்சன் (வயது-25) என்றகுடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார். இவர் திருமணமாகி 21நாள்களே ஆகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-8,ரி1,106)

## முகத்திலடித்தாற் போல...

னார். வடக்கு மாகாண அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்படுவதாக, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கடந்த 20ஆம் திகதி பா.டெனீஸ்வரனுக்கு கடிதம் அனுப்பியிருந்தார். வடக்குமாகாணஆளுநர் குரே முன்னிலையில் புதிய அமைச்சரவை நேற்று முன்தினம் பதவியேற்றிருந்தது. அமைச்சராகஇருந்தபா.டெனீஸ்வரன்நீக்கப்பட்டிருந்தார்.

இந்தநிலையில்நேற்றையதினம்அமைச்சுப்பதவிமுத்திரையைப்பயன்படுத்திபா.டெனீஸ்வரன், முதலமைச்சர்சி.வி.விக்னேஸ்வரனுக்கும், ஆளுநர்குரேக்கும்கடிதம்அனுப்பியுள்ளார். முதலமைச்சருக்குஅனுப்பியகடிதத்தில், "என்னைப் பதவி நீக்குவதற்கு உங்களுக்கு எந்த அதிகாரமும் இல்லை. நான் இப்போதும் அமைச்சராகத் தொடர்கின்றேன். எனது அமைச்சுப்பதவியில்தலையீடுசெய்யவேண்டாம் என்று உங்களைக் கேட்டுக் கொள்கின்றேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆளுநருக்கு அனுப்பிய கடிதத்தில், "நேற்று முன்தினம் அனுப்பிய கடிதத்துக்குப் பதில் கிடைக்கப் பெறவில்லை. வடக்கு மாகாண அமைச்சரவையில் வெற்றிடம் ஏற்படவில்லை. நான் இப்போதும் எனக்குரிய அமைச்சுப் பொறுப்புக்களில் தொடர்கின்றேன்" என்று சுட்டிக்காட்டியுள்ளார். (வ-5)

## உள்ளூராட்சி...

வது தொடர்பில், ஆளும் கட்சிக்கும் மகிந்த அணிக்கும் இடையே நாடாளுமன்றில் நேற்றுப் பெரும் வாய்த்தர்க்கம் இடம் பெற்றது. இறுதியில்சட்டவரைவுஇன்றையதினம்வாக்கெடுப்புக்கு விடப்படும் என்று சபாநாயகரால் அறிவிக்கப்பட்டது.

உள்ளூராட்சி அதிகார திருத்தச் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் நேற்று விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்தச்சட்டவரைவு மீது இன்று (நேற்று) விவாதம் நடத்தப்பட்டு, எதிர்வரும் 6ஆம்திகதிசட்டவரைவுமீது வாக்கெடுப்புநடத்தப்படும் என்று சபையில் சபாநாயகர் அறிவித்தார்.

மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ்குணவர்த்தனஒழுங்குப்பிரச்சினை எழுப்பினார். "சட்டவரைவு தொடர்பில் 50 திருத்தங்கள் அரசால் முன்வைக்கப்பட்டுள்ளன. அரசமைப்புக்கும், நாடாளுமன்றநிலையியல் கட்டளைக்கும் உள்பட்டவையா? என்பது தொடர்பில் பரிசீலிக்க வேண்டும். அதற்கு எமக்குக் கால அவகாசம் தேவை. விவாதம் இன்னுமொரு நாள் நீடிக்கப்பட வேண்டும்" என்று அவர் கேட்டுக்கொண்டார்.

"சட்டவரைவின் திருத்தங்கள் தொடர்பில் 27 தடவைகள்பேசப்பட்டுள்ளன. தேர்தல்தேவை என்றுநீதிமன்றைநாடியமகிந்த அணியினர் சட்டவரைவை தாமதம் செய்து தேர்தலை பிற்போட முயற்சிக்கின்றனர்" என்று சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

தினேஸ் குணவர்த்தன இதனை ஏற்றுக் கொள்ள மறுத்தார். "தேர்தல்கள் ஆணைக்குழுவின் பரிந்துரையுடன் கொண்டுவரப்படும் சட்டவரைவுக்குநாம்ஆதரவளிக்கத்தயாராக இருக்கின்றோம். ஆனால்அரசுதிருத்தங்களுடன்சமர்ப்பித்துள்ளமையால்அதனைஆராய்வதற்குஎமக்குக்காலம்தேவை" என்றுவிடாப்பிடியாக நின்றார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுர குமாரதிசாநாயக்க, "சட்டவரைவைசெப்ரெம்பர் 15ஆம் திகதிக்கு முன்னர் நிறைவேற்றிக் கொடுத்தால், ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு முன்னதாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்திருக்கின்றார். சட்டவரைவு இன்றும் (நேற்று) நாளையும் (இன்று) விவாதிக்கப்பட்டுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். திருத்தங்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இங்கு வந்துள்ள அதிகாரிகளிடம் கேட்டுத் தெளிவுபடுத்தல்களைப் பெற்றுக் கொள்ளலாம். காலம்தாழ்த்துவதுதேர்தலைப்பிற்போடுவதாகவே அமையும்" என்றார்.

இதன் பின்னரும் மகிந்த அணியினர் காலம் தேவை என்றும் தாம் தேர்தலைப் பிற்போட விரும்பவில்லை என்றும் குறிப்பிட்டனர்.

சபை முதல்வர் லக்ஸ்மன் கிரியெல்ல, "அரசு தேர்தலுக்கு எந்த நேரமும் தயார். கடந்த ஆட்சியின்போதுஎல்லைநிர்ணயம்அமைச்சரின் வீட்டில்நடந்தது. இப்போது எல்லாக்கட்சிகளுடனும்பேசியேதிருத்தம் நடந்தது" என்றார்.

விவாதம் நீண்டு செல்வதை அனுமதிக்காத சபாநாயகர் கருஜயசூரிய, "சட்டவரைவு மீதான விவாதம் 6ஆம் திகதியும் மீண்டும் தொடரும் என்றும் ஏனைய விடயங்களை கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பேசி முடிவு செய்து கொள்ள முடியும்" என அறிவித்து சர்ச்சைக்கு முற்றுப் புள்ளி வைத்தார்.

இதன் பின்னர் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் சட்டவரைவு மீது இன்று வாக்கெடுப்புநடத்தத்தீர்மானிக்கப்பட்டது. (வ-5,31)

## ஊவாவில்...

மாகாண சபை யில் 20ஆவது திருத்தச் சட்டவரைவு நேற்றுத் தோற்கடிக்கப் பட்டது.

மாகாண சபைகளைக் கலைக் கும் அதிகாரத்தைநாடாளுமன்றுக்குவழங்கும்வகையிலும், மாகாண சபைத் தேர்தல்களை ஒரே நாளில்நடத்தும்வகையிலும்ஏற்பாடுசெய்யும் 20ஆவது திருத்தச் சட்டவரைவு, மாகாண சபைகளின் கருத்துக்களைக் கேட்டறிவதற்காக அனுப்பி வைக்கப்பட்டது.

வடமத்திய மாகாண சபை சட்டவரைவுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. ஊவா மாகாண சபையில்சட்டவரைவுநேற்று விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சட்டவரைவுக்கு ஆதரவாக 5 வாக்குகளும், எதிராக 12 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன. ஊவா மாகாண சபையின் ஆட்சி அதிகாரம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வசமே உள்ளது.

இதேவேளை, வடக்கு மாகாண சபைக்கு 20ஆவது திருத்தச் சட்டவரைவு அனுப்பி வைக்கப்படாத போதிலும், சட்டவரைவுக்கு மாகாணசபைஆதரவுவழங்காதுஎன்றுமுதலமைச்சர்சி.வி.விக்னேஸ்வரனும், அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானமும் தெரிவித்தனர்.

மாகாணசபைகளின்அதிகாரத்தில்கொழும்பு அரசு தலையீடு செய்யும் வகையில் சட்டவரைவு காணப்படுகின்றது. எனவே இதனை ஆதரிக்க முடியாது என்று முதலமைச்சர் சுட்டிக்காட்டினார்.

20ஆவது திருத்தச் சட்டவரைவு விரைவில் மாகாணசபைக்குகிடைக்கப்பெறும்என்றும் அதனை எதிர்வரும் 4ஆம் திகதி அமர்வில் எடுத்துக்கொள்வதுஎன்றும்வடக்குமாகாண சபை தீர்மானித்துள்ளது. (வ-5,8)

## எல்லை...

பில் தீர்மானிக்கவில்லை"

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்றஉறுப்பினர்கள்நேற்றுச்சுட்டிக்காட்டினர்.

உள்ளூராட்சி மன்ற திருத்தச் சட்டவரைவு மீதான விவாதம் நாடாளுமன்றில் நேற்று நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணத்தேர்தல்மாவட்டநாடாளுமன்றஉறுப்பினர் சி.சிறிதரன், "நாட்டில் 51 சதவீதம் பெண்கள் 49 சதவீதம் ஆண்கள் என்ற அடிப்படையில்மக்கள்தொகைஉள்ளது. பெண்களுக்கு தற்போதைய திருத்தச்சட்டத்தில் 25 சதவீதம் வழங்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் 50 க்கு 50சதவீதபெண்பிரதிநிதித்துவத்தைஎதிர்பார்க்கின்றோம்.

எல்லை நிர்ணயத்தில் கிழக்கு மாகாணத்தில் பல்வேறு அநீதிகள் இழைக்கப்பட்டுள்ளன. போர் காரணமாக தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து வாழ்கின்றனர். கணக்கெடுப்பின் போதுஇதனைக்கவனத்தில்எடுக்குமாறுஅரச தலைவர் மைத்திரிபால மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா ஆகியோரிடம்எடுத்துரைத்தோம். ஆனால் அது கவனத்திற் கொள்ளப்படவில்லை" என்றார்.

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன், "வெளிநாடுகளில் உள்ள 14 லட்சம் தமிழ் மக்கள் கணக்கில் எடுக்கப்படாமல் எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப்பட்டது. தமிழ்பிரதிநித்துவம்வெகுவாகவீழ்ச்சியடையும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

தொகுதிகளுக்கான எல்லை நிர்ணயம், மக்கள் தொகை இனப்பரம்பல், இடப்பரம்பல் என்பனவற்றை அடிப்படையாக வைத்தே மேற்கொள்ளப்பட வேண்டும். ஆனால் தற்போது அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை என்று சுட்டிக்காட்டினார். (வ-5,31)

## ஊத்தை பவான்....

ஊத்தை பவான் மட்டுமல்ல தூள் பவானும் புளொட்டில் இருந்தனர். மூன்றாவதாக வளர்ந்த பவான் என்பவரும் புளொட்டில் இருந்தார். புளொட்டில்இருந்தபோதுஅவரவர் செய்த வேலைகளுக்கும் குணங்களுக்கும் ஏற்பபட்டப் பெயர்கள் ஏற்பட்டன.

இவ்வாறுதெரிவித்தனர்புளொட்அமைப்பின் உறுப்பினர்கள்.

பத்திரிகையாளர் சிவராமின் கொலையுடன் தொடர்புபட்டவர் புளொட் அமைப்பில் இருந்த ஊத்தை பவானே என்றும் மாகாண சபை உறுப்பினராக இருக்கும் பவான் எனப்படும் க.சிவநேசன் அல்லர் என்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் விளக்கமளித்திருந்தார்.

அந்த விளக்கத்தைக் கேட்ட புளொட் அமைப்பின் உறுப்பினர்களே இந்த விவரங்களைஉதயன்பத்திரிகையிடம்தெரிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

புளொட்டில் மூன்று பவான்கள் இருந்தனர். ஒருவர் ஊத்தை பவான். அவர், குளிப்பதில்லை. அதனால் அவரை ஊத்தை பவான் என்று கிண்டலாகக் கூப்பிடுவார்கள். அவர் இப்போது உயிரோடு இல்லை. கொன்றுவிட்டார்கள். அமைப்பைச் சேர்ந்தவர்களேதான்அவரைக்கொன்றார்கள் என்றொரு கதை இன்று வரைக்கும் இருக்கிறது. மற்றொருவர் வளர்ந்த பவான். அவர் புலிகள் இயக்கத்தின் புலனாய்வு உறுப்பினராக இருந்தபோதும் எமது அமைப்பில் செயற்பட்டவர்.

இப்போதுவடக்குமாகாணவிவசாயஅமைச்சராகநியமிக்கப்பட்டிருக்கின்றக.சிவநேசனுக்கும் புளொட்டிற்குள் பவான் என்றே பெயர். அவ ரைத் தூள் பவான் என்று கூப்பிடுவர். அவரது நேரடிக் கட்டுப்பாட்டிலும் கண்காணிப்பிலும் தான் ஊத்தை பவான் உட்படப் பல செயற்பாட்டாளர்கள் போர்க் காலத்தில் இருந்தனர்.

தலைமைகள், பொறுப்புத் தளபதிகளுக்குத் தெரியாமல், அவர்களின்அனுமதி இல்லாமல் தான்ஊத்தைபவான்ஊடகவியலாளர்தராக்கி சிவராமைக் கொலை செய்தார்கள் என்று சொன்னால் ஊர் நம்பலாம் நாங்களுமா நம்பவேண்டும்?" என்று கேட்டார் அந்த உறுப்பினர்.

ஊடகவியலாளர் சிவர்ாம் கொலையுடன் தொடர்புடையவர்என்பதால்க.சிவநேசனுக்கு (பவான்) அமைச்சுப் பதவி வழங்க முடியாது என்று முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முன்னர் அவருக்குக் கடிதம் அனுப்பியிருந்தார். அதன்பின்னர்அதுதொடர்பில்சிவநேசன் முதலமைச்சருக்கு விளக்கமளித்தார் என்று கூறப்படுகிறது.

அதன் பின்னர் சிவநேசன் முதலமைச்சரின் பரிந்துரைக்கு அமைவாக நேற்றுமுன்தினம் வடமாகாண விவசாய அமைச்சுப் பதவியை ஏற்றார். அமைச்சுப்பதவியேற்றபின்ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த முதலமைச்சர், "சிவராம் கொலையுடன் சிவநேசனுக்கு (பவான்) தொடர்பில்லை, அது ஊத்தை பவான். வேறொருவர்" என்று குறிப்பிட்டிருந்தார். (உ-5)

## இராணுவச்...

அவர்களில ஒருவரின் நிலை கடுமையாக உள்ளதால் அவரை கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குமாற்றநடவடிக்கைஎடுக்கப்படுவதாக கிளிநொச்சி வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

இந்த வாள்வெட்டுச் சம்பவம் ஊற்றுப்புலம் பகுதியில் இடம்பெற்றதாக விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது. இரு கும்பல்களுக்கு இடையே இடம்பெற்ற வாள்வெட்டுச்சம்பவத்திலேயே இராணுவத்தினர் இருவரும் படுகாயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார்மேற்கொண்டுவருகின்றனர். (வ-35)

## அரசியல்...

அநுராதபுரம்சிறைச்சாலையில்கடந்தஞாயிற்றுக் கிழமையிலிருந்து உணவு ஒறுப்புப் போராட்டத்தைமுன்னெடுத்துவருகின்றனர். இவர்களது உடல் நிலை மோசமடைந்தது. திருவருள் மற்றும் சுலக்ஸன் இருவரும் அநுராதபுரம் சிறைச்சாலை மருத்துவமனையில் நேற்றுக் காலை சேர்க்கப்பட்டனர். தர்சன், தூக்குத் தண்டனைக் கைதிகளுடன் தங்க வைக்கப்பட்டுள்ளார். அவரும் உணவு ஒறுப்புப் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றார். (வ-5)

## இளைஞனின்...

டப்பட்டுசம்பவஇடத்திலேயேஅவர்உயிரிழந்தார்என்றுதெரிவிக்கப்பட்டது. உயிரிழந்தவர் அடையாளம் காணப்படவில்லை.

அந்தப்பகுதியில்கடவை இருந்தபோதும், கடவையற்ற பகுதியால் தண்டவாளத்தைக் கடக்கமுயன்றபோதுவிபத்துஏற்பட்டதுஎன்று சம்பவஇடத்தில்இருந்தவர்கள்தெரிவித்தனர். விபத்துத்தொடர்பில்பொலிஸார்விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-35,ரி1,8)

# வென்றது பிரண்ட்ஸ்

யாழ்ப்பாணம், ஓக. 25
வவுனியா பிரண்ட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 9ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குறித்த கழகத்தால் நடத்தப்படும் துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் வவுனியா பிரண்ட்ஸ் அணி அபார வெற்றி பெற்றது.

வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பிரண்ட்ஸ் விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து ஈகிள்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய பிரண்ட்ஸ் விளையாட்டுக் கழக அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 227 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக ஹமில்ரன் றோய் 65 ஓட்டங்களையும், சத்தியமூர்த்தி 57 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஞானசீலன், சதீஸ்குமார் இருவரும் தலா 4 இலக்குகளை வீழ்த்தினர்.

228 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத் தாடிய ஈகிள்ஸ் அணி 100 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து 127 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது. (ம-23)



# சம்பியனானது சென். தோமஸ்

யாழ்ப்பாணம், ஓக. 25
கொட்டி துள்ளுமீன் விளையாட்டு கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கடற்கரை கபடித் தொடரில் சென். தோமஸ் விளையாட்டுக் கழக அணி சம்பியனானது.

கொட்டி கடற்கரையில் அண்மையில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் துள்ளுமீன் விளையாட்டு கழக அணியை எதிர்த்து சென். தோமஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் சென். தோமஸ் விளையாட்டுக் கழக அணி 46:36 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில்பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மன்னார் எவர்கிறின் விளையாட்டுக் கழக 'ஏ' அணி மோதியது. இதில் மன்னார் எவர்கிறின் விளையாட்டுக் கழக 'ஏ' அணி 41:40 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தைத் தனதாக்கிக் கொண்டது. (ம-23)

# கே.ஸி.ஸி.ஸி. அணி அசத்தலான வெற்றி

யாழ்ப்பாணம், ஓக. 25
யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தி வரும் மகாலிங்கம் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரில் அண்மையில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் கே.ஸி.ஸி.ஸி. அணி வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஸ்கந்தாஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. முதலில் துடுப் பெடுத்தாடிய ஸ்கந்தா ஸ்ரார் அணி 19.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 95 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சோபிகன் 35 ஓட்டங்களையும், குருசோத்தமன் 15 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் விஜிதரன் 3 இலக்குகளையும், பிரதீசன், ஜெயறூபன், சாம்பவன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

96 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கே. ஸி.ஸி.ஸி. அணி 19.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. ஜெயறூபன் 19 ஓட்டங்களையும், ஜனுதாஸ் 15 ஓட்டங்களையும், பிரதீசன் 15 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சிந்துயன் 4 இலக்குகளை வீழ்த்தினார். (ம-23)

# பூப்பந்தாட்டத் தொடர்

யாழ்ப்பாணம், ஓக. 25
உலகத் தமிழர் பூப்பந்தாட்டப் பேரவையின் அனுசரனையுடன் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சும் வடக்கு மாகாண பூப்பந்தாட்ட சங்கமும் இணைந்து நடத்தத் திட்டமிட்ட பூப்பந்தாட்டத் தொடரின் ஆரம்ப நிகழ்வுகள் மன்னார் உள்ளக விளையாட்டரங்கில் இன்று காலை இடம்பெறவுள்ளன.

இன்றைய ஆரம்ப நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி சர்வேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக உலகத் தமிழர் பூப்பந்தாட்டப் பேரவையின் தலைவர் கே.சிங்கம், மற்றும் உலக தமிழர் பூப்பந்தாட்ட பேரவையின் கனடா நாட்டின் ஒருங்கமைப்பாளர்களான ஜெயக்காந்தன், வாகீசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இன்று ஆரம்பமாகும் ஆட்டங்கள் எதிர்வரும் ஞாயிறுக்கிழமை வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-23)

# கனகபுரம் வி.க. கால்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 25
கிளிநொச்சி கனகபுரம் விளையாட்டுக் கழகம் நடத்தத் திட்டமிட்ட நடப்பு வருடத்துக்கான கால்பந்தாட்டத் தொடர் நாளை ஆரம்பமாகிறது.

குறித்த கழக மைதானத்தில் நாளை, நாளைமறுதினம், எதிர்வரும் முதலாம், 2ஆம், 3ஆம் திகதிகளில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெறுகின்றன.

இந்தத் தொடரில் கிளிநொச்சி மாவட்ட அணிகளும் வவுனியா, மன்னார், திருகோணமலை, யாழ்ப்பாணம், மற்றும் முல்லைத்தீவு மாவடங்களில் இருந்து அழைக்கப்பட்ட கழகங்களும் பங்குபற்றவுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-6)

## போட்டி நிரல் தயாரிக்கும் நிகழ்வு

யாழ்., ஓக. 25
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்தத் திட்டமிட்ட கால்பந்தாட்ட தொடருக்கான போட்டி நிரல் தயாரிக்கும் நிகழ்வு எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ளது. ஆட்டங்கள் அனைத்தும் அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (ம-23)

## ரட்வன்ஸ்கா காலிறுதியில்



யாழ்ப்பாணம், ஓக. 25
கனெக்டிகட் ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் அக்னிஸ்கா ரட்வன்ஸ்கா காலிறுதிக்குத் தகுதி பெற்றார்.

கனெக்டிகட் ரென்னிஸ் தொடர் அமெரிக்காவில் உள்ள நியூஹெவன் நகரில் நடந்து வருகிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்குத் தகுதி பெறும் ஆட்டத்தில் ரட்வன்ஸ்காவை எதிர்த்து பவுச்சர்ட் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் இரண்டு செற்களையும் முறையே 6:3, 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றார். (ம)

# உருத்திரபுரம் வி.கழக கால்பந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், ஓக. 25
உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தின் 65ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட கரைச்சி கால்பந்தாட்ட லீக்குக்கு உட்பட்ட அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு.


நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் உழவர் ஒன்றியம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குறிஞ்சி விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் உழவர் ஒன்றியம் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இரவு 8 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் உதயதாரகை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சுடரொளி விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணியினரும் தலா 5 கோல்களைப் பதிவுசெய்தமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

தொடர்ந்து இரவு 9 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் வட்டக்கச்சிலக்கிஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜெயந்திநகர் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் வட்டக்கச்சி லக்கி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)



*பாடசாலை விளையாட்டு அபிவிருத்தி தேசிய வேலைத்திட்டத்தின் வலய இணைப்பாளர்களுக்கான வதிவிடப் பயிற்சி முகாம் வவுனியா கல்வியற் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது. கொழும்பிலிருந்து வருகைதந்த வளவாளர்கள் பயிற்சியை வழங்கினர்.* (ம-108)




# டி வில்லியர்ஸ் பதவி விலகல்

தென்னாபிரிக்க ஒருநாள் அணியின் தலைமைப் பதவியில் இருந்து விலகும் முடிவை அறிவித்தார் வில்லியர்ஸ். எனினும் ஒரு வீரராக ரி-20, ஒருநாள், டெஸ்ட் ஆட்டங்கள் என்று மூன்று வகை ஆட்டங்களிலும் களமிறங்கும் நம்பிக்கையையும் அவர் வெளிப்படுத்தினார்.

வில்லியர்ஸிடம் இருந்து நேற்று ஒரு பெரிய அறிவிப்பு வரும் என்று தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தது. பெரும்பாலும் அவர் ஓய்வுபெறவுள்ளார் என்றே பரவலாகப் பேசப்பட்டது. ஆனால் இரு வேறு முடிவுகளை வில்லியர்ஸ் அறிவித்தார்.

**பதவி விலகல்**

தென்னாபிரிக்க ஒருநாள் அணியின் தலைமைப் பதவி வில்லியர்ஸிடம் இருந்தது. அந்தப் பதவியில் இனித் தொடரப் போவதில்லை என்று வில்லியர்ஸ் குறிப்பிட்டார். 'ரி20, டெஸ்ட் ஆட்டங்களில் தலைவராக பிளாசிஸ் மிகச் சிறப்பாக செயற்படுகிறார். ஒருநாள் ஆட்டங்களின் தலைமைத்துவத்தில் இருந்தும் நான் விலகுகிறேன். அந்தப் பதவிக்குத் தெரிவாகுருக்கு எனது முழு ஒத்துழைப்புக் கிடைக்கும்' என வில்லியர்ஸ் குறிப்பிட்டார்.

**டெஸ்ட் ஆட்டங்களில் மீண்டும் களமிறங்குகிறார்**

கடந்த பல டெஸ்ட் தொடர்களில் தனது சுய விருப்பத்தின் அடிப்படையில் விலகியிருந்தார் வில்லியர்ஸ். பிளாசிஸின் தலைமையில் விளையாட வில்லியர்ஸ் விரும்பவில்லை. டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து அவர் ஓய்வு பெறவுள்ளார் என்றெல்லாம் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் மீண்டும் டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடும் முடிவை அவர் அறிவித்தார்.

“எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில் இருந்து டெஸ்ட், ரி20, ஒருநாள் என மூன்று வகை ஆட்டங்களிலும் விளையாட ஆவலுடன் காத்திருக்கிறேன். தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையின் நலன்களை விடவும் எனக்கு எனது தனிப்பட்ட ஓய்வு முக்கியம் அல்ல. சுமார் ஒரு வருட காலம் ஓய்வில் இருந்துள்ளேன். இந்த ஓய்வு என்னைப் புதுப்பித்துள்ளது. இதே உற்சாகத்துடன் தொடர்ந்து களிறங்குவேன். அணிக்கு 100 வீதம் பங்களிப்பு வழங்குவேன். இந்த உத்தரவாதத்தை கடந்த 2004ஆம் ஆண்டு வழங்கினேன். தற்பாதும் அதையே குறிப்பிடுகிறேன்' என வில்லியர்ஸ் மேலும் தெரிவித்தார். (ம)




# உலக பதினொருவர் அணியின் தலைவராக பிளாசிஸ்

பாகிஸ்தானில் அடுத்த மாதம் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் உலக பதினொருவர் அணியின் தலைவராக, தென்னாபிரிக்க அணியின் ஹசிம் அம்லா அல்லது பிளாசிஸ் நியமிக்கப்பட வாய்ப்புள்ளது என்று தசிஸ்வல் வந்துள்ளது.


பாகிஸ்தானுக்குச் சென்று விளையாட கிரிக்கெட் சபைகள் பின்னடித்து வரும் நிலையில், அனைத்து அணிகளில் இருந்தும் பாகிஸ்தானில் வந்து விளையாட விரும்பும் வீரர்களை ஒன்றிணைத்து ஆட்டத்தை நடத்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை திட்ட மிட்டது. இதன்படி பாகிஸ்தான் அணிக்கும் உலகப்பதினொருவர் அணிக்கும் இடையில் இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது.

உலகப் பதினொருவர் அணியில் விளையாட இங்கிலாந்து, நியூசிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள், இலங்கை, பங்களாதேஷ், ஆப்பானிஸ்தான், சிம்பாப்வே மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய அணிகளைச் சேர்ந்த சில வீரர்கள் சம்மதித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தென்னாபிரிக்க அணியின் வீரர்களான அம்லா மற்றும் பிளாசிஸ் இருவரும் உலகப் பதினொருவர் அணிக்காக விளையாடவுள்ளனர் என்று தகவல் வந்துள்ள நிலையில், அவர்களில் ஒருவர் அந்த அணிக்குத் தலைமை தாங்கவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகப் பதினொருவருடன் ஓர் ஆட்டத்தில் விளையாடினால் ஏனைய அணிகள் தமது மண்ணுக்கு வந்து விளையாடும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கணித்திருந்தது. இந்தக் க்ணிப்பு பொய்த்துப் போகவில்லை. உலகப் பதினொருவர் அணிக்கும், பாகிஸ்தான் அணிக்கும் இடையிலான ஆட்டம் முடிந்த பின்னர் இலங்கை அணி பாகிஸ்தானுக்குச் சென்று ஒரு ரி-20 ஆட்டத்தில் விளையாடவுள்ளது. அதன் பின்னர் மேற்கிந்தியத் தீவுகள் அணியும் பாகிஸ்தானுக்குச் சென்று 3 ஆட்டங்கள் கொண்ட ரி-20 தொடரில்விளையாடவுள்ளது. எனவே, அடுத்த சில மாதங்கள், பாகிஸ்தான் கிரிக்கெட் வரலாற்றில், முக்கியமான காலப்பகுதிகளாக மாறவுள்ளன. (ம)

# ரொனால்டோவுக்கு தடை உறுதியானது

ரியல் மட்ரிட் அணியின் நட்சத்திர வீரரான கிறிஸ்ரியானோ ரொனால்டோவுக்கு விதிக்கப்பட்ட ஐந்து ஆட்டங்களுக்கான தடை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பார்சிலோனா அணிக்கு எதிராக அண்மையில் நடைபெற்ற 'ஸ்பானிஸ் சுப்பர் கப்' இறுதியாட்டத்தில் நடுவரைத் தள்ளிவிட்ட குற்றத்துக்காக ரொனால்டோவுக்கு சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டது. அதன் பின்னர் அவர் நடுவருடன் மோதல் போக்கிலும் ஈடுபட்டார். இந்தக் குற்றச்சாட்டுக்களுக்காகவே அவருக்கு 5 ஆட்டங்களில் விளையாடத் தடை விதிக்கப்பட்டது. இந்த முடிவை எதிர்த்து ரியல் மட்ரிட் அணி மேன்முறையீடு செய்தது. அதை ஆய்வு செய்த ஐரோப்பிய கால்பந்தாட்டச் சம்மேளனம் தடையை உறுதிசெய்து தீர்ப்பிட்டது. இதனால் ரியல் மட்ரிட் அணி அடுத்ததாகக் களமிறங்கும் ஐந்து ஆட்டங்களில் ரொனால்டோ களமிறங்கமாட்டார். (ம)



# இரண்டு சுழல் பந்துவீச்சாளர்கள்; ஆஸி. வியூகம்

பங்களாதேஷ், ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையில், எதிர்வரும் 27ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள டெஸ்ட் தொடரில், 2 சுழற்பந்து வீச்சாளர்களுடன் ஆஸ்திரேலிய அணி களமிறங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆஸ்திரேலிய அணி பங்களாதேஷுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையில் இரண்டு டெஸ்ட் ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 27ஆம் திகதி இந்தத் தொடர் ஆரம்பமாகிறது. இந்தத் தொடரில் இரண்டு சுழல் பந்துவீச்சாளர்களுடன் ஆஸ்திரேலிய அணி களமிறங்கத் திட்டமிட்டுள்ளது. இந்தத் தகவலை அந்த அணியின் தலைமைப் பயிற்சியாளர் லீமன் குறிப்பிட்டார். நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே லீமன் இவ்வாறு தெரிவித்தார்.



“பங்களாதேஷ் அணியில் சிறந்த துடுப்பாட்ட வீரர்கள் காணப்படுகின்றனர். தமது சொந்த நாட்டில், சிறப்பான பெறுபேறுகளை அவர்கள் கொண்டிருக்கின்றனர். இதனால் எமது பந்துவீச்சைப் பலப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. ஆசிய ஆடுகளங்களில் பந்துவீச்சு வரிசையை சுழல்பந்து வீச்சாளர்களை வைத்தே பலப்படுத்த இயலும். அணியின் முக்கிய சுழல்பந்து வீச்சாளராக லையன் காணப்படுகிறார். அஸ்டன் ஏகர், இன்னொரு சுழற்பந்து வீச்சாளராகக் காணப்படுகிறார். அதேபோல், இளம் வீரரான மிற்சல் ஸ்வெப்ஸனும் சுழல்பந்து வீச்சாளர். ஏகருக்கும் ஸ்வெப்ஸனுக்கு இடையிலேயே போட்டி காணப்படுகிறது. ஆனால், அஸ்டன் ஏகரின் சிறப்பான துடுப்பாட்டம், களத்தடுப்பு ஆகியன, ஏகருக்கு முன்னிலையை வழங்குகிறது” என லீமன் மேலும் தெரிவித்தார்.


லீமனின் இந்தக் கருத்து ஆஸ்திரேலிய அணி இரண்டு சுழல்பந்து வீச்சாளர்களுடன் களமிறங்கக்கூடிய சாத்தியக்கூறு உள்ளது என்பதைக் குறிக்கிறது. ஆசிய ஆடுகளங்களில் ஆசிய அணிகள் இரண்டு சுழல்பந்து வீச்சாளர்கள் மூலம் டெஸ்ட் ஆட்டங்களை எதிர்கொள்வது அனைவரும் அறிந்த விடயம். தற்போது ஆஸ்திரேலியாவும் இந்த நிலைப்பாட்டை எடுத்துள்ளது. (ம)


# விமர்சனங்களுக்குப் பதிலடி கொடுத்தார் எம்.எஸ்.டோனி

## இந்தியா திரில் வெற்றி

இலங்கை அணிக்கு எதிராக நேற்று நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில், டோனியின் நிதான ஆட்டத்தால் மிகப்பெரும் சரிவில் இருந்து மீண்டு வெற்றிபெற்றது இந்திய அணி. தனது ஆட்டத்தின் மூலம் தன் மீது முன்வைக்கப்பட்ட விமர்சனங்களுக்கு டோனி முற்றுப்புள்ளி வைத்தார்.

பல்லேகல மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி, முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இலங்கை அணியின் ஆரம்பவீரர்களாக டிக்வெல்ல மற்றும் குணதிலக. தனது இயல்பான ஆட்டத்தை டிக்வெல்ல வெளிப்படுத்தினார். அவரின் அதிரடியால் இலங்கை அணி சிறந்த ஆரம்பம் கண்டது. அணி 41 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 31 ஓட்டங்களுடன் டிக்வெல்ல ஆட்டமிழந்தார். குணதிலக 19 ஓட்டங்களுடனும், குசல் மெண்டிஸ் 19 ஓட்டங்களுடனும் சாகலின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர். தரங்கவை வெறும் 9 ஓட்டங்களுடன் வெளியேற்றினார் பாண்டியா. சிறிவர்த்தன, கப்புக்கெதர இருவரும் மத்திய வரிசையில் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினர். சிறிவர்த்தன அரைச்சதம் கடந்து 58 ஓட்டங்களைக் குவித்தார். கப்புக்கெதர 40 ஓட்டங்களைச் சேர்த்தார். முடிவில் 8 இலக்குகளை இழந்து 236 ஓட்டங்களைப் பெற்றது இலங்கை அணி. பந்துவீச்சில் பும்ரா 4 இலக்குகளையும், சாகல் 2 இலக்குகளையும், பாண்டியா, பட்டேல் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.





பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி ரோகித், தவான் கூட்டணியால் மிகச் சிறந்த தொடக்கம் கண்டது. இலங்கைக்கு எதிராக கடைசிப் பத்து இன்னிங்ஸ்களில் பெரியளவில் ஓட்டங்களைக் குவித்திருக்காத ரோகித் நேற்று அற்புதமாக விளையாடி அரைச்சதம்கடந்தார். தவான் தனது திறனைத் தொடர்ந்தும் தக்கவைத்தார். இலக்குச் சரிவில்லாமல் 100 ஓட்டங்களைத் தொட்டது இந்திய அணி. அணி 109 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 54 ஓட்டங்களுடன் ரோகித் சர்மா ஆட்டமிழந்தார். ஒரு ஓட்டத்தால் அரைச்சதத்தைத் தவறவிட்டார் தவான். ராகுல், கேதர் யாதவ், கோக்லி மூவரையும் போல்ட் முறையில் வெளியேற்றினார் சுழல் வீரர் அகிலதனஞ்சய. பாண்டியா ஓட்டமெதனையும் பெறாமலும், அக்சர் பட்டேல் 6 ஓட்டங்களுடனும் தனஞ்சயவால் பவிலியனுக்கு அனுப்பப்பட்டனர். 131 ஓட்டங்களுக்கு 7 இலக்குகளை இழந்து திணறியது இந்தியா.

**டோனியின் ஆட்டம் ஆரம்பம்**

இந்திய அணி மிகப்பெரும் தடுமாற்றத்தைச் சந்தித்திருந்த போது டோனியுடன் இணைந்தார் புவனேஸ்வர் குமார். பதற்றத்தைச் சமாளிப்பதற்காக இருவரும் முதலில் நிதானித்தனர். பின்னர் படிப்படியாக இணைப்பாட்டம் நீண்டுசெல்ல ஆரம்பித்தது. காற்றில் அலையாடிய இலங்கைக் கொடிகள் மூடிக்கட்டி வைக்கப்பட்டன. அரைச்சதம் கடந்தார் புவனேஸ்வர் குமார். இணைப்பாட்டம் 100 ஓட்டங்களைத் தொட்டது. பிறிதொரு இலக்கை இழக்காமல் வெற்றி பெற்றது இந்தியா. தானும் நிலைத்துநின்று ஓர் பந்துவீச்சாளருக்கு ஏகப்பட்ட அறிவுரைகளை வழங்கி அணியை வெற்றிக்கு அழைத்துச்செல்வதில் டோனிக்கு நிகர் டோனியே என்பதை அவர் மீண்டும் ஒருதடவை நிரூபித்துள்ளார். (ம)

# நெய்மர் மீது வழக்குப் பதிவு

பார்சிலோனா கழகத்தில் இருந்து சென்று பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணியில் நெய்மர் இணைந்துள்ள நிலையில், பார்சிலோனா கழகம் நெய்மர் மீது வழக்குத் தொடர்ந்துள்ளது. திடீர் விலகலுக்கு இழப்பீடு கேட்டே அந்தக் கழகம் வழக்குத் தொடர்ந்துள்ளது.

ஒப்பந்த விதிகளை நெய்மர் மீறினார் என்று குறிப்பிட்டுள்ள பார்சிலோனா, 8.5 மில்லியன் யூரோக்களை அவர் செலுத்த வேண்டுமெனவும், கோரியுள்ளது. பார்சிலோனா கழகத்திலிருந்து விலகுவதற்கு 9 மாதங்கள் முன்னதாக, பார்சிலோனாவில் 5 ஆண்டுகள் நீடிப்பதற்கான புதிய ஒப்பந்தத்தில் நெய்மர் கைச்சாத்திட்ட போது, அவருக்கு வழங்கப்பட்ட மேலதிகக் கொடுப்பனவுகளையும் திரும்ப வழங்க வேண்டுமென, பார்சிலோனா கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



# புது மாப்பிள்ளைக்கு நல்ல யோகமடா...



இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் இலங்கை அணி தோல்வியடைந்தாலும், இந்திய அணிக்கு பெரும் பீதியை ஏற்படுத்தியிருந்தார் அகிலதனஞ்சய. அவர் நேற்று முன்தினம்தான் திருமண பந்தத்தில் இணைந்தார். மனைவிவந்த நேரமோ என்னமோ அவரின் கிரிக்கெட் பயணம் கசப்பான தோல்விக்கு மத்தியிலும் இனிதாகவே ஆரம்பித்துள்ளது.

ஒரு கட்டத்தில் இலக்குச் சரிவில்லாமல் 108 ஓட்டங்களைப் பெற்றிருந்த இந்திய அணி, அடுத்தடுத்து இலக்குகளைப் பறிகொடுத்து 131 ஓட்டங்களுக்கு 7 இலக்குகள் என்று சரிவுகண்டது. இந்த ஏழு இலக்குகளில் 6 இலக்குகளை அகிலதனஞ்சய கைப்பற்றியிருந்தார். இந்திய அணி நேற்று இழந்த 7 இலக்குகளில் தவானைத் தவிர ஏனைய அனைத்து இலக்குகளும் அகில தனஞ்சயவால் கைப்பற்றப்பட்டவை. (ம)

SINHALA CLASSES
(காலை முதல் மாலை வரை)
BY: N.TENNEKOON
Grade 6 to O\L
Govt. Officers. A\L Students
Contact: 077 666 0400


பணியாளர் தேவை
யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில் இயங்கும் கணினி கல்வி நிலையத்தில் பணிபுரிவதற்கு அலுவலக உதவியாளர் தேவை. ஆண்\பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
077 971 3221

EASYWAYயின்
புதிய முறையிலான ஆங்கிலப்பயிற்சி
எமது வகுப்புகளில் வழங்கப்படும் 14 பாடப்புத்தகங்களையும், 90வீடியோக்களையும் கற்று அதிலுள்ள பயிற்சிகளை செய்துமுடித்தவர்கள் சரளமாக ஆங்கிலத்தில் பேசுவது எமது நேரடிவகுப்புகளில் ஏற்கனவே எம்மால் நிரூபிக்கப்பட்டுள்ளது.
இப் பயிற்சியில் தொழில்புரிவோர், பாடசாலை மாணவர்கள், வீட்டுப்பெண்கள், பல்கலை மாணவர்கள், இளைஞர் யுவதிகள் மற்றும் ஆங்கிலம் பேச விருப்புவோர் இணையமுடியும்.
27.08.2017 வரை இணைவோருக்கு பயிற்சிக்கட்டணம் ரூபா 2000 மட்டுமே பின்னர் 6500/-
தமிழ்விளக்கத்துடனுள்ள 14 புத்தகங்களையும், 90 வீடியோக்களையும் கற்று அதிலுள்ள பயிற்சிகளை செய்து 120 நாட்களுக்குள் எம்மிடம் ஒப்படைத்து பரீட்சைக்கு தோற்றமுடியும்.
எந்த மாவட்டத்திலுள்ளவர்களும் வங்கி மூலமாகவோ அல்லது தபாலகம் மூலமாகவோ பாடநெறிக்கட்டணத்தைச்செலுத்தி இணைந்து பயிற்சிபெற முடியும்.
EASYWAY 403, வெலிங்டன் சந்தி, யாழ்நகர். 077 621 4567 021 567 4133

V2 TRAVELS
வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு இலங்கை விசா நீடிப்பு
PASSPORT VISA
(VISA EXTENSION)
யாழ்ப்பாணத்திலேயே இப்பொழுது செய்து கொடுக்கப்படும்.
0768227499
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

## மகாசமாதி

### ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவசுவாமிகள்



கிளிநொச்சி, ஜெயந்திநகர், மகாதேவ ஆச்சிரம இரண்டாம் குருபீடாதிபதியான ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள் நேற்று (24.08.2017) வியாழக்கிழமை நண்பகல் மகாசமாதி அடைந்துள்ளார்.

சமாதிக்கிரியைகள் இன்று (25.08.2017) வெள்ளிக்கிழமை நடைபெறும்.

சைவப்பெரியோர்கள் யாபேரும் இவ்வைபத்தில் பங்குபற்றி குருநாதன் திருவருள் பெற்றுக் கொள்ளுங்கள்.

அன்பே சிவம்

024 3243 443

**மகாதேவ ஆச்சிரம நிர்வாகம்.**

விசேட இறுதிக் கருத்தரங்கு
Sep - 17ஆம் 23ஆம் 24ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள
SLAS (OPEN)
பிரதி சனி, ஞாயிறு தினங்களில் 9.00- 2.00pm
விரைவில் நடைபெறவுள்ள வடமாகாண ஆசிரியர் போட்டிப்பரீட்சை
பிரதி சனி, ஞாயிறு தினங்களில் 2.00 - 5.00
விரிவுரையாளர்
P.உமாசங்கர்
P.கமல்தாசன்
மற்றும் துறைசார் விரிவுரையாளர்
நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்நகர்
077 469 6695

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.